வெளியீடு 5-9-2003

Issued 5-9-2003

2003
சென்னை-600 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஜனவரி 30, 2003—தொகுதி 35—எண் 1**

**Thursday the 30th January, 2003 —Volume 35—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Assembly Secretariat, Chennai - 600 009**

V2n, 31'P03
D
P03. 35
225509

**[Price Rs. 3.00**

**30-1-2003**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்-** | 1-104 |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 4, 5 மற்றும் 6) | |
| **2. அறிவிப்பு--** | |
| தியாகிகள் தினத்தையொட்டி பேரவை அலுவல்கள் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல் | 105 |
| **3. தகவல் கோரல்-** | |
| (அ) சுயநிதிக் கல்லூரிகள் குறித்து | 105 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு | 109, 111 |
| **கவன ஈர்ப்பு-** | |
| சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் ஏரிகளில் கருவேல மரங்கள் நடும் பணி தொடங்கப்படாதது | 105-109 |
| **5. அறிக்கைகள் அளித்தல்-** | |
| (அ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 மீதான ஆய்வுக் குழு | 110 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு | 110 |

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)-** | |
| தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003 | 111 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 111 |
| **7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 112-197 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 112 |
| திரு. சி. ஞானசேகரன் | 113 |
| திரு. எச்.எம்.ராஜு | 114 |
| *திரு ப. அரசன் | 114 |
| திரு. கே.சி. கருணாகரன் | 115,116,160-161,181-196 |
| திரு. டி. மணி | 115 |
| செல்வி க. பாலபாரதி | 115 |
| திரு. என். நன்மாறன் | 116 |
| திரு. கே.வி. முரளிதரன் | 116-117 |
| திரு. ஜி. பழனிசாமி | 117 |
| திருமதி எஸ். மகேஸ்வரி | 117 |
| திரு. கு. ஜெயக்குமார் | 118 |
| *திரு. டி.என். சிவசுப்பிரமணியன் | 118 |
| திரு. லா. சந்தானம் | 118-128 |
| *திரு. பி.எம். நரசிம்மன் | 128-136 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 136-144,146, 149-151,154-156, 163-164,167-171 |
| திரு. கே.என். இலட்சுமணன் | 172-177,197 |





| | பக்கங்கள் |
|---|---|
| **8. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றம். | 153-154 |
| (ஆ) திரு. பரிதி இளம்வழுதியை வரவு—செலவு கூட்டத்தொடர் முடியும் வரை பேரவை நடவடிக்கையிலிருந்து நீக்கிவைத்தல். | 165-168 |
| (இ) திரு. பரிதி இளம்வழுதி மீது கிரிமினல் நடவடிக்கை எடுப்பது குறித்து. | 179-181 |
| **9. உரிமைப் பிரச்சினை—** | |
| திரு. பரிதி இளம்வழுதி மீது | 164 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 198-199 |


225509

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்-திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

| | |
|---|---|
| **5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இந்து சமய மற்றும் அறநிலையங்கள். |
| **6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| **7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன். |
| **8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் வக்ஃப்பு. |
| **9. வேளாண்மைத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு. |



| | |
|---|---|
| **10. சமூக நலத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம். |
| **11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலன். |
| **12. போக்குவரத்துத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள். |
| **13. மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல். |
| **14. வணிக வரித் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** வணிக வரிகள். |
| **15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:** கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல். |

16. **உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:**
*நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

17. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**
*கால்நடை பராமரிப்பு*

18. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:**
*குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.*

19. **வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு.ஆர். வைத்திலிங்கம்:**
*வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.*

20. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**
*வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

21. **பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**
*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*



22. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே. பால சுப்பிரமணியன்:**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.*

23. **கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**
*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

24. **மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**
*மீன்வளம்*

25. **சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS
## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO
## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | - | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| **2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | - | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| **3. Minister for Finance** | - | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **4. Minister for Law and Information Technology** | - | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | - | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

| | |
|---|---|
| **6. Minister for Health and Education** | – **The Hon. Thiru S. Semmalai:** Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| **7. Minister for Backward Classes** | – **The Hon. Thiru A. Papasundaram:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| **8. Minister for Labour** | – **The Hon. Thiru A. Anwer Rhazza:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **9. Minister for Agriculture** | – **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operative, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| **10. Minister for Social Welfare** | – **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correction Administration. |
| **11. Minister for Adi-Dravidar Welfare** | – **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | |
|---|---|
| **12. Minister for Transport** | – **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| **13. Minister for Electricity and Industries** | **The Hon. Thiru Nainar Nagenthran:** Electricity, Non-conventional energy development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| **14. Minister for Commercial Taxes** | – **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes. |
| **15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** | – **The Hon. Thiru P. Mohan:** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics. |
| **16. Minister for Local Administration** | – **The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| **17. Minister for Animal Husbandry** | – **The Hon. Thiru P.V. Damodhiran:** Animal Husbandry. |
| **18. Minister for Rural Industries** | – **The Hon. Thiru R. Vadivel:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |

| | | |
|---|---|---|
| **19. Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| **20. Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| **21. Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| **22. Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| **23. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| **24. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| **25. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள்*

*திரு. கே. பாண்டுரங்கன்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. லா. சந்தானம்*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

* *28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதின், எம்.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திராபாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |



## பேரவை உறுப்பினர்கள்

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | - செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந - உளுந்தூர்பேட்டை
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்



42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்

64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை



86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்

| | |
|---|---|
| 108. செம்மலை, திரு. செ. | - ஓமலூர் |
| 119. செல்லையா, திரு. வி.ஏ. | - மருங்காபுரி |
| 110. செல்வம், திரு. எஸ்.கே. | - வீரபாண்டி |
| 111. செல்வராஜ், திரு. ஏ.கே. | - மேட்டுப்பாளையம் |
| 112. செல்வி முருகேசன், திருமதி | - காங்கேயம் |
| 113. சேகரன், திரு. கே.என். | - திருவெறும்பூர் |
| 114. சேகர்பாபு, திரு. பி.கே. | - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 115. சோமசுந்தரம், திரு. வி. | - உத்திரமேரூர் |
| 116. ஞானசேகரன், திரு. சி. | - வேலூர் |
| 117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | - திருநாவலூர் |
| 118. தமிழரசன், திரு. செ.கு. | - நன்னிலம் (செ.வ.) |
| 119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | - மேல்மலையனூர் |
| 120. தம்பிதுரை, டாக்டர் மு. | - பர்கூர் |
| 121. தவமணி, திரு. க. | - திருவிடைமருதூர் |
| 122. தளவாய் சுந்தரம், திரு. ந. | - கன்னியாகுமரி |
| 123. தனபால், திரு. ப. | - சங்கரி (செ.வ.) |
| 124. தாமோதரன், திரு. எஸ். | - விருதுநகர் |
| 125. தாமோதரன், திரு.செ. | - கிணத்துக்கடவு |
| 126. தாமோதிரன், திரு. ப.வெ. | - பொங்கலூர் |
| 127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | - பேராவூரணி |
| 128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | - காஞ்சிபுரம் |
| 129. திருமாவளவன், திரு. இரா. | - மங்களூர் (செ.வ.) |



| | |
|---|---|
| 130. துரைமுருகன், திரு. | - காட்பாடி |
| 131. துரைராஜ், திரு. சி. | - சேடப்பட்டி |
| 132. தென்னரசு, திரு. கே.எஸ். | - ஈரோடு |
| 133. நடராஜன், திரு. அ. | - குத்தாலம் |
| 134. நடராஜன், திரு. எஸ். | - நாட்ராம்பள்ளி |
| 135. நடராஜன், திரு. பி.கே.டி. | - ஆத்தூர் |
| 136. நடராசன், திரு. வ.து. | - இளையான்குடி |
| 137. நயினார் நாகேந்திரன், திரு. | - திருநெல்வேலி |
| 138. நரசிம்மன், திரு. பி.எம். | - பள்ளிப்பட்டு |
| 139. நளினி மனோகரன், திருமதி | - போளூர் |
| 140. நன்மாறன், திரு. என். | - மதுரை கிழக்கு |
| 141. நீலகண்டன், திரு. ப. | - ஆற்காடு |
| 142. நெப்போலியன், திரு. து. | - வில்லிவாக்கம் |
| 143. பச்சைமால், திரு. தா. | - குளச்சல் |
| 144. பதினெட்டாம்படியான், திரு. க. | - முதுகுளத்தூர் |
| 145. பரணிகுமார், திரு. பா. | - திருச்சிராப்பள்ளி-1 |
| 146. பரிதி இளம்வழுதி, திரு. | - எழும்பூர் (செ.வ.) |
| 147. பவானி கருணாகரன், திருமதி கே. | - அரக்கோணம் (செ.வ.) |
| 148. பழனிசாமி, திரு. கே.எஸ். | - பெருந்துறை |
| 149. பழனிசாமி, திரு. ஜி. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 150. பழனியப்பன், திரு. பெ. | - மொரப்பூர் |

151. பன்னீர்செல்வம்,
திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
153. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
154. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
155. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
156. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
157. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
158. பாலசுப்பிரமணியன்,
திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
159. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
160. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
161. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
162. பால் மனோஜ் பாண்டியன்,
திரு. பி.எச். - சேரன்மகாதேவி
163. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
164. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
165. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
166. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)



172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
176. மணி, திரு. டி. - விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
181. மில்லர், திரு. அ. - கூடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. - தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. - சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப் பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
193. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
194. ராமசாமி திரு. பி.சி. - மொடக்குறிச்சி

195. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். - காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
204. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
206. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
207. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
208. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
210. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
211. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
212. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி



216. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
217. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
218. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I
219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
222. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
223. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி
227. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
230. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
231. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
232. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
234. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)
235. வெற்றிடம் - சாத்தான்குளம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 16, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**
**2003 ஜனவரி 30, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணிஅல்ல மற்றுப் பிற."*

*அடக்கமான பண்பும் இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.*

## 1. வினாக்கள்—விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்***

**நான்காம் பட்டியல்**

**1—**

**குடிநீர் வசதி**

**வினா 4122—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் மேல்முகம் மோட்டுபட்டி காட்டுவளவு பகுதி மக்களுக்கு முழுமையாக சீராக குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

---

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் மேல்முகம் மோட்டுபட்டி காட்டுவளவு பகுதி மக்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க ரூ. 2.00 இலட்சம் செலவாகும். நகராட்சியின் நிதிநிலை திருப்தியாக இல்லாததால் இப்பணியை நகராட்சியால் செய்ய இயலவில்லை. எனினும் அப்பகுதி மக்களுக்கு நகராட்சி டேங்கர் லாரி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2—

## தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா 4188—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சியில் 38 காலனி வீடுகளை பழுதுபார்த்து, புதிய சமுதாயக்கூடம் கட்டித் தரவும் அங்குள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தரவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி வார்டு 6-ல் விளக்குமுக காலனியில் 24 வீடுகளும், தெற்கு வெளி காலனியில் 14 வீடுகளும் ஆக 38 வீடுகள் 1983-1984ஆம் ஆண்டில் சீர்காழி ஊராட்சி ஒன்றியம் மூலம் கட்டப்பட்டுள்ளன. இவற்றைப் பழுதுபார்த்து சமுதாயக்கூடம் கட்டும் திட்டம் ஏதும் செயல்பாட்டில் இல்லை.





3—

## சங்கு ஒலிப்பான்

**வினா 4269—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சி அலுவலகத்தில் நீண்டகாலமாக சங்கு ஒலி செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சி அலுவலகத்திலுள்ள சங்கு சுமார் 2 மாத காலமாக இயக்கப்படாமல் இருந்தது. தற்போது பணகுடி பேரூராட்சி அலுவலகத்திலுள்ள சங்கு ஒலிப்பானை காலை 8 மணி, பிற்பகல் 1 மணி மற்றும் 3 மணிக்கு சரியான நேரத்தில் இயக்கவும், தொடர்ந்து பராமரிக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டு தற்போது சங்கு இயக்கப்பட்டு வருகிறது.

4—

## குடிநீர் வசதி

**வினா 4276—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, கீழவனேரி கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2003 ஜனவரி 30

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, கீழவனேரி குடியிருப்பின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு நடப்பு நிதியாண்டில் புதிய ஆழ்குழாய் கிணற்று நீர் ஆதாரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றி குடிநீர் விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குடியிருப்பு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ள பணகுடி, வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும் பயனடைய உள்ளது.*

**5—**

### குடிநீர்த் திட்டம்

**வினா 7329—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க.உவரி ஊராட்சி குண்டல், மேலஉவரி காரிகோயில் ஆகிய கிராமங்களில் குடிநீர் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், க. உவரி ஊராட்சியைச் சேர்ந்த குண்டல், க. உவரி (மேல உவரி), காரிகோயில் ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற அனுமதி அளிக்கப்பட்டு நடப்பு நிதியாண்டில் நீராதாரம் தோற்றுவித்தபின், 2002-2003ஆம் ஆண்டில் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*



2003 ஜனவரி 30]

**6—**

### குடிநீர் வழங்குதல்

**வினா 7331—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, முகம்மதியர் ஆயன்குளம், சொக்கலிங்கபுரம், பசுவழி ஆகிய கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், முகம்மதியர் ஆயன்குளம் என்பது ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, ஆயன்குளம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். நடப்பு நிதியாண்டில் ஆயன்குளம் குடியிருப்பிற்கு ரூ. 8.33 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் முகம்மதியர் ஆயன்குளம் பகுதி முழுமையாக பயனடையும்.*

*ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, சொக்கலிங்கபுரம் குடியிருப்பில் 1996-ல் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது. நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலுக்கு வரும்போது இக்குடியிருப்பு முழுமையாக பயனடையும்.*

*ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, பசுவழி குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் சிறிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு பயனில் உள்ளது.*

[2003 ஜனவரி 30

7—

## நவீன கழிப்பிடம் அமைத்தல்

**வினா 8429—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்**—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி மேலச்செவல் பேரூராட்சி, கீழச்செவல் சன்னதித் தெரு, தேசமாணிக்கம் சன்னதித் தெரு ஆகிய இடங்களில் நவீன கழிப்பிடம் கட்ட அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன் மகாதேவி மேலச்செவல் பேரூராட்சி, கீழச்செவல் சன்னதித் தெரு, தேசமாணிக்கம் சன்னதித் தெரு ஆகிய இடங்களில் நவீனக் கழிப்பிடம் கட்ட இப்பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

8—

## வடிகால் அமைத்தல்

**வினா 8440—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி வீரவநல்லூர் பேரூராட்சி, அய்யனார் கோயில் தெருவில் வடிகால் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி வீரவநல்லூர் பேரூராட்சியில் அய்யனார் கோயில் தெருவில் வடிகால் அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.



2003 ஜனவரி 30]

9—

## சோடியம் மின்விளக்குகள் அமைத்தல்

**வினா 8452—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சியில் தெருவிளக்குகளும் மற்றும் நேதாஜி காலனியில் ஆர்.வி. ஸ்கூல் ரயில்வே கேட் அருகே சப்கலெக்டர் பங்களா செல்லும் வழியில் சோடியம் மின் விளக்குகளும் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சியில் நேதாஜி நகர் முதல் ரயில்வே கேட் வரை 14 குழல் விளக்குகளும், 2 சோடியம் விளக்குகளும், சப்கலெக்டர் பங்களா செல்லும் வழியில் 5 குழல் விளக்குகளும் போடப்பட்டு நல்ல முறையில் எரிந்து வருகின்றன. இதுவே போதுமானது ஆகும்.

10—

## ஆழ்குழாய் பம்பு அமைத்தல்

**வினா 8777—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், தெற்கு வீரவநல்லூர் ரெட்டியன்புரம் ஆதிதிராவிடர் காலனி மேற்குப் பகுதியில் புதிய ஆழ்குழாய் பம்பு அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஜனவரி 30

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், தெற்கு வீரவநல்லூர் ஊராட்சி, ரெட்டியார்புரம் ஆதிதிராவிடர் காலனிக்கு, ரெட்டியார்புரம் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பொதுநல்லி மற்றும் 1 கையிறைப்பான் கொண்டு அத்தியாவசிய தேவைக்கு வேண்டிய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் கருத்துரு தற்பொழுது பரிசீலனையில் இல்லை.*

11—

### மராமத்துப் பணி

**வினா 8791—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தேர்வு நிலைப் பேரூராட்சிக்குட்பட்ட தினகர் தெரு, ஜெயந்தி நகர் காலனி கீழ்புறம், அனவரதநல்லூர் தெரு ஆகிய இடங்களிலுள்ள படித்துறையை மராமத்துப் பணி செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தேர்வு நிலைப் பேரூராட்சிக்குட்பட்ட தினகர் தெரு, ஜெயந்தி நகர் காலனி கீழ்புறம், அனவரதநல்லூர் தெரு ஆகிய இடங்களிலுள்ள படித்துறையை மராமத்துப் பணி செய்யும் கருத்துரு ஏதுமில்லை.*



2003 ஜனவரி 30]

12—

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா 9013—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி பேரூராட்சியில் ஆதித்தனார் நகர், களக்காடு பிரதான சாலை, மல்லிகை நகர், மேலகண்டளவு பகுதி ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆதித்தனார் நகரில் 15 வீடுகளும், மக்கள்தொகை 75-ம் உள்ளது. இப்பகுதியில் 8 குழல் விளக்குகள் உள்ளன. களக்காடு பிரதான சாலையில் மல்லிகை நகரில் 100 வீடுகளும், மக்கள்தொகை 500-ம் உள்ளது. இங்கு மெயின்ரோட்டில் 4 குழல் விளக்குகளும் மல்லிகை நகரில் 4 குழல் விளக்குகளும் உள்ளன. மேலகண்டளவு பகுதியில் 60 வீடுகளும் மக்கள்தொகை 300-ம் உள்ளது. இங்கு 5 குழல் விளக்குகளும் உள்ளன. மேலகண்டளவு தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிந்து வருகின்றன. இந்நிலையில் இதுவே போதுமானது என்பதால் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க அவசியம் எழவில்லை.*

13—

### ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

**வினா 10135—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சியின் பல பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் நடவடிக்கை எப்பொழுது தொடங்கப்படும்?*

[2003 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சியில் தற்போது 46 ஆழ்துளை கிணறுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி ஆழ்துளை கிணறுகளே போதுமானதாக உள்ளன.

14—

## குடிநீர்த் தட்டுப்பாடு

**வினா 10250—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பரங்கிப்பேட்டையில் குடம் நீர் ரூபாய் 6/-க்கு விற்கப்படுவது அரசின் பார்வைக்கு வந்ததா?*

*(ஆ) அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் எந்த ஒரு பகுதியிலும் குடிநீர்த்தட்டுப்பாடு இல்லை. மேலும் ஒரு குடம் நீர் ரூபாய் 6/-க்கு விற்பனை செய்யப்படவில்லை.

15—

## உயர் கோபுர விளக்குகள்

**வினா 10361—திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை மாவட்டம், பேட்டவலம், கீழ்ப்பென்னாத்தூர் ஆகிய பேரூராட்சிகளின் முக்கிய சாலை சந்திப்புகளில் உயர் கோபுர விளக்குகள் பொருத்தும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?*



2003 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பேட்டவலம், கீழ்ப்பென்னாத்தூர் ஆகிய பேரூராட்சிகளின் முக்கிய சாலை சந்திப்புகளில் உயர் கோபுர விளக்குகள் அமைப்பதால் பேரூராட்சிக்கு கூடுதல் பராமரிப்புக் கட்டணம், மின் கட்டணம் ஆகியன செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே இவ்விளக்கு அமைக்க வேண்டிய உத்தேசம் எதுவும் இல்லை.

16—

## ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம்

**வினா 10852—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, தங்கம்மாள்புரம் கிராமத்தில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, தங்கம்மாள்புரம் கிராமத்தில் 2000-01 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு ஊராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தற்போது அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

17—

### குடிநீர் வழங்குதல்

**வினா 10853—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, கைலாசபுரம் கிராமத்திற்கு குடிநீர்த் தொட்டி கட்டி குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, கைலாசபுரம் கிராமத்திற்கு ஆயன்குளம் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆயன்குளம் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பின் மக்கட்தொகை மிகக் குறைவாக இருப்பதால், தகுதி, முன்னுரிமை மற்றும் நிதியாதார அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் தனிக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த பரிசீலிக்கப்படும்.

18—

### ஆழ்குழாய் கிணறு

**வினா 10888—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் ஊராட்சி, புதியம்புத்தூர் கிராமத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கன்குளம் ஊராட்சி, புதியம்புத்தூர் குடியிருப்பில் தற்போது செயலில்



இருக்கும் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தாமிரபரணி ஆற்று நீர் வழங்கப்படவுள்ளதால், இத்திட்டம் செயலுக்கு வரும்போது இக்குடியிருப்பு முழுமையாக பயனடையும். எனவே புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

19—

### புளோரைடு திட்டம்

**வினா 11404—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001ஆம் ஆண்டில் எந்தெந்த மாவட்டங்களில் புளோரைடு திட்டத்தில் வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன?

(ஆ) இதற்காக அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001ஆம் ஆண்டில் சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களில் புளோரைடு திட்டத்தின்கீழ் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

(ஆ) இத்திட்டத்திற்காக அரசு ஒதுக்கிய நிதி ரூ. 3091.91 இலட்சங்கள் ஆகும்.

20—

### குடிநீர் வழங்குதல்

**வினா 21758—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 30

சேரன்மகாதேவி தொகுதி, கிளியாபுரம், மனுஜோதி ஆசிரமம், அரியநாயகிபுரம், பொட்டல் காலனி, செல்வி நகர் ஆகிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, பொட்டல் காலனிக்கு வடக்கு அரியநாயகிபுரம் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டம் இக்குடியிருப்பிற்கு போதுமானதாக உள்ளது. செல்வி நகர் பாப்பாக்குடி குடியிருப்பின் ஒரு பகுதி. இப்பகுதிக்கு நடப்பு நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. கிளியாபுரம், மனுஜோதி ஆசிரமம் ஒரு தனியார் நிறுவனமாக உள்ளதால் தனியாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வழிவகை இல்லை.

**21—**

### குடிநீர் வழங்குதல்

**வினா 11763—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, முத்துசாமிபுரம், குத்தாலிங்கபுரம், புதுப்பட்டி, ஏ.டி. காலனி, கிருஷ்ணாபுரம், சின்னையன்குளம், இருதயபுரம், காமராஜ் நகர், பரம்பு கலிங்க நகர் ஆகிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, ஆனையப்பபுரம் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் செயலுக்கு வரும்போது குத்தாலிங்கபுரம் குடியிருப்பு முழு அளவு குடிநீர் வசதி பெறும். புதுப்பட்டி, ஏ.டி. காலனியில் 2001-2002ஆம் நிதியாண்டில் ஏற்கெனவே உள்ள ஆழ்குழாய் கிணறு நீராதாரத்தைப் பயன்படுத்தி



2003 ஜனவரி 30]

60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்புடன்கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கிருஷ்ணாபுரம் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. சின்னையன்குளம் குடியிருப்பில் தற்போது பயனில் உள்ள திட்டம் இக்குடியிருப்புக்கு போதுமானதாக உள்ளது. இருதயபுரம் குடியிருப்புக்கு 2001-2002ஆம் நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பரம்பு கலிங்க நகர் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற பரிசீலிக்கப்பட்டு வருகிறது. காமராஜ் நகர், ஓடைமறிச்சான் குடிநீர்த் திட்டம் 2001-2002ஆம் நிதியாண்டில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திலிருந்து காமராஜ் நகர் குடியிருப்பிற்கு பொதுநல்லி அமைத்து குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டம் இக்குடியிருப்பிற்கு போதுமானதாக உள்ளது.

**22—**

### குடிநீர்

**வினா 11771—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, நந்தன் காலனி, காத்தப்பபுரம் ஆகிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க முன்னுரிமையின் அடிப்படையில் அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, நந்தன் காலனி குடியிருப்பில் தற்பொழுது பயனில் உள்ள திட்டத்தின் மூலம் அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. ஓடைமறிச்சான் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து காத்தப்பபுரம் குடியிருப்பிற்கு பொதுநல்லி மூலம் அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விரு குடியிருப்புகளுக்கும் வரும் நிதியாண்டுகளில் தகுதி, தேவை மற்றும் முன்னுரிமையைக் கருத்தில் கொண்டு நிதியாதாரங்களின் அடிப்படையில் புதிய திட்டங்கள் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

[2003 ஜனவரி 30

23—

## ஆழ்குழாய் பம்பு அமைத்தல்

**வினா 11817—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கூனியூர் சாலையோரப் பேருந்து நிலையம் அருகில் மற்றும் மேல் தெற்குத் தெரு ஆகிய பகுதிகளில் புதிய ஆழ்குழாய் பம்பு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியம், கூனியூர் குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலமும் ஏற்கெனவே பயனில் உள்ள குடிநீர்த் திட்டத்தின் மூலமும் கூனியூர் குடியிருப்பின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளதால் வேறு ஆழ்குழாய் பம்பு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

24—

## ஆழ்குழாய் பம்பு

**வினா 11820—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், திருவிருத்தன்புள்ளி கிராமத்தில் பட்டன்காடு கால்வாய் பக்கம் ஆழ்குழாய் பம்பு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியம், பட்டன்காடு குடியிருப்புக்கு தற்போதுள்ள குடிநீர்த் திட்டம் போதுமானதாக உள்ளது.



2003 ஜனவரி 30]

மேலும் இக்குடியிருப்பு பணகுடி, வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயனடைய உள்ளதால், ஆழ்குழாய் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

25—

## விசைப்பம்பு அமைத்தல்

**வினா 11824— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கரிசல்பட்டி ஊராட்சியில் ஆழ்குழாய் அமைத்து தண்ணீரை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்ற விசைப்பம்பு அமைக்கும் பணி இந்த ஆண்டு குடிநீர்த் திட்டத்தில் துரிதப்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கரிசல்பட்டி ஊராட்சியில் உள்ள ஓடக்கரை குடியிருப்பிற்கு அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணற்றிலிருந்து கரிசல்பட்டி கிராமத்தில் அமைத்திருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீரேற்றி விநியோகம் செய்யும் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

26—

## குடிநீர் வழங்குதல்

**வினா 11825—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பாரதி நகர் பொத்தைக்கு புதிய கிணற்றில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி விசைப்பம்பு மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு வேலை துரிதப்படுத்தப்படுமா?

[2003 ஜனவரி 30

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியம், பாரதிநகர் பொத்தை என்பது பாரதி நகர் குடியிருப்பாகும். இக்குடியிருப்பிற்கு 2001-2002ஆம் நிதியாண்டில் திறந்தவெளிக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கிராமக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இக்குடியிருப்பிற்கு போதுமானதாகும்.

**27—**

**குடிநீர்த் தொட்டி அமைத்தல்**

**வினா 11828—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், புதுப்பட்டி அம்பேத்கார் நகரில் குடிநீர்த் தொட்டி கட்டிக் கொடுப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், புதுப்பட்டி அம்பேத்கர் நகர் எனும் புதுப்பட்டி ஆதிதிராவிடர் காலனிக்கு 2001-2002ஆம் நிதியாண்டில் ஏற்கெனவே உள்ள ஆழ்குழாய் கிணறு நீராதாரத்தைப் பயன்படுத்தி 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்புடன்கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**28—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 11878—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 30]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, அந்தோணி நகர் கிராமத்திற்கு பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, அந்தோணி நகர் குடியிருப்பிற்கு தற்போது பட்டன்காடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது. பட்டன்காடு குடியிருப்பிற்கு பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்றுநீர் வழங்கப்பட உள்ளதால் அந்தோணி நகர் குடியிருப்பும் இத்திட்டத்தின்கீழ் பயனடைய உள்ளது.

**29—**

**ஆழ்குழாய் பம்பு அமைத்தல்**

**வினா 11933—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், வெங்கடரெங்கபுரம் ஆதிதிராவிடர் காலனியில் புதிய ஆழ்குழாய் பம்பு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், வெங்கடரெங்கபுரம் ஆதிதிராவிடர் காலனி என்பது வெங்கடரெங்கபுரம் குடியிருப்பின் ஒரு பகுதி. இக்குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் சிறு திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிற

[2003 ஜனவரி 30

30—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 12037—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், புதுப்பட்டி 5-வது வார்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி ஆதிதிராவிடர் காலனிக்கு ஏற்கெனவேயுள்ள ஆழ்குழாய் கிணறு நீராதாரத்தைப் பயன்படுத்தி 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பிரதான நீரேற்றுக் குழாய், பகிர்மானக் குழாய் மற்றும் பொதுநல்லிகளுடன்கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் விரைவில் ஊராட்சியிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்படும்.

31—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 12039—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம், வள்ளியம்மாள்புரம் (வடக்கு) கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, வள்ளியம்மாள்புரம் (வடக்கு கிராமம்) மற்றும் அருகிலுள்ள வடமலைப்பட்டி குடியிருப்பிற்கும் சேர்த்து 2002-2003 ஆம் நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

32—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 2044—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, துப்பாக்குடி பஞ்சாயத்து ஒன்றியம், இராவுத்தபேரி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி ஊராட்சி, இராவுத்தபேரி குடியிருப்பிற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்று நீர் வழங்கப்பட உள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இக்குடியிருப்பிற்கு ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. கிராமக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இக்குடியிருப்பிற்கு போதுமானதாகும்.

[2003 ஜனவரி 30

33—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா 12049—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பஞ்சாயத்து, எம்.ஜி.ஆர். நகர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி நகரப் பஞ்சாயத்து, எம்.ஜி.ஆர். நகர், சேரன்மகாதேவி நகரப் பஞ்சாயத்தில் சுமார் 250 மக்கள்தொகை கொண்ட ஒரு பகுதியாகும். இங்கு சேரன்மகாதேவி நகரப் பஞ்சாயத்து பராமரிப்பில் செயல்பட்டு வரும் குடிநீர்த் திட்டத்திலிருந்து ஒரு பொதுக்குழாய் அமைக்கப்பட்டு இதன்மூலம் தேவையான அளவு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே இப்பகுதிக்கு தனியாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

34—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 12051—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ஐந்தாங்கட்டளை பஞ்சாயத்து, நாலாங்கட்டளை கிராமத்திற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, ஐந்தாங்கட்டளை பஞ்சாயத்து நாலாங்கட்டளை வடக்கு, நாலாங்கட்டளை நடுவூர், நாலாங்கட்டளை தெற்கு ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கும் ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

35—

### நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 12063—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மடத்தூர் ஊராட்சி, சங்கரலிங்கபுரம் கிராமத்திற்கு நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் பஞ்சாயத்து, சங்கரலிங்கபுரம் கிராமத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சொக்கநாதன்பட்டி, கட்டளையூர், சங்கரலிங்கபுரம் மற்றும் முத்தம்மாள்புரம் ஆகிய நான்கு குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட உள்ளது. சங்கரலிங்கபுரம் கிராமத்திற்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டகருத்துரு இல்லை.

[2003 ஜனவரி 30

36—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 12064—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், துப்பாக்குடி ஊராட்சி, துப்பாக்குடி ஓடுவீடு காலனி தெற்கு தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம். துப்பாக்குடி குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் துப்பாக்குடி 1-வது வார்டு பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அப்பகுதியிலுள்ள திறந்தவெளிக் கிணற்றின் மூலம் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஓடுவீடு காலனிப் பகுதியில் உள்ளது.

37—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 12099—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, மடத்தூர் பஞ்சாயத்து ஒன்றியம், முத்தம்மாள்புரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அ (மற்றும்) ஆ சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், மடத்தூர் ஊராட்சி, முத்தம்மாள்புரம் கிராமத்தில் ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சொக்கநாதன்பட்டி குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, சொக்கநாதன்பட்டி, கட்டளையூர், சங்கரலிங்கபுரம், முத்தம்மாள்புரம் ஆகிய நான்கு குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்படவுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டத்தை ஜூலை 2003-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

38—

### சூளை அடுப்பு அமைத்தல்

**வினா 13677—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சியில் தேசிய மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்பு திட்டத்தின்கீழ் சூளை அடுப்பு நிறுவ அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக இத்திட்டம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. எனவே பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்பாட்டில் இல்லை.

[2003 ஜனவரி 30

39—

## நிதி ஒதுக்கீடு

**வினா 14494—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் கடந்த 1999-2001ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிகளின் நிதிப் பங்கீட்டில் இடங்கணசாலை பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இடங்கணசாலை பேரூராட்சிக்கு நிதிப் பங்கீட்டில் 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1999-2000 | ரூ.18,00,276/- |
| 2000-2001 | ரூ.15,22,484/- |

40—

## சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா 14498—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியிலுள்ள சின்ன ஏரி சுடுகாடு மற்றும் ஜலகண்டபுரம் சாலையிலுள்ள சுடுகாட்டுக்கும் சுற்றுப்புறச்சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியின் நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால் அந்நகராட்சியிலுள்ள சின்னஏரி சுடுகாடு மற்றும் ஜலகண்டபுரம்



2003 ஜனவரி 30]

சாலையிலுள்ள சுடுகாட்டுக்கு சுற்றுச்சுவர் கட்ட நகராட்சியால் இயலவில்லை.

41—

## மகளிர் மனமகிழ் மையங்கள்

**வினா 15931—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் மகளிர் மனமகிழ் மையங்கள் தொடங்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சியில் மகளிர் மனமகிழ் மையங்கள் தொடங்கும் கருத்துரு ஏதும் இல்லை.

42—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா 15957—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், மகாதேவன்குளம் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதால் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர்த் தொட்டி கட்டிக் கொடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2003 ஜனவரி 30

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், மகாதேவன்குளம் கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (2002-03) முழு அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற பரிசீலிக்கப்பட்டு வருகிறது.*

**43—**

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா 15959—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அப்புவிளை கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் கொடுத்த ஆழ்குழாய்க் கிணறு வற்றி விட்டதால், புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அப்புவிளை கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீரை இக்குடியிருப்பில் ஏற்கெனவே உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றி விநியோகம் செய்யப்பட உள்ளது. இத்திட்டம் செயலுக்கு வரும்போது இக்குடியிருப்பு பயனடையும். எனவே வேறு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.*

**44—**

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா 15960—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2003 ஜனவரி 30]

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தணக்கர்குளம் ஊராட்சி, நக்கனேரி கிராமத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க ஆழ்குழாய்க் கிணறு அமைத்திட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தணக்கர்குளம் ஊராட்சி, நக்கனேரி குடியிருப்பில் தற்போது பயனில் உள்ள திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்று நீரை இக்குடியிருப்பில் ஏற்கெனவே உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றி விநியோகம் செய்யப்பட உள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலுக்கு வரும்போது இக்குடியிருப்பு முழுமையாக பயனடையும். எனவே, தனியாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.*

**45—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 15962—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தணக்கர்குளம் ஊராட்சி, சிவசுப்பிரமணியபுரம் மற்றும் பத்தியநாதபுரம் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தணக்கர்குளம் ஊராட்சி, சிவசுப்பிரமணியபுரம் மற்றும் பத்தியநாதபுரம் ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் சேர்த்து 1999-2000 நிதியாண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கிராம குடிநீர்த் திட்ட விதிகளின்படி இம்*

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இக்குடியிருப்புகளுக்குப் போதுமானதாகும்.

46—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 15964—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, முடவன்குளம் கிராமத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட தாதுவத்திகுளத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மின் மோட்டார் மாட்டி பைப்லைன் மூலம் ஏற்கெனவே உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு கொண்டு சென்று குடிநீர் விநியோகம் செய்திட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சியில் முடவன்குளம் கிராமத்தில் நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்றுநீரை இக்குடியிருப்பில் ஏற்கெனவே உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றி விநியோகம் செய்யப்பட உள்ளது. இத்திட்டம் செயலுக்கு வரும்போது இக்குடியிருப்பு முழுமையாக பயனடையும். எனவே புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.*

47—

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா 16404—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—*

*திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு, ராஜேந்திர நகர் 6-வது தெருவில் தார்ச்சாலை அல்லது திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு, ராஜேந்திர நகர் 6-வது தெருவில் தார்ச்சாலை அமைப்பதற்கு மாநகராட்சி நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும்.*

48—

**இணைப்புச் சாலை வசதி**

**வினா 16406—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—*

*திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு, 3-வது, 4-வது தெருக்களுக்கு இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்திக் கொடுத்திட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு, ராஜேந்திர நகர், 3-வது, 4-வது தெருக்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பதற்கு மாநகராட்சி நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும்.*

49—

**ஆழ்குழாய்க்கிணறு**

**வினா 17324—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க.உவரி ஊராட்சிக்குட்பட்ட கீழஉவரி, மேலஉவரியில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க.உவரி ஊராட்சி, கீழ் உவரி குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் (2002-03) குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.* மேல உவரி என்பது கனரகத்து நாடார் உவரி குடியிருப்பாகும். இக்குடியிருப்பு செயலாக்கத்தில் உள்ள நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பயனடைய உள்ளது. இத்திட்டம் செயலுக்கு வரும்போது இக்குடியிருப்பு முழுமையாக பயனடையும். எனவே வேறு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் கருத்துரு இல்லை.

50—

### தார்ச் சாலை

**வினா 17405—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரம், கீழத்தென்பாதி ஆதிதிராவிட தெருவிற்கு தார்ச் சாலை வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சி, கீழத்தென்பாதி ஆதிதிராவிடர் சாலை 863 மீட்டர் நீளமுடையது.* இதில் தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் *(1993-99) 400 மீ. நீளமுள்ள சாலை ரூ.1.85 லட்சத்திலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் (2000—2001) மூலம் 200 மீ. நீளமுள்ள சாலை ரூ.1.50 லட்சத்திலும் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டது. மீதமுள்ள 263 மீட்டர் சாலைக்கு ரூ. 1.25 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.* தற்போது நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் மீதமுள்ள சாலைப் பணியை நகராட்சியால் எடுத்துச் செய்ய இயலவில்லை.



## ஐந்தாம் பட்டியல்

1—

### விருப்ப ஓய்வு

**வினா 4679—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2001 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை எத்தனை அரசு அலுவலர்கள் தானாகவே முன்வந்து விருப்ப ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளனர்?*

*(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு அரசு ஓய்வு பெற ஆணை வழங்கியது?*

**விடை—**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:**

*(அ) 2001 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை தானாகவே முன்வந்து விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்தவர்கள் 52 பேர்.*

*(ஆ) அவர்களில் 51 பேருக்கு அரசு ஓய்வு பெற ஆணை வழங்கியுள்ளது.*

2—

### சாலை செப்பனிடல்

**வினா 8548— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மாணிக்கம்பட்டி அவடத்தூர் சாலை *0/0 - 1/0* தார்ச் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*சாலையில் தார் நொடிகள் போட்டு போக்குவரத்திற்கு இடையூறு இன்றி பராமரிக்கப்பட்டு வருகிறது.*

3—

## தூர் வாரல்

**வினா 16232—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு கிராமத்திற்கும், குடமுருட்டி கிராமத்திற்கும் இடையேயுள்ள கழுதை வாய்க்காலை தூர் வாரி சீர்செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை. சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு கிராமத்திற்கும், குடமுருட்டி கிராமத்திற்கும், இடையேயுள்ள கழுதை வாய்க்காலை 1 கி.மீ. முதல் 4.00 கி.மீ. வரை 1997-98 ஆம் ஆண்டிலும் 0 கி.மீ. முதல் 100 கி.மீ. வரை 2000-2001 ஆம் ஆண்டிலும் தூர் வாரும் பணி ஏற்கெனவே முடிக்கப்பட்டதாலும் பணி முடிவுற்று 5 ஆண்டுகள் முடிவு பெறாததாலும் இப்பணி இவ்வாண்டு தூர் வாரும் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.*



4—

## சீர் அமைப்புப் பணி

**வினா 23270—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி, காண்டூர் கால்வாய் சீர் அமைப்புப் பணி சரிவர செய்யப்படாமல் அதனால் ஒப்பந்தக்காரருக்கும் ஒரு தொகை நிறுத்தி வைத்து இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் காண்டூர் கால்வாயைச் சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகளில் சுட்டிக்காட்டப்பட்ட சிற்சில குறைபாடுகளைச் சரி செய்யாத காரணத்தால் ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்த விதிகளின்படி இறுதி பட்டியல் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து குறைபாடுகளைச் சரி செய்யுமாறு ஒப்பந்தக்காரர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக்கால்வாயில் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை ஒப்பந்தக்காரர் சரி செய்த பின்னரே இப்பணிக்கான இறுதிப்பட்டியல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறைகள் சரி செய்யப்படாவிடின் அதற்குரிய தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து பிடித்தம் செய்து சரி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

5—

## விடுதி சீர் செய்தல்

**வினா 24570—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2003 ஜனவரி 30

(அ) வால்பாறை சோலையார் அணைக்கட்டு தங்கும் விடுதிகள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான வீட்டைப் பழுதுபார்ப்பதன் அவசியம் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சோலையார் அணைக்கட்டில் உள்ள ஆய்வு மாளிகை (தங்கும் விடுதி) நல்ல நிலையில் உள்ளது. உடனடியாக மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் இல்லை.

**6—**

## சொந்தக் கட்டடம்

**வினா 4206—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வடகுத்து நூலகத்திற்குச் சொந்தமான கட்டடம் ஏற்படுத்தித் தாப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வடகுத்தில் ஒரு ஊர்ப்புற நூலகம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட நூலகத்திற்கு ஊராட்சி மன்றத் தீர்மானம் மூலம் சர்வே எண் 143/6—ல் 0.06.0 ஏர்ஸ் காலிமனை நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் சுமார் ரூ.2/- இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பணி 2-5-2002 அன்று தொடங்கப்பட்டு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.



2003 ஜனவரி 30]

**7—**

## நிதி ஒதுக்கீடு

**வினா 16624—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 2000-2001-ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டுநலத் திட்டத்திற்கு (என். எஸ். எஸ்.) எவ்வளவு தொகை அரசு ஒதுக்கியது?

(ஆ) இத்திட்டத்தில் செயல்படும் பள்ளிகளுக்கு எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 2000-2001-ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டுநலப் பணித் திட்டத்திற்கு (என்.எஸ்.எஸ்.) அரசு ஒதுக்கிய தொகை ரூ.1, 36,30,000/- இதில் மைய அரசின் பங்கு ரூ.79,50,833/- மாநில அரசின் பங்கு ரூ.56,79,167/-.

(ஆ) நாட்டுநலப் பணித் திட்டத்திற்கு மேல்நிலைப் பள்ளிகளில் 2000-2001-ஆம் கல்வி ஆண்டில் 58,500 விருப்பார்வத் தொண்டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது. அதன்படி ஒரு அலகிற்கு 50 விருப்பார்வத் தொண்டர்கள் வீதம் 1,170 அலகுகள் செயல்பட்டு வந்தன. ஒரு அலகிற்கு அன்றாட செயல்பாடுகளுக்காக, ஒரு விருப்பார்வத் தொண்டருக்கு ரூ.160/- வீதம் (ஒரு அலகு 50 மாணவத் தொண்டர்கள்) ரூ8000/- மும் சிறப்பு முகாம்களுக்காக ஒரு விருப்பார்வத் தொண்டருக்கு ரூ.300/- வீதம் (ஒரு அலகு 25 மாணவத் தொண்டர்கள்) ரூ.7500-ம் சேர்த்து ஒரு அலகிற்கு மொத்தம் ரூ.15,500/-வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**8—**

## நூலகக் கட்டடம்

**வினா 20972—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 30

(அ) புவனகிரி தொகுதி, பெரியப்பட்டு கிராமத்தில் நூலகக் கட்டடம் வாடகை கட்டடத்தில் இயங்கி வருவதால், சொந்தக் கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பெரியப்பட்டு கிராமத்தில் செயல்பட்டு வரும் நூலகம் பகுதி நேர நூலகமாகும். இந்நூலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்படவில்லை. இலவசக் கட்டடத்திலேயே செயல்படுகிறது. தற்போது, காலிமனையுள்ள கிளை நூலகங்களுக்கும், ஊர்ப்புற நூலகங்களுக்கும் கட்டடம் கட்டப்படுகிறது. பகுதி நேர நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்படுவதில்லை. இந்நூலகம் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும், பகுதிநேர நூலகங்களுக்கு கட்டடம் கட்டப்படும் திட்டம் ஏதும் இல்லையென்பதாலும், பெரியப்பட்டு கிராமத்தில் செயல்படும் பகுதி நேர நூலகத்திற்கு கட்டடம் கட்ட திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

**9—**

### நிதி ஒதுக்கீடு

**வினா 28655—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் அகதிகள் மறுவாழ்வுக்காக தமிழக அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டு இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்காக தமிழக அரசு ரூ.26,74,76,000/- ஒதுக்கீடு செய்தது. இத்தொகை முழுவதும் மத்திய அரசிடமிருந்து மீளப் பெறப்படத்தக்கது.



2003 ஜனவரி 30]

**10—**

### பணியாளர் நியமனம்

**வினா 11669—திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு மின்தூக்கி இயக்குபவரும், மின் ஆக்கி இயக்குபவரையும் நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கு தடையாணை உள்ளதால் கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு மின்தூக்கி இயக்குபவரும் மின்ஆக்கி இயக்குபவரையும் நியமிக்கும் செயற்குறிப்பினை தற்போதைக்கு அரசு ஏற்க இயலாது.

**11—**

### தேரோட்டம்

**வினா 10809—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி அளேபுரம் அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயிலின் பழுதடைந்துள்ள தேரை சீர்செய்து தேரோட்டம் நடைபெற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, அளேபுரம் அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயிலின் திருத்தேர் சிதலமடைந்து அழியும் நிலையில் உள்ளதால், இதனைச் செப்பனிட இயலாது. எனவே புதிய திருத்தேர் ஒன்று செய்ய வேண்டும். அறங்காவலர்கள் நியமித்த பின்னர் புதிய திருப்பணிக் குழு அமைத்து தேர் புதியதாக செய்து பின்னர் தேரோட்டம் நடத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**12—**

## தங்க ரதம்

**வினா 12276—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு வரை (ஜூன் முடிய) தமிழ்நாட்டில் எத்தனை திருக்கோயில்களுக்கு தங்க ரதங்கள் புதியதாக அமைக்கப்பட்டன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு ஜூன் முடிய 19 திருக்கோயில்களில் தங்க ரதங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாட்டில் தங்க ரதம் உள்ள திருக்கோயில்கள் விவரம்:

(1) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

(2) அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

(3) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

(4) அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயில், திருவேற்காடு.



2003 ஜனவரி 30]

(5) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்

(6) அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.

(7) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.

(8) அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர்.

(9) அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி.

(10) அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை.

(11) அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு.

(12) அருள்மிகு வெங்கடாசலபதிசுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோவில்.

(13) அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன் கோவில்.

(14) அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை.

(15) அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்.

(16) அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி.

(17) அருள்மிகு வானமாமலைபெருமாள் திருக்கோயில், நாங்குனேரி.

(18) அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில்.

(19) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை.

**13—**

## அடிப்படை வசதி

**வினா 20803—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநாவலூர் தொகுதி, கூவாகம் கிராமத்திலுள்ள அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோயிலின் திருவிழாவுக்கு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து பலர் வந்து கலந்துகொள்வதால், இக்கோயிலுக்குத்

[2003 ஜனவரி 30

தேவையான சாலைகள், சுற்றுப் பிரகாரம், தங்குமிடம், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி ஆகிய வசதிகளை செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் தொகுதி, கூவாகம் கிராமத்தில் உள்ள அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோயில், பரிக்கல், அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த குழுக் கோயிலாகும். இத்திருக்கோயிலில் சித்திரைத் திங்களில் நடைபெறும் பிரேம்மோற்சவத்திற்கு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து பலர் வந்து கலந்துகொள்கிறார்கள். உண்டியல் மூலம் ஆண்டுக்கு ரூ. 75,000/- வருமானம் மட்டுமே கிடைக்கிறது. இக்கோயிலுக்குத் தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி போன்றவை பிரேம்மோற்சவத்தின்போது கிராம பஞ்சாயத்து நிர்வாகத்தின் மூலம் செய்யப்படுகிறது. பிரம்மோற்சவத்தின்போது மட்டுமே வெளியூர்களிலிருந்து சேவார்த்திகள் வருவார்கள் என்பதால், இக்கோயிலுக்குத் தேவையான சாலை வசதி, சேவார்த்திகள் தங்குமிடம், கழிப்பிட வசதி போன்றவை பிரதி [illegible] ஆண்டு பிரம்மோற்சவத்தின்போது மட்டுமே பயன்படும் என்றாலும், இப்பணிகளைச் செய்வது அவசியமாக இருந்தபோதிலும், இப்பணிகளை மேற்கொள்ள மேற்படி திருக்கோயிலில் நிதி வசதி இல்லை. மேலும் 20-3-2002-ல் மேற்படி திருக்கோயிலில் உபயதாரர்கள் மூலமே குடமுழுக்கு செய்யப்பட்ட நிலையில், மேற்படி பணிகளை உபயதாரர் மூலம் செய்யவும் வழிவகை இல்லை.

**14—**

**சிறப்பு மருத்துவம்**

**வினா 7253—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக்கோட்டில் வாழும் ஏழைகளை கிராமம் வாரியாக அறிந்து அவர்களுக்கு மருத்துவமனையில் சிறப்பு மருத்துவம் அளிக்க திட்டம் இருக்கிறதா?



2003 ஜனவரி 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாத வருமானம் ரூ. 999 அல்லது அதற்குக் குறைவாக உள்ளவர்களின் குடும்பத்துக்கு அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை மற்றும் சிறப்பு மருத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதே போல் கிராமப்புறங்களில்/நகர்ப்புறங்களில் பொது சுகாதாரத் துறை மூலம் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு சிறப்பு சிகிச்சை தேவையென கண்டறியப்பட்ட நோயாளிகளுக்கும் அருகாமையில் உள்ள வட்ட/மாவட்ட/மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நோயாளர் நிதியுதவி அமைப்பு ஏற்படுத்தப்பட்டு வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழைகள் விண்ணப்பிக்கும்பட்சத்தில் அவர்களுக்கு உயிர் காக்கும் சிகிச்சை எட்டு அரசு மருத்துவக் கல்வி மருத்துவமனைகளில் அளிக்கப்படுகிறது.

**15—**

**பணியாளர்**

**வினா 20003—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி அட்டெண்டர் மற்றும் கிளீனர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்களை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகளில் தற்போது ஊர்தி அட்டெண்டர் மற்றும் கிளீனர் பதவிகள் உருவாக்கப்படுவதில்லை. ஏற்கெனவே இருந்த அத்தகைய பதவிகளும் மருத்துவமனைப் பணியாளர்

என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டன. அவசர ஊர்திகளில் அட்டெண்டர் மற்றும் கிளீனர் உதவி தேவைப்படும்போது, மருத்துவமனைப் பணியாளர்கள் அப்பணியினை கவனித்துக் கொள்வார்கள். எனவே, எடப்பாடி அரசு மருத்துவமனையில் அப்பணியிடங்களை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை.

**16—**

**கூடுதல் கட்டடம்**

**வினா 20096—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு போதுமான கட்டட வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், அங்கு கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு பயனடையும் வெளி மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் தற்போதுள்ள கட்டட வசதிகளே போதுமானதாகும். கூடுதலாக கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

**17—**

**அரசுக் கட்டடம்**

**வினா எண் 20099—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் தனியார் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளை அரசுக் கட்டடத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏதும் இல்லை. மொத்தமுள்ள 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 66 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்திலும், துணை சுகாதார நிலையக் கட்டடத்திலும் செயல்படுகின்றன.

**18—**

**பராமரிப்புப் பணி**

**வினா 24385—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறையில் உள்ள சோலையார் டேம் ஆரம்ப சுகாதார நிலையம் பராமரிப்பு இல்லாமல் இருப்பதும், கதவு, சன்னல்கள் உடைந்து இருப்பதும் அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, சாலையுார் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இச்சுகாதார நிலையத்திலுள்ள பழுதுகளைச் சரி செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் கட்டடப் பழுதுகளைச் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**19—**

**சோயா விதை**

**வினா 14270—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 30

2000-2001 ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் சோயா வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சோயா சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் முன்வராததால், கோவை மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் சோயா விதை உற்பத்தி வேளாண்மைத் துறையால் மேற்கொள்ளப்படவில்லை.

**20—**

**நஷ்ட ஈடு**

**வினா 19590—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் பகுதியில் தென்னையில் ஏற்பட்டுள்ள நோயால் தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். எனவே அரசு அவ்விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் பகுதியில் தென்னையில் செம்பான் பூச்சி தாக்குதல் காணப்பட்டுள்ளது. தென்னை வளர்ப்போருக்கு செம்பான் பூச்சி தாக்குதல் ஏற்பட்ட மரங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப பரிந்துரைகள் வேளாண்மைத் துறை களப் பணியாளர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மானிய விலையில் தென்னை மரங்களுக்கு வேர் மூலம் நுண்ணூட்டச்சத்து செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேறு நஷ்டஈடு ஏதும் வழங்க திட்டம் இல்லை.



2003 ஜனவரி 30]

**21—**

**சொட்டு நீர்ப்பாசனக் கருவி**

**வினா 21666—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தென்னந்தோப்புக்கு சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் மானிய விலையில் அரசு வழங்குவது அறிந்து மிகவும் பிற்படுத்தப்பட்ட சிறு விவசாயிகள் எவ்வளவு பேர் மனு செய்து உள்ளனர்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு அரசு சொட்டு நீர்ப்பாசனக் கருவி வழங்கி உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தென்னந்தோப்பிற்கு சொட்டு நீர்ப்பாசனம் கோரி மிகவும் பிற்படுத்தப்பட்ட சிறு விவசாயி ஒருவர் விண்ணப்பித்தார்.

(ஆ) விண்ணப்பித்த ஒரு விவசாயிக்கு (பரப்பு 0.800 ஹெக்டேர், மானியம் ரூ. 8,080/-) சொட்டு நீர்ப்பாசன அமைப்புகள் மானிய விலையில் அமைக்கப்பட்டன. மானியத்துடன் கூடிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**22—**

**உதவித்தொகை**

**வினா 21667—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பெய்த கடும் மழையால் காவிரி டெல்டா பகுதியில் உள்ள அறுவடைக்கான நெல் பாதிக்கப்பட்டது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கர் நெல் பாதிக்கப்பட்டது?

*(இ) அதன் மதிப்பு எவ்வளவு?*

*(ஈ) இதில் பாதிக்கப்பட்ட விவசாயிக்கு அரசு எவ்வளவு உதவித்தொகை வழங்கியுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) 2002 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பெய்த கடும் மழையினால் காவிரி டெல்டா பகுதியில் அறுவடை நிலையில் உள்ள நெல் பயிர் பாதிக்கப்பட்டது என்பது அரசுக்குத் தெரியும்.*

*(ஆ) பாதிக்கப்பட்ட பரப்பு 1,50,000 ஹெக்டர் ஆகும்.*

*(இ) ரூ. 190.86 கோடி (தோராய மதிப்பு)*

*(ஈ) அரசு ஆணை எண் 76, வருவாய்த் துறை, நாள் 12-2-2002 மூலம் ரூ.2,500/- வீதம் பாதிக்கப்பட்டுள்ள 1,50,000 ஹெக்டேர் நெல் பரப்பிற்கு ரூ.37.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.*

**23—**

### தென்னை சாகுபடி

**வினா 22577—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாட்டில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் கார்போசல்பான் மருந்து கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் கார்போசல்பான் மருந்து கிடைக்க அரசால் எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படவில்லை.*





**24—**

### பயிர்க் காப்பீடு

**வினா 23166—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சங்கராபுரம் தொகுதியில் விவசாயம் அதிகமாக உள்ளதால், பயிர்க் காப்பீடு திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பயிர் காப்புறுதித் திட்டம் 2000-2001 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேர்ந்தெடுக்கப்படும் வட்டாரங்களில் தெரிவு செய்யப்பட்ட பயிர்களுக்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வழிமுறையில் சங்கராபுரம் வட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் பெறும் விவசாயிகளுக்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.*

*2000-2001-ல் சங்கராபுரம் வட்டத்தில் சேர்க்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட்ட பிரிமியம் தொகை ஆகிய விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-*

| | | |
|---|---|---|
| விவசாயிகளின் எண்ணிக்கை | : | 1897 |
| ஈட்டுறுதி செய்த பரப்பளவு | : | 2205 ஹெக்டேர் |
| ஈட்டுறுதி செய்த தொகை | : | ரூ. 220.03 இலட்சம் |
| செலுத்தப்பட்ட பிரிமியத் தொகை | : | ரூ. 3.11 இலட்சம் |

25—

### தென்னங்கன்றுகள் விற்பனை

**வினா 23195—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் அரசின் மூலம் விற்பனை செய்யப்பட்ட தென்னங்கன்றுகள் எத்தனை?*

*(ஆ) அத்தென்னங்கன்றுகள் மாவட்டத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2001-2002ஆம் ஆண்டில் 30,000 நெட்டை இரக கன்றுகளும், 17,000 நெட்டை x குட்டை இரக கன்றுகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

*(ஆ) மேற்படி தென்னங்கன்றுகள் யாவும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பிச்சிவாக்கம் அரசு தென்னை நாற்றுப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.*

26—

### டானிடா திட்டம்

**வினா 28954—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் செயல்படுத்தப்படும் டானிடா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

டென்மார்க் அரசு நிதி உதவியுடன் டான்வா பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் சிறு மற்றும் மிகச் சிறு பெண் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கீழ்க்கண்ட தலைப்பில் கீழ்க்கண்ட விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது:-





புதுக்கோட்டை மாவட்டம் 2002-2003-க்கான குறியீடு

| | | |
|---|---|---|
| 1. | தொழில்நுட்ப அடிப்படைப் பயிற்சி | 14 எண்கள் |
| 2. | சக பண்ணை மகளிர் பயிற்சி | 8 எண்கள் |
| 3. | குழு நிலைப்படுத்தும் பயிற்சி | 14 எண்கள் |
| 4. | குழு சார்ந்த பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி | 8 எண்கள் |
| 5. | பண்ணை மகளிர் ஒருங்கிணைப்பு கருத்தரங்கு, இத்திட்டம் 31-3-2003-ல் முடிவுக்கு வருகிறது. | 2 எண்கள் |

27—

### வேளாண்மை மையங்கள்

**வினா 30319—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை பஞ்சாயத்துகளிலிருந்து வேளாண் விரிவாக்கத் துணை மையங்கள் அமைக்க வேண்டி அரசுக்கு விண்ணப்பங்கள் வந்தது?*

*(ஆ) அதில் எவ்வளவு பஞ்சாயத்துகளில் வேளாண்விரிவாக்கத் துணைமையங்கள் அமைக்கப்பட்டுள்ளன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சின்னத் திருப்பதி, நாலுவேதபதி, கந்தம்பாளையம், தத்தாதிரிபுரம், குளத்தூர் நாயக்கன்பட்டி, கள்ளிமேடு,*

[2003 ஜனவரி 30

உப்பளச்சேரி ஆகிய பஞ்சாயத்துகளிலிருந்து விரிவாக்கத் துணை மையங்கள் அமைக்க வேண்டி அரசுக்கு விண்ணப்பங்கள் வந்தன.

(ஆ) அரசின் நிர்வாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த அனைத்துத் துறைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அனைத்துச் செலவினங்களிலும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் நிதிநிலைக் குழு முடிவு செய்துள்ளதால், வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத அல்லது சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்படாத புதிய திட்டங்களுக்கு இந்நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. மேற்படி அறிவிப்பினை நிதிநிலைக் குழு தளர்வு செய்தால் மட்டுமே புதிதாக வேளாண் விரிவாக்கத் துணை மையங்கள் அமைக்க இயலும்.

28—

**படிக்கட்டுப் பயணம்**

**வினா 8222—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓடும் பஸ்ஸில் படியில் நின்றுகொண்டு பயணம் செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

சென்னை மாநகரில் இயங்கும் பேருந்துகளில், அலுவலக நேரங்களில் மட்டும் பயணிகள் கூட்டம் சற்று அதிகமாகக் காணப்படும். இத்தகைய நேரங்களில் நெரிசலைக் குறைப்பதற்கும், பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு ஏதுவாகவும், படிக்கட்டுப் பயணங்களைத் தவிர்க்கும் நோக்கத்திலும், முக்கிய இடங்களுக்கு, வெட்டுத் தடங்கள் (Cut Services)/ குறுகிய வழித்தடங்கள் (Short distance routes) சிறப்புப் பேருந்துகள் போன்றவை இயக்கப்படுகின்றன. இதனால் பயணிகளிடையே ஓரளவு படிக்கட்டுப் பயணம் குறைந்துள்ளது. மேலும் படிக்கட்டுப்



2003 ஜனவரி 30]

பயணங்களினால் ஏற்படும் விளைவுகளைக் குறிக்கும் சொற்றொடர்கள் பேருந்துகள் அனைத்திலும் பொதுமக்கள்/பயணிகள் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஏறும்/இறங்கும் வழிக்கருகே எழுதப்பட்டுள்ளன.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

29—

**பயணிகள்**

**வினா 14391— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் பேருந்துகளில் அதிகப்படியான பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தடுக்கும் வகையில் அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்.

தனியார் பேருந்துகளில் அதிகப்படியான பயணிகளை ஏற்றிச் செல்லும்பொழுது போக்குவரத்துத் துறையைச் சார்ந்த வாகன ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு செய்து, தவறு செய்யும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு மோட்டார் வாகனச் சட்டம் 1988-ல் பிரிவு 86 (1)-ன்படி சோதனை அறிக்கைகள் வழங்க, விளக்கம் பெற்று அதற்குண்டான இணக்கத் தொகையினை அபராதமாக வசூலிக்கின்றனர் (அல்லது) அனுமதி தடை செய்யப்படுகிறது.

30—

**ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி**

**வினா 19642—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 30

(அ) சேலம் கந்தம்பட்டி, கோனேரிக்கரை ஏரியில் பஸ் உரிமையாளர்கள் சங்கத்திற்கு, ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்க இடம் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. சேலம் கந்தம்பட்டி கிராம புல எண் 59/1-ல் 0.76.0 ஹெக்டேரில் உள்ள நிலம், சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட ஒதுக்கப்பட்ட இடத்திற்கு எதிர்புறத்தில் உள்ளதால் இந்நிலத்தினை சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்ச்சித் தளம் அமைக்க ஒதுக்கீடு செய்யக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் நிலம், மாவட்ட பஸ் உரிமையாளர்கள் சங்கத்திற்கு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்க ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**31—**

## நிலம் ஆர்ஜிதம்

**வினா 25718—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனம்பாக்கம் பேரூராட்சி எல்லையில் விமான தளத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய மத்திய அரசு நிதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த புல எண்களில் எவ்வளவு இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

(இ) அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கியுள்ளது?



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை. எனினும், இந்திய விமான நிலையங்களின் கட்டுப்பாட்டுக் குழுமம் (சர்வதேச விமான நிலையங்கள் பிரிவு) இதற்காக நிதி ஒதுக்கியுள்ளது.

(ஆ) புல எண் 113/2ஏ மற்றும் பலவற்றில் 9.31.5 ஹெக்டேர் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) இந்திய விமான நிலையங்களின் கட்டுப்பாட்டுக் குழுமம் (வி.பி.) தனது நிதிநிலை அறிக்கையில் ரூ. 3 கோடி இதற்காக நிதி ஒதுக்கியுள்ளது.

**32—**

## ஓட்டுநர் உரிமம்

**வினா 26529—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாகன ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்க தனிப் படிப்பு (கோர்ஸ்) வைத்து அதில் தேறியவர்களுக்கு மட்டுமே உரிமம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1988ஆம் வருட மத்திய மோ[illegible]னச் சட்டம் மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் [illegible], 18 வயது பூர்த்தியடைந்த, எழுத படிக்கத் தெரிந்த அனைவருக்[illegible] பொதுச் சாலையில் வாகனத்தை ஓட்டிட ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் நிறுவப்பட்ட, சென்னை

[2003 ஜனவரி 30

மறைமலைநகரில் இயங்கி வருகின்ற ஐ.ஆர்.டி என்ற சிறப்பு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் கனரக வாகனம் ஓட்டிட ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டு ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறிய் மற்றும் பெரிய நகரங்களில் அரசின் அனுமதி பெற்று இயங்கி வருகின்ற ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் அனைத்து வாகன ஓட்டுநர்களுக்கும் ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதால் வாகன ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்க தனிப் படிப்பு (கோர்ஸ்) நடத்தி உரிமம் வழங்கும் நிலை ஏழாது.

33—

**விவசாய மின் இணைப்பு**

**வினா 12184—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 வரை எடப்பாடி தொகுதி முழுவதும் விவசாய மின் இணைப்பு கோரி மனு செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 வரை எடப்பாடி தொகுதி முழுவதும் விவசாய மின் இணைப்பு கோரி மனு செய்தவர்கள்—சேலம் மின் பகிர்மான வட்டம் 377, மேட்டூர் மின் பகிர்மான வட்டம் 3,784 ஆக மொத்த எண்ணிக்கை 4,161.

(ஆ) மேற்கண்ட மனு செய்தவர்களில் 2000-2001 வரை மின் இணைப்பு பெற்றவர்கள் சேலம் மின் பகிர்மான வட்டத்தில் - 137.



2003 ஜனவரி 30]

மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் - 1,621 ஆக எடப்பாடி தொகுதி முழுவதும் மனு செய்தவர்களில் மின் இணைப்பு பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 1758 ஆகும். நிலுவையில் உள்ள விவசாய மின் இணைப்பு கோரிய விண்ணப்பங்கள் - 2403.

34—

**மின் வசதி**

**வினா 16515—திரு. நா. சந்திரமோகன்:-** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தாண்டவன்குளம் ஊராட்சியில் கிழக்கு தெரு, வடக்கு தெரு இணைப்புச் சாலையில் புதிய மின் கம்பம் அமைத்து மின் வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, தாண்டவன்குளம் ஊராட்சியில் கிழக்கு தெரு, வடக்கு தெரு இணைப்புச் சாலையில் புதிய மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு மின் வசதி செய்து தர அரசிடம் திட்டம் ஏதுமில்லை. பஞ்சாயத்தில் இருந்து முழு தொகையையும் தாங்களே செலுத்தி மின் வசதி செய்துகொள்ளும் விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை. இத்தெருவில் குடியிருப்பவர்கள் எவரிடமிருந்தும் வீட்டு மின் இணைப்பு கோரி விண்ணப்பமும் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்படின் உடன் மின் வசதி செய்து கொடுக்கப்படும்.

[2003 ஜனவரி 30

35—

**மணல்**

**வினா 18389—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், சோளகிராமணி பகுதியில் செங்கல் சூளைக்காக பெரும் அளவில் மண் எடுக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ ஆம் எனில், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி - வேலூர் மற்றும் திருச்செங்கோடு வட்டத்தில் செங்கல் சூளைக்கு உரிய அனுமதியில்லாமல் மண் எடுப்பது தடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி விண்ணப்பக் கட்டணம் ரூ.1,500/- செலுத்தி செங்கல் சூளைக்கு மண் எடுக்க அனுமதி வேண்டி மொத்தம் 12 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அவ்விண்ணப்பங்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கபபட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

36—

**தனியார் மின் நிலையம்**

**வினா 20361—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை மின் நிலையங்கள் உள்ளன?

(ஆ) இதில் அரசு மின் நிலையம், தனியார் மின் நிலையம் எத்தனை?

(இ) இதில் உற்பத்தியாகும் மின்சாரம் எவ்வளவு மெகாவாட்?



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 45 மின் நிலையங்கள் உள்ளன.

(ஆ) (1) தமிழ்நாடு மின்வாரிய மின் நிலையங்கள் 37

(2) தனியார் மின் நிலையங்கள் 5

(3) மத்திய அரசின் மின் நிலையங்கள் 3

(இ) தோராயமாக மின் உற்பத்தித் திறன் 78.5 மெகாவாட் ஆகும். தமிழகத்தின் மின் உற்பத்தியானது மின் உற்பத்தி நிலையங்களில் உள்ள மின் இயந்திரங்களின் இருப்பினைப் பொறுத்தும் மற்றும் பருவ நிலையினைப் பொறுத்தும் மாறும். தமிழ்நாடு தன்னுடைய உச்சகட்ட மின் தேவையாக 6809 மெகாவாட் என்ற அளவினை 28-6-02 அன்று எட்டியது. இந்த மின்சாரம் கீழே கொடுக்கப்பட்ட மின் உற்பத்தியின் மூலமாக ஈடுசெய்யப்பட்டது.

| வரிசை எண் | மின் நிலையம் | மெகாவாட் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மின்வாரிய அனல் மின் நிலையங்களின் உற்பத்தி மூலம் | 938 |
| 2. | தமிழ்நாடு மின்வாரிய அனல் மின் நிலையங்கள் மற்றும் வாயு மின் நிலையங்கள் உற்பத்தி மூலம் | 2905 |
| 3. | மத்திய மின் நிலையங்களிலிருந்து பெற்ற பங்கு | 1848 |
| 4. | பிற பிராந்தியங்களிலிருந்து பெற்ற மின்சாரம் | 88 |
| 5. | தனியார் மின் நிலையங்களிலிருந்து பெற்ற மின்சாரம் | 744 |
| 6. | காற்றாலை மின் உற்பத்தி | 286 |
| | ஆக மொத்தம் | 6809 |

37—

## தெரு விளக்கு வசதி

**வினா 20855—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் லாரப்ஷா தர்க்கா தெருவில் மின் விளக்கு வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) பண்ருட்டி தொகுதி, லாரப்ஷா தர்க்கா தெருவில் மின் விளக்கு வசதி கோரி பண்ருட்டி நகராட்சியினரிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் அளித்து உரிய மதிப்பீட்டுத் தொகையை செலுத்தினால் உடன் மின் விளக்குகள் அமைத்துத் தரப்படும்.*

*(ஆ) பண்ருட்டி நகராட்சி விண்ணப்பம் அளித்து பங்களிப்புத் தொகை செலுத்தியபின் ஒரு மாத காலத்திற்குள் மின் விளக்கு அமைத்துத் தரப்படும்.*

38—

## மின் வசதி

**வினா 20857—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் 5-வது வார்டில் மாரியம்மன் கோயில் பின்புறம் உள்ள பகுதியில் மின் கம்பங்கள் அமைத்து மின் வசதி செய்துதர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் 5-வது வார்டு மாரியம்மன் கோயில் பின்புறம் உள்ள பகுதியில் 3 எண்கள் 140 வாட்ஸ் குழல் மின் விளக்குகள் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதியாகி ரூ.8,825/- செலுத்த 13-08-2002 தினத்தன்று பண்ருட்டி நகராட்சிக்கு கோரிக்கை கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலை 110 மீட்டர் கம்பி இழுத்து 3 விளக்குகள் அமைக்க வேண்டியதாகும். மேற்படி மதிப்பீட்டுத் தொகை 19-10-2002 வரை செலுத்தப்படவில்லை.*

*(ஆ) மேற்படி மதிப்பீட்டுத் தொகையை நகராட்சி செலுத்தியவுடன் ஒரு மாத காலத்திற்குள் மின் விளக்கு அமைத்துத் தரப்படும்.*

39—

## மின் அழுத்தம் சீர்செய்தல்

**வினா 25487—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் துணை மின் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மக்கள் சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*ஆவுடையார் கோயில் பகுதியில் ஆவுடையார் கோயில் 66/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து ஒரு 11 கே.வி. மின்பாதை மூலமாக தற்சமயம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனை இரண்டு 11 கே.வி. மின் பாதைகளாக இயங்கும் வகையில் அங்கு (ஆவுடையார் கோயில்) ஒரு 33/11 கே.வி. துணை மின் நிலையம் புதியதாக அமைத்து அதன் மூலம் மின்சாரம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர அப்பகுதியில் கூடுதலாக மேலும் இரண்டு 11 கே.வி. மின் பாதைகளைக் கொண்டு மின் விநியோகம் செய்யும் வகையில்*

[2003 ஜனவரி 30

ஒரு 33/11 கேவி. ஆளில்லா துணை மின் நிலையம், ஆவுடையார் கோயிலை அடுத்த அமரடக்கி கிராமத்தில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இரு துணை மின் நிலையங்களை அமைக்கும் பணி 10-வது ஐந்தாண்டு திட்டத்தில் (2002-2007) சேர்க்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட துணை மின் நிலையங்கள் நிறுவியபின் அப்பகுதியில் குறைந்த மின்னழுத்தம் முழுமையாக சீர் செய்யப்படும்.

40—

## நிதி ஒதுக்கீடு

**வினா 20202—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜப்பான் நாட்டு நிதி நிறுவனத்துடன் இணைந்து வனத் துறை செயல்படுத்தும் டேப் (TAP) திட்டத்தில் இந்த வருடம் கோயம்புத்தூர் மண்டலத்திற்கு எவ்விதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிதி ஒதுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) கோவை மண்டலத்தில் 1999-2000, 2000-2001, 2001-2002 ஆம் வருடங்களில் (33 கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள வனப்பகுதியில்) எழுப்பப்பட்ட 12,330 எக்டேர் வனத் தோட்டங்களுக்கு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும் இடைத்தாங்கு மண்டலப் பணிகள் மேற்கொள்வதற்கும் நடப்பாண்டில் ரூ.213.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 40 சதவீதத்திற்குக் குறைவான மர அடர்த்தி உள்ள, தாம் குன்றிய வனப்பகுதி கோவை மண்டலத்தில் மேலும் இல்லாமையால், 2002-2003ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கோவை மண்டலத்திற்கு புதிய தோட்டங்கள் எழுப்ப செயல் இலக்கு மற்றும் அவற்றிற்காக நிதி இலக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



2003 ஜனவரி 30]

41—

## பகுப்பாய்வு

**வினா 24183—திரு அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டத்தில் செயல்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக் கழிவுகளின் மாதிரிகளைச் சேகரித்து குறிப்பிட்ட தன்மைகளைத் தர அளவுகோல்களுக்காக பகுப்பாய்வு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தில் இயங்கி வருகின்ற சாய மற்றும் சலவைப் பட்டறைகள் மற்றும் பிறவகை தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகத்தில் பரிசோதிக்கப்பட்டு வருகின்றது. மேலும் கரூர் மாவட்டத்தில் இயங்கி வருகின்ற 3 சிகப்பு வகை தொழிற்சாலைகள் அனைத்திலும், சுற்றுப்புறக் காற்றின் தன்மையினை அறிய காற்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டு திருச்சியில் இயங்கிவரும் வாரிய ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

42—

## மாசுக் கட்டுப்பாடு

**வினா 24186—திரு. அ.இரா. மலையப்பசாமி:-** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூரிலும், சுற்றுப்புறங்களிலும் நீர் மற்றும் காற்று மாசுபடுவதை தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் குறைப்பது பற்றிய விரிவான திட்டம் தீட்டுதல் பணிகளின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

[2003 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

கரூர் மாவட்டம், கரூர் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சாய மற்றும் சலவைப் பட்டறைகள் வெளியேற்றும் கழிவுநீரை, இப்பகுதியில் அமைந்துள்ள 8 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் 87 தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றது. காற்று மாசுபடுவதைத் தடுக்கும் பொருட்டு தொழிற்சாலைகள் காற்று மாசு தடுப்புச் சாதனங்களை அமைத்துள்ளதா எனவும், ஏற்கெனவே காற்று மாசு தடுப்புச் சாதனங்கள் பொருத்தியுள்ள தொழிற்சாலைகள் அவற்றை சரியாக பராமரித்து வருகின்றனவா என்பதையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகின்றது.

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில், மொத்தம் கரைந்துள்ள உப்புகளின் அளவு (Total Dissolved Solids) வாரியம் நிர்ணயித்துள்ள அளவான 2100 மி.கி. லிட்டர் என்ற அளவினை விட அதிகமாக உள்ளது கண்டறியப்பட்டதால் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வாரியம் நீர் மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம் 1974-ன்படி, கீழ்க்கண்ட உத்தாவுகளைப் பிறப்பித்துள்ளது:—

1. சாதாரண உப்பினைப் பயன்படுத்தி சாயமிடும் தொழிற்சாலைகள் அடர்சாய கழிவுநீரை தனியாகப் பிரித்து சூரிய ஒளி வெப்பத்தில் ஆவியாக்கும் படுகைகள் அமைத்தோ அல்லது பல்முறை ஆவியாக்கும் இயந்திரத்தின் மூலமோ ஆவியாக்க வேண்டும்.

2. சுத்தம் செய்யப்பட்ட சாயக் கழிவுநீரை மறுசுழற்சி செய்து உற்பத்திக்கே மீண்டும் பயன்படுத்த வேண்டியதற்கான திட்ட முன்வரைவு தயாரிக்க வேண்டும்.

3. சுத்தம் செய்யப்பட்ட கழிவுநீரின் நிறத்தை மேலும் நீக்கும்பொருட்டு வீரிய கரிவடிப்பான் மற்றும் உயர் அழுத்த மணல்வடிப்பான் ஆகியவற்றை அமைக்க வேண்டும்.

4. குறைந்த உப்பினைப் பயன்படுத்தக்கூடிய சாயமேற்றம் சிபாக்ரான் இரக சாயங்களைப் பயன்படுத்த வேண்டும்.



2003 ஜனவரி 30]

இது தவிர உற்பத்தி முறையின்போது ஏற்படும் மாசினை உற்பத்தி நிலையிலேயே குறைக்கும் தூய தொழில்நுட்பம் எனப்படும் கிளீனர் டெக்னாலஜி முறையை சாயத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு பயிற்றுவிக்கும்பொருட்டு வாரிய சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தின் மூலம் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காற்று மாசினைக் கட்டுப்படுத்தும்பொருட்டு கரூர் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் காற்று மாசு தடுப்புச் சாதனங்கள் அமைத்துள்ளன. இதன் பராமரிப்பினை வாரியம் கண்காணித்து வருகின்றது. வாகன புகையைக் கட்டுப்படுத்தும்பொருட்டு வாகனங்களின் உரிமம் புதுப்பிக்கப்படும்போது வாகனங்கள் வெளியிடும் புகையின் தன்மை, வாரியம் நிர்ணயம் செய்துள்ள அளவீடுகளுக்கு உட்பட்டு இருக்கின்றதா என்பதை ஆராய்ந்த பின்னரே வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தால் உரிமம் புதுப்பிக்கப்படுகின்றது.

43—

## அரசு மானியம்

**வினா 24315—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அரசு மானியம் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மானியம் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர் வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) சேலத்திலுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அரசு மானியம் வழங்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2003 ஜனவரி 30

44—

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 12050—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ஐந்தாங்கட்டளை பஞ்சாயத்து, முத்துமலைபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, முத்துமலை கிராமத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்றுநீரை ஏற்கெனவே இக்குடியிருப்பிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றி விநியோகம் செய்யப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஜூலை, 2003-க்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

45—

## சொந்தக் கட்டடம்

**வினா 25472—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி ஒன்றிய இராமநேரியில் இயங்கும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் சங்கத்திற்குச் சொந்தமாக அலுவலகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) இராமநேரி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து சங்கத்திற்குச் சொந்தமாக அலுவலகக் கட்டடம் கட்டித்தர ஒன்றியத்தில் எந்தவொரு நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. கட்டடம் கட்டித்தா ஏதுவான சூழ்நிலை தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

46—

## உதவித்தொகை

**வினா 16812—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர் குழந்தைகள் எத்தனை பேருக்கு டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து உதவித்தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதியாண்டில் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளைகள் மூலம் மொத்தம் 75 நெசவாளர் குழந்தைகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் 10-ஆம் வகுப்பில் முதல் மதிப்பெண் மற்றும் 12-ஆம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற 4 மாணவ/மாணவியருக்கு வழங்கப்பட்ட பரிசுத்தொகை மற்றும் உயர் கல்வியைத் தொடர இரண்டு, மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம் ஆண்டில் பயிலும் மாணவ/மாணவியர் 15 பேருக்கு 2001-2002 ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்ட உபகாரச் சம்பளமும் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து உதவித்தொகை என்னும் தலைப்பின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

[2003 ஜனவரி 30

47—

## மூலப் பொருட்கள்

**வினா 20208—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோராப்பட்டு, பம்பர்பட்டு, டசர்சில்க் ஆகிய மூலப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தொழிலாளருக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கிவரும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கோராப்பட்டு, பம்பர்பட்டு, டசர்சில்க் ஆகிய மூலப்பொருட்களை தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையம் (டான்சில்க்) காஞ்சிபுரம், தங்குதடையின்றி வழங்கி வருவதால் மேற்படி மூலப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து நெசவாளருக்கு வழங்க வேண்டிய தேவை எழவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

48—

## ஏலம்

**வினா 24310—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[illegible] இளைஞர்களுக்குத் [illegible]



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அரசாணைப்படி மீன்பாசி குத்தகை முன்னுரிமை அடிப்படையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீன்பாசி குத்தகை ஏலம் எடுக்க முன்வராத பட்சத்தில் பொது ஏலம் விடப்படும். மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகச் சேர்ந்தோ அல்லது பொது ஏலம் விடும் சமயம் அதில் கலந்துகொண்டோ மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள பட்டதாரி இளைஞர்களும் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

49—

## மீன்பிடிச் சாதனங்கள்

**வினா 26929—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதியிலுள்ள மீனவர்களுக்கு இலவச மீன்பிடிச் சாதனங்கள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை-**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:-**

(அ) மீனவர்களுக்கு இலவச மீன்பிடிச் சாதனங்கள் வழங்கிடும் திட்டம் ஏதும் அரசிடமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

50—

## சுற்றுலாத் தலம்

**வினா 23589—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, கோணங்குப்பம் கிராமத்தில் புனித பெரியநாயகி அன்னை ஆலயம் அமைந்திருக்கும் இத்தலம் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

விருத்தாசலம் தொகுதி, கோணங்குப்பம் கிராமத்தில் புனித பெரியநாயகி அன்னை ஆலயம் அமைந்திருக்கும் தலத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

## ஆறாம் பட்டியல்

1—

### சாலை சீரமைத்தல்

**வினா 903—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை-

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழுதடைநத சாலைகளைச் சரிசெய்ய உலக வங்கியின் ரூ.450 மில்லியன் நிதி ஒப்புதலுக்கு அனுப்பப்படவுள்ளது. உலக வங்கியின் ஒப்புதல் பெற்றபின், சாலை பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படும்.



2—

### சாலை சீரமைத்தல்

**வினா 1558—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணப்பாக்கம்-பள்ளூர் வழி திருமால்பூர் (அரக்கோணம்) சாலையைச் சீர் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள சாலை பணப்பாக்கம்-பள்ளூர் சாலையாகும். இச்சாலை 12.20 கி.மீ. நீளம் கொண்ட மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலையில் 7.80 கி.மீ. நீளத்திற்கு இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் (இரண்டாம் கட்டப் பணி) ரூ.30.00 இலட்சத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் பெற்று மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் மேற்படி பணி முடித்து சாலை சீர் செய்யப்படும்.

3—

### சாலை அகலப்படுத்துதல்

**வினா 13386—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், கோவிந்தப்பாடி பாலாறு வரையிலான வனப் பகுதி சாலையை

அகலப்படுத்தி பழுதடைந்துள்ள இடங்களைச் சீர் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையில் 1.8 கி.மீ. நீளப்பகுதி மட்டுமே பழுதடைந்துள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சாலையை அகலப்படுத்துவதற்கு ரூ.1.50 கோடி செலவாகும். ஆகையால் சமீப தருணங்களில் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

4—

## மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா 14028—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இந்த நிதியாண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக செலவு செய்யப்படும் தொகை எவ்வளவு?

(ஆ) அதன்கீழ் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 2002-03 ஆம் நிதியாண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.152.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2002-03 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:



| வ. எண் (1) | பணி (2) | தொகை (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | மாரப்பள்ளம் மற்றும் எடப்பள்ளியில் நீர்ப்பிரி முகடுகள் கட்டும் பணி | 28.10 |
| 2. | சிலஹல்வாவில் நீர்ப்பிரி முகடு கட்டும் பணி | 8.50 |
| 3. | குந்தாபள்ளம் நீர்ப்பிரி முகடு கட்டும் பணி | 11.00 |
| 4. | கடனாடு நீர்ப்பிரி முகடு கட்டும் பணி | 45.00 |
| 5. | குன்னூர் கட்டபெட்டு சாலை கி.மீ.8/10, 6/0-7/0, 8/6-9/0, 7/0-7/6, 5/4-6/0, 8/0-8/4 பகுதிகளை மேம்படுத்தும் பணி | 37.10 |
| 6. | கன்னிமாரா சாலை கி.மீ. 4/4-4/8 பகுதியை மேம்பாடு செய்யும் பணி | 5.00 |
| 7. | நாகப்பட்டினம் கடலூர்-மைசூர் சாலை கி.மீ.423/2-ல் சிமெண்ட் வடிகால்கள் கட்டும் பணி | 1.00 |
| 8. | நாகப்பட்டினம் கடலூர்-மைசூர் சாலை கி.மீ.423/6-ல் சிமெண்ட் வடிகால்கள் கட்டும் பணி | 1.50 |
| 9. | நாகப்பட்டினம் கூடலூர்-மைசூர் சாலை கி.மீ.423/6-ல் உள்ள குழாய்ப்பாலங்கள், பலகைப் பாலங்கள் ஆகியவற்றை திருத்திக் கட்டும் பணி | 1.50 |
| | மொத்தம் .. | 138.70 |

மீதமுள்ள ரூ.13.87 இலட்சத்தில் முந்தைய ஆண்டுகளில் முடிவடையாமல் எஞ்சியுள்ள கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

[2003 ஜனவரி 30

| வ. எண் (1) | பணி (2) | தொகை (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | உதகை கைகாட்டி சாலையில் கி.மீ. 5/8-ல் உள்ள சந்திப்பை அகலப்படுத்தும் பணி | 4.00 |
| 2. | சின்னக்குன்னூர் சாலையில் கி.மீ. 2/0-5/4 பகுதியை மேம்படுத்தும் பணி | 9.87 |
| | | 13.87 |

5—

### சாலை அகலப்படுத்தும் திட்டம்

**வினா 14676—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, பத்ரபள்ளி வழியாகச் செல்லும் வி. கோட்டா மலைப்பாதை கிராமப்புற சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய சாலை நிதியுதவித் திட்டத்தின்கீழ் கி.மீ. 45/4-46/4 மற்றும் கி.மீ.53/4-55/4 பகுதிகளை மட்டும் அகலப்படுத்தி உறுதிப்படுத்த அரசின் ஒப்புதல் பெற்று வேலை நடைபெற்று வருகிறது. மேலும் இச்சாலையில் உள்ள ஒருவழிப்பாதையினை இருவழிப்பாதையாக மேம்பாடு செய்ய வரும் நிதி ஆண்டுகளில் அரசு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2003 ஜனவரி 30]

6—

### தார்ச்சாலை அமைத்தல்

**வினா 15798—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதியைச் சேர்ந்த சிவந்திப்பட்டி—தீத்தம்பட்டி சாலை 3/0-4/4-1.40 கி.மீ. மராமத்து செய்து தார்ச் சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவந்திப்பட்டி-தீத்தம்பட்டி சாலையினை சீர்செய்து புதுப்பித்திட தோராயமாக ரூ.7.50 இலட்சம் தேவைப்படும். 2002-2003 ஆம் நிதியாண்டில் நிதி நிலைமைக்கு ஏற்ப புதுப்பித்தல் பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்சமயம் இச்சாலை வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

7—

### தார்ச் சாலையாக்குதல்

**வினா 15805—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி-திருநெல்வேலி சாலை பிரிவில் வில்லிசேரி 0/0 முதல் 1/2 கி.மீ. 1.20 சாலையை மராமத்து செய்து தார்ச் சாலையாக அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) : வில்லிசேரி பிரிவு சாலை கி.மீ. 0/0 - 1/2 வரையிலான பகுதிகள் 2001-2002ஆம் ஆண்டு காலமுறை புதுப்பித்தல் நிதியின்கீழ் ரூ.3.30 இலட்சத்திற்கு பணி முடிக்கப்பெற்று சாலை நல்ல நிலையில் உள்ளது.*

**8—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 15811—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி- அருப்புக்கோட்டை சாலையிலிருந்து கோவில்பட்டி தொகுதி, ரா. வெங்கடேஸ்வாபுரம் சாலை 0/0 முதல் 3/0 சாலையை மராமத்து செய்து தார்ச் சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) : இச்சாலையை மேம்பாடு செய்ய சுமார் ரூ. 11.00 இலட்சம் தேவைப்படும். மேலும் இப்பணி அரசு அனுமதி அளிக்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. நெடுஞ்சாலைத் துறையின் திட்டப் பணிகளுக்கு அதிக நிதியுதவி கிடைக்கும்பட்சத்தில் இப்பணியினைச் செயல்படுத்திட பரிசீலிக்கப்படும்.*



**9—**

**பயணியர் விடுதி**

**வினா 16142—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையில் அரசு பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): கந்தர்வக்கோட்டை பேரூராட்சியில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் ஓரத்தில் பயணியர் விடுதி அமைப்பதற்கு வேண்டிய நிலப்பகுதி ஏதும் இல்லை. மேலும், அரசின் முக்கியஸ்தர்கள் புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள பயணியர் விடுதி மற்றும் ஆய்வு மாளிகையில் தங்குவதால் கந்தர்வக்கோட்டையில் பயணியர் விடுதி அமைப்பதற்கான வாய்ப்புகள் ஏதும் எழவில்லை.*

**10—**

**நிதி ஒதுக்கீடு**

**வினா 23757—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நடப்பாண்டில் தமிழகத்தில் உள்ள அரசு கட்டடங்களை ரூ.110 கோடி செலவில் பழுதுபார்க்கவும், மேம்படுத்தவும் இவ்வரசு திட்டமிட்டுள்ளதா?*

[2003 ஜனவரி 30

(ஆ) ஆம் எனில், மிகவும் மோசமாக உள்ள உடுமலை குமாரலிங்கம், வாளவாடி, ஜல்லிபட்டி, பூலாங்கிணர், தேனூர்புதூர், மடத்துக்குளம் போன்ற அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளைப் பழுதுபார்க்க அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்படவுள்ள கடனுதவி மூலம் சென்னை மாநகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களிலுள்ள மிகவும் பழுதடைந்த அரசு கட்டடங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றை மட்டுமே பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வினாவில் வினவப்பட்டுள்ள ஊர்கள் மாவட்ட தலைநகரங்கள் இல்லாததால் இப்பள்ளிகளைப் பழுதுபார்க்கும் பணிகளை மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள இயலாது.

11—

## மனைப்பட்டா

**வினா 3937—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சி, கீழ்க்கண்டமங்கலம், நடுத்தெருவில் வசிக்கும் சுமார் 25 குடும்பங்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சி, கீழ்க்கண்டமங்கலம் கிராமம், நடுத்தெருவில்



2003 ஜனவரி 30]

வசிக்கும் உபரி ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்க கீழ்க்கண்டமங்கலம் கிராமத்தில் புல எண் 164/1, 164/2, 164/3, 164/4, 164/5 மற்றும் 164/6 ஆகியவற்றில் 0.46.5 ஹெக்டேர் நிலம் 17-02-1990-ல் கையகப்படுத்தப்பட்டது. இதை எதிர்த்து நில உரிமையாளர் 1990-ல் தொடுத்த வழக்கு 1991-ல் உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு அவர் மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் 1994-ல் வழக்கு தொடுத்து அந்த வழக்கு இன்று வரையில் நிலுவையில் இருந்துவருகின்றது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

12—

## பட்டா

**வினா 6317—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட வீரப்பெருமாநல்லூர் ஆதிதிராவிட காலனியில் பட்டா வழங்கிட இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட வீரப்பெருமாநல்லூர் கிராமத்தில் 1996-ஆம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. தற்போது நிர்வாக நடைமுறையில் உள்ள அறிவுரைகளின்படி ஒரு கிராமத்தில் நில எடுப்பு செய்து குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் கழிந்த பின்புதான் புதிய நில எடுப்பு நடவடிக்கை தொடர வேண்டும். இருப்பினும் வீரப்பெருமாநல்லூர் காலனி மக்களுக்கு மனைப்பட்டா வழங்க ஏதுவாக மேற்படி பண்ருட்டி தொகுதியில் உள்ள வீரப்பெருமாநல்லூர் கிராமத்திற்கு நில எடுப்பு பணி 2002-2003 நிதியாண்டில் முன் திட்ட நிரலில் (Action Plan) தற்போது சேர்க்கப்பட்டுள்ளது.

[2003 ஜனவரி 30

13—

## மயானக் கொட்டகை அமைக்கும் திட்டம்

**வினா 10687—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரை கோட்டகம் ஊராட்சி, சந்தானநல்லூர் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு மயானக் கொட்டகை அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரை கோட்டகம் ஊராட்சி, சந்தானநல்லூர் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு மயானக் கொட்டகை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

14—

## மனைப்பட்டா

**வினா 10690—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பள்ளிவர்த்தி ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர்களின் குடியிருப்புகளுக்கு மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பள்ளிவர்த்தி ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் மக்களிடமிருந்து வீட்டுமனைப்பட்டா கோரி மனுக்கள் ஏதும்



2003 ஜனவரி 30]

பெறப்படாததால் அவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

15—

## வீட்டுமனைப்பட்டா

**வினா 10703—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பைங்காட்டூர் ஊராட்சி, கடைத்தெரு கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்பு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பைங்காட்டூர் ஊராட்சி, கடைத்தெரு கிராம ஆதிதிராவிட மக்களிடமிருந்து வீட்டுமனை கோரும் கோரிக்கை எதுவும் வரப்பெறாததால் அவர்களுக்கு வீட்டுமனைபபட்டா வழங்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

16—

## குடியிருப்பு மனைப்பட்டா

**வினா 10704—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 30

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், 63. பைங்காட்டூர் ஊராட்சி, மேலபுத்தூர் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், 63. பைங்காட்டூர் ஊராட்சி, மேலபுத்தூர் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்க அப்பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை எதுவும் வரப்பெறாததால், நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை தற்போது பரிசீலனையில் இல்லை.

17—

### பட்டா

**வினா 10709 திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், 75. அக்கரை கோட்டகம் ஊராட்சி, காரம்பக்குடி மேலசாலை கிராமத்தில் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், 75. அக்கரை கோட்டகம் ஊராட்சி, காரம்பக்குடி மேலசாலை கிராமத்தில் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்கும்படியான கோரிக்கை எதுவும் அப்பகுதி மக்களிடமிருந்து



2003 ஜனவரி 30]

வரப்பெறாததால், வீட்டுமனை வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**18—**

### வீட்டுமனைப்பட்டா

**வினா 10712 —திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஒவரூர் ஊராட்சி, ஒவர்குடி, 10 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு குடியிருப்பு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஒவரூர் ஊராட்சி, ஒவர்குடி, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க நத்தம் வகைப்பாடுடைய இடத்தில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் (Rural Housing Scheme) 45 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் நில எடுப்பு செய்து பட்டா வழங்க தகுதியான நபர்கள் எவரும் இல்லை.

**19—**

### மயானக் கொட்டகை, சாலை வசதிகள்

**வினா 10715—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனம் ஆதிதிராவிடர் தெருவிற்கு சுடுகாடு சாலை அமைத்து, சுடுகாடு கொட்டகையும் கட்டிக் கொடுக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனம் ஆதிதிராவிடர்களுக்கு இடும்பாவனம் கிராமத்தில் மணிமுத்தாறு கரையில் மயானமும் மற்றும் அம்மயானத்திற்குப் பாதை வசதியும் ஏற்கெனவே உள்ளது.

**20—**

**கட்டுமானப் பணிகள்**

**வினா 12188—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகச் செயல்பட்டுவரும் கட்டுமானப் பணிகள் எத்தனை?

(ஆ) அதன் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக செயல்பட்டுவரும் கட்டுமானப் பணிகள்:

| | | |
|---|---|---|
| (1) மாணவியர் விடுதி | : | 2 |
| (2) மாணவர் விடுதி | : | 4 |
| (3) பள்ளிக்கூடம் | : | 1 |

(ஆ) மேற்படி வேலைகளில் பள்ளிக் கட்டடத்திற்கான பணி முடிவடைந்துள்ளது. ஏனைய பணியிடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.





**21—**

**இலவச வீட்டுமனைப்பட்டா**

**வினா 12715—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, நாடியம் ஊராட்சி, நவக்கொல்லை ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதிக்குட்பட்ட நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்களால் வீட்டுமனைப்பட்டா வழங்கிடக் கோரி எவ்விதமான கோரிக்கை மனுக்களும் கொடுக்கப்படவில்லை என்பதால் மேற்படி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை. கோரிக்கை வரப்பெறின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**22—**

**மயானச் சாலை**

**வினா 17683—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கற்கோயில் ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு மயானச் சாலை போட்டுக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கற்கோயில் ஊராட்சி, ஆதிதிராவிட மக்களுக்கு 2001-2002 ஆம் நிதி ஆண்டில்

[2003 ஜனவரி 30

எம்.பி.எல்.ஏ.டி.பி.திட்டத்தின்கீழ் மயானக் கொட்டகை கட்டித் தரப்பட்டுள்ளது. மயானச் சாலை நடைப்பு நிதி ஆண்டில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் அமைத்துத் தர நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

23—

**இலவச வீட்டுமனைப்பட்டா**

**வினா 18315—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்புன்கூர் ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு அருள்மிகு சிவலோகசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான மில்லடியில் உள்ள 3 ஏக்கர் நிலத்தை இந்து சமய அறநிலையத் துறை மூலம் வாங்கி இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உரிய நடவடிக்கை மாவட்ட ஆட்சியரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

24—

**இலவச வீட்டுமனைப்பட்டா**

**வினா 18449—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், கண்ணாக்குடி கிராமத்திற்கு ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக இலவச வீட்டுமனைப்பட்டா அரசு மூலம் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): லால்குடி வட்டம், கண்ணாக்குடி கிராம ஆதிதிராவிட மக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கக் கோரும் மனுக்கள் ஏதும் வரப்பெறாததால் நில ஆர்ஜித நடவடிக்கைகள் ஏதும் தற்பொழுது நிலுவையில் இல்லை. எதிர்காலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்கக் கோரி மனுக்கள் பெறப்படும்பட்சத்தில், அதற்கு ஏற்ப நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 19135—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சியில் மெய்யாப்புக்கோட்டகம், ஆதிதிராவிடர் பகுதியில் மயானச் சாலையை தார்ச் சாலையாக அமைத்துக் கொடுக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

26—

**நியாயவிலைக் கடை**

**வினா 17735—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 30

(அ) பண்ருட்டி தொகுதி, கீழிருப்பு கிராமத்தில் நியாயவிலைக் கடை கிளைக்கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கீழிருப்பு கிராம குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள பெரியகாட்டுப்பாளையம் தாய் நியாயவிலைக் கடையின் கட்டுப்பாட்டில் நடுக்காட்டுப்பாளையம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை இயங்கி வருவதால் கீழிருப்பு கிராமத்தில் இன்னொரு பகுதிநேர நியாயவிலைக் கடை திறந்தால் தாய்க்கடை விற்பனையாளரே மூன்று கடைகளையும் நடத்தவேண்டி வருவதால் அப்பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் பெற்றுக்கொள்வதில் மிகவும் சிரமமாக இருக்கும் என்பதால் கீழிருப்பு கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**27—**

## நியாயவிலைக் கடை திறத்தல்

**வினா 18600—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூர் கிராமத்தில் உள்ள அரசு நியாயவிலைக் கடை கட்டி முடிக்கப்பட்டு இதுவரையில் திறக்கப்படாமல் உள்ளதைத் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**



2003 ஜனவரி 30]

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூர் கிராமத்தில் பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்ட நியாயவிலைக் கடைக்கான கட்டடம் அங்குச்செட்டிப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டு நியாயவிலைக் கடை 06-09-2002 முதல் அங்கு செயல்பட்டு வருகிறது.

**28—**

## குடும்ப அட்டைகள் வழங்கல்

**வினா 19894—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்தில் 2000 நவம்பர் முதல் 2001 மார்ச் மாதம் வரை குடும்ப அட்டை வேண்டி எத்தனை பேர் மனு செய்துள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு எப்பொழுது குடும்ப அட்டைகள் கொடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்தில் 2000 நவம்பர் முதல் 2001 மார்ச் மாதம் வரை புதிய குடும்ப அட்டை கேட்டு 492 மனுக்கள் வரப்பெற்றன. அம்மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு தகுதியற்ற 252 மனுக்கள் முதலில் தள்ளுபடி செய்யப்பட்டன. மீதி 240 மனுக்களை விசாரணை செய்ததில், மனுதாரர்களில் சிலர் அதே முகவரியில் இல்லை எனவும், சிலர் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகின்றனர் எனவும், சில மனுதாரர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து நீக்கல் சான்றிதழ்கள் விண்ணப்பங்களுடன் கொடுக்கவில்லை எனவும் தெரிய வந்துள்ளதால் அந்த 240 விண்ணப்பங்களும் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டன.

[2003 ஜனவரி 30

29—

**கூட்டுறவு வங்கிக் கடன்**

**வினா 22725—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரக் கூட்டுறவு வங்கிகளில் 1996-2001 வரை பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் எவ்வளவு நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மொத்தத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் நகரக் கூட்டுறவு வங்கியில் 1996 முதல் 2001 வரை பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் 99 நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அதன் மொத்தத் தொகை ரூ.18.97 கோடி ஆகும்.

30—

**கடன்**

**வினா 22921—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், செவ்வாய்ப்பேட்டை கூட்டுறவு வங்கியில் 1996-2001-ல் ரூபாய் பத்து லட்சத்திற்கு மேல் எவ்வளவு நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மொத்தத் தொகை எவ்வளவு?



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் செவ்வாய்ப்பேட்டை கூட்டுறவு நகர வங்கியில் 1996-2001-ல் ரூபாய் பத்து லட்சத்திற்கு மேல் 9 நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அதன் மொத்தத் தொகை ரூ.1,76,75,000/- ஆகும்.

31—

**நுகர்வோர் கடன்**

**வினா 22925—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரக் கூட்டுறவு வங்கியில் நுகர்வோர் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1996-1997, 1997-1998, 1998-1999, 1999-2000, 2000-2001 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் நகரக் கூட்டுறவு வங்கியில் நுகர்வோர் கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) 1996-1997 முதல் 2000-2001 வரையுள்ள ஆண்டுகளில் கீழ்க்காணும் எண்ணிக்கையில் நுகர்வோர் கடன் வழங்கப்பட்டுள்ளது:—

[2003 ஜனவரி 30

| ஆண்டு | வழங்கப்பட்ட நுகர்வோர் கடன்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1996-1997 | 68 |
| 1997-1998 | 223 |
| 1998-1999 | 435 |
| 1999-2000 | 369 |
| 2000-2001 | 409 |

32—

### நியாயவிலைக் கடை பொருட்கள்

**வினா 28675—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நியாயவிலைக் கடைகளின் மூலமாக வழங்கப்படும் சர்க்கரை, அரிசி ஒரு இடத்திலும், மண்ணெண்ணெய் ஒரு இடத்திலுமாக வழங்கப்படுவதை மாற்றி, அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*மண்ணெண்ணெய்யின் நாற்றம் இதர பொருட்களுக்கு வரக்கூடாது என்பதற்காக நகர்ப்புறங்களில் இதுவரை 285 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களில் மண்ணெண்ணெய் மட்டும் வழங்கப்படுகிறது. மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் நிறுவப்படாத இடங்களில் அனைத்துப் பொருட்களும் நியாயவிலைக் கடைகளிலேயே வழங்கப்பட்டு வருகின்றன.*

33—

### அரிசி குடும்ப அட்டைகள்

**வினா 31199—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 ஜனவரி 30]

*2002 ஆம் ஆண்டு குடும்ப அட்டைதாரர் எவ்வளவு பேருக்கு தமிழக அரசு அரிசி கூப்பன் அட்டைகள் வழங்கியுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*தமிழகம் முழுவதும் 1,20,19,195 குடும்ப அட்டைதாரர்கள் அரிசி கூப்பன் பெற்றுள்ளனர்.*

34—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா 1388—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆண்டிமடம் தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி எத்தனை கிராமங்களில் அமைந்துள்ளது?*

*(ஆ) அவை இல்லாத கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(இ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ), (ஆ) மற்றும் (இ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள 422 ஊரகக் குடியிருப்புகளில் 242 குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. மேல்நிலைத் தொட்டி இல்லாத மீதமுள்ள 180 ஊரகக் குடியிருப்புகளில் 111 குடியிருப்புகளுக்கு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 69 ஊரகக் குடியிருப்புகளுக்கு செந்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்*

[2003 ஜனவரி 30

மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

35—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 2843— திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புதுத்தெரு அந்தோணியார்புரம் முதல் மேட்டுக்குப்பம் வரை மற்றும் மாதா கோயிலைச் சுற்றிலும் புதிய தார்ச் சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புதுத்தெரு அந்தோணியார்புரம் முதல் மேட்டுக்குப்பம் வரை மற்றும் மாதா கோயிலைச் சுற்றிலும் புதிய தார்ச் சாலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

36—

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா 5677—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரை கோட்டகம் ஊராட்சி, சந்தனநல்லூர் கிராமத்தில் ஆதிதிராவிட மக்களின் நலன் கருதி தொகுப்பு வீடுகள் கட்டி வழங்க அரசிடத்தில் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரை கோட்டகம் ஊராட்சியில் 1996-1997 ஆம் ஆண்டில் 20 வீடுகளும், 1988-1989 ஆம் ஆண்டில் 20 வீடுகளும் ஆக மொத்தம் 40 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எனவே 2001-2002 ஆம் ஆண்டில் மேற்படி ஊராட்சியில் வீடுகட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

37—

**தொகுப்பு வீடுகள்**

**வினா 8699—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு அதிகப்படியான தொகுப்பு வீடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் ஒதுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் கரூர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 258 வீடுகளில், விகிதாச்சார அடிப்படையில் கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு 29 தொகுப்பு வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

38—

**வீட்டு வரி**

**வினா 10327—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் எத்தனை வீடுகள் உள்ளன?

(ஆ) அதில் எத்தனை வீடுகள் வரி செலுத்துகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் 1,57,059 வீடுகள் உள்ளன.

(ஆ) அதில் 1,48,160 வீடுகள் வரி செலுத்துகின்றன.

**39—**

**வருவாய்**

**வினா 10333—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் எத்தனை தனியார் திருமண மண்டபங்கள் உள்ளன?

(ஆ) இதன் மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் இம்மாநகராட்சிக்கு வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் 90 தனியார் திருமண மண்டபங்கள் உள்ளன.

(ஆ) இதன் மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் இம்மாநகராட்சிக்கு ரூ.11,27,038 வருவாயாகக் கிடைத்துள்ளது.

**40—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 10425—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், சேந்தமங்கலம் கிராமம், வன்னியர் தெருவில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், சேந்தமங்கலம் கிராமம், வன்னியர் தெருவிற்கு குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு வெள்ளாற்றில் ஆழ்துளைக் கிணறு அமைத்து, 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் இராஜிவ் காந்தி தேசிய குடிநீர்த்திட்டக் குழுமத்தின் மூலம் பொதுமக்கள் பங்கேற்புடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மக்கள் பங்குத்தொகை 10 சதவீதம் செலுத்தியவுடன் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**41—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 12700—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கத்தேவன் ஊராட்சி, மீனவர் குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கத்தேவன் ஊராட்சி, மீனவர் குடியிருப்பு, அடைக்கத்தேவன் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பிற்கு 1999ஆம் ஆண்டு நிறைவேற்றபபட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் மூலம் தற்போது போதுமான

அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே மீனவர் குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க திட்டம் பரிசீலனையில் இல்லை.

42—

## தொகுப்பு வீடுகள் அமைத்தல்

**வினா 13821—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சோளப்பாடி கிராமத்தில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான தொகுப்பு வீடுகள் நடப்பாண்டில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் தொகுதி, சோளப்பாடி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வரும் ஆண்டுகளில் பெறப்படும் நிதி ஒதுக்கீட்டினைப் பொருத்தும், கிராம சபா மூலம் தேர்வு செய்வதின் அடிப்படையிலும், தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

43—

## விசைப்பம்புகள் பொருத்துதல்

**வினா 15191—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம், கயத்தாறு ஆகிய ஒன்றியக் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்களிலும், குடிநீர் பற்றாக்குறையுள்ள கிராமங்களிலும் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவற்றில் விசைப்பம்புகள் பொருத்தித் தர அரசு முன்வருமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம், கயத்தாறு ஒன்றியங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் மின்விசைத் திட்டம் செயல்படுத்தத் தேவையான நீர்கொடுதிறன் இன்மையால், அவற்றில் விசைப்பம்பு பொருத்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

44—

## தார்ச் சாலை வசதி

**வினா 17430—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரம், தென்பாதி வ.உ.சி. நகரில் தார்ச் சாலை வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரம், தென்பகுதி வ.உ.சி. நகரில் உள்ள சாலை 465 மீட்டர் நீளமுடையது. 1999-2002-ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டத்தின்கீழ் 165 மீட்டர் நீளத்தை தார்ச் சாலையாக ரூ.1.20 லட்சம் செலவில் அமைக்கப்பட்டது. மீதமுள்ள 300 மீட்டர் சாலையை தார்ச் சாலையாக மாற்ற ரூ.380 லட்சம் செலவாகும். நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், மேற்படி பணியை நகராட்சியால் எடுத்துச் செய்ய இயலவில்லை.*

[2003 ஜனவரி 30

45—

### குடிநீர் வழங்குதல்

**வினா 18940—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் மூங்கில் துறைப்பட்டு கிராமத்தில் குடிநீர்க் குழாய் அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மூங்கில் துரைப்பட்டு கிராமத்தில் வசிக்கும் சுமார் 5,500 மக்கள்தொகைக்கு 35 கைப்பம்புகளும், 5 மின் விசைப் பம்புகளும் உள்ளதால் போதுமான குடிநீர் வசதி உள்ளது. எனவே கூடுதல் குடிநீர் வழங்க புதிய திட்டம் ஏதும் செயல்படுத்தும்படியான தேவை தற்பொழுது எழவில்லை.

46—

### வசூல்

**வினா 20267—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் சொத்து வரி என்ற தலைப்பில் காலியிடங்களுக்கு காலியிட வரி வசூல் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2001-2002 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை எவ்வளவு? வசூல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு?



2003 ஜனவரி 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். 2001-2002 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ. 42.77 லட்சம். வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 5.14 லட்சம்.

47—

### கேபிள் தொலைக்காட்சிக்கு வரி

**வினா 20273—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் கேபிள் தொலைக்காட்சிக்கு வரி விதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டு வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். வைப்புத் தொகை ரூ. 8,15,000 மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்புக் கட்டண வசூல் ரூ. 1,28,500.

48 —

### நீர்வளம்

**வினா 8456—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்திற்கு சுற்றுப்புறச் சூழல் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் எவ்வளவு நிதி வழங்கியுள்ளது?

(ஆ) அதன்பொருட்டு மாநில அரசு செலவிட்டுள்ள நிதி எவ்வளவு?



225509

[2003 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) புவிச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டம் உள்ளிட்ட இந்திய நீர்வள ஆதாரங்களைக் கண்காணிக்கும் திட்டங்களுக்கு ஜனவரி, 1990 முதல் டிசம்பர் 2000 முடிய உள்ள காலத்தில், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு மொத்தம் ரூ. 37,04,975.00-ஐ நிதியாக வழங்கியுள்ளது.

(ஆ) மத்திய அரசின் நீர்வள ஆதாரங்களைக் கண்காணிக்கும் திட்டச் செலவினங்களின்பொருட்டு, மாநில அரசு இதுவரை தனியாக நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

49—

**மரம் வளர்ப்புத் திட்டம்**

**வினா 10498—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் மரம் வளர்ப்புத் திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் கீழ்க்கண்ட திட்டத்தின் மூலம் அதில் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் மரம் வளர்ப்புத் திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது:

**(1) சந்தன மரத்தோட்ட உற்பத்தித் திட்டம்**

(1) சேலம்

(2) தருமபுரி



2003 ஜனவரி 30]

(3) வேலூர்

(4) ஈரோடு

(5) கோயம்புத்தூர்

**(2) சிறு வனப் பொருட்கள் தோட்ட உற்பத்தித் திட்டம்**

(1) சேலம்

(2) தருமபுரி

(3) ஈரோடு

**(3) தடி மரத் தோட்ட உற்பத்தித் திட்டம்**

(1) தஞ்சாவூர் (தேக்கு)

(2) செங்கற்பட்டு (சிகப்பு சந்தன மரம்)

**(4) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நீலகிரி

**(5) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

(1) கோயம்புத்தூர்

(2) திண்டுக்கல்

(3) மதுரை

(4) விருதுநகர்

(5) திருநெல்வேலி மண்டலங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**(6) வனப் பாதுகாப்புத் திட்டம்**

சென்னை, வேலூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை மற்றும் திருநெல்வேலி.

**(7) தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்**

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 1997-1998 முதல் 2001-2002 ஆம் ஆண்டு வரை 27 மாவட்டங்களில் 1,000 திட்ட

[2003 ஜனவரி 30

கிராமங்களில் மரம் வளர்ப்புப் பணி செயல்படுத்தப்பட்டது. நடப்பு ஆண்டில் 18 மாவட்டங்களில் மொத்தம் 108 கிராமங்களில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

*(8)* மேலும், வன மேம்பாட்டுக் குழுமங்கள் மூலம் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசுக்கு ரூ. 132.28 கோடி பெறுமான திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

**50—**

**வருவாய்**

**வினா 24218—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சமூகக் காடுகளின் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் எழுப்பப்பட்ட சமூகக் காடுகள், தோட்டங்கள் மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் 912 ஹெக்டேர் பரப்பளவுகளை உள்ளடக்கிய 34 தோட்டங்கள் பொது ஏலமிடப்பட்டு அரசிற்கு ரூ. 24,94,050/- (ரூபாய் இருபத்தி நான்கு லட்சத்து தொண்ணூற்றி நான்காயிரத்து ஐம்பது மட்டும்) வருவாய் கிடைத்துள்ளது.



2003 ஜனவரி 30]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

**தியாகிகள் தினத்தையொட்டி பேரவை அலுவல்கள் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தியாகிகள் தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று (30-1-2003) காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலக பிரதான கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்.

## 3. தகவல் கோரல்

**(அ) சுயநிதிக் கல்லூரிகள் பிரச்சினை**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகளுடைய உரிமையாளர்களில்.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு ஒன்றும் கிடையாது. ஞானசேகரன், நேற்று மதியம் வைத்ததே இதற்காகத்தான். (குறுக்கீடு) நேற்று மதியம் வைத்ததே, நிறைய பேர் பேச வேண்டியிருந்தது, அதற்காகத்தான் வைத்தது.

## 4. கவன ஈர்ப்பு

**சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் ஏரிகளில் கருவேல மரங்கள் நடும் பணி தொடங்கப்படாதது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-இன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பல ஏரிகளில் சமூக நலக் காடுகள் திட்டம் மூலம் கருவேல மரங்களை மீண்டும் நட்டு வளர்க்க அரசு ஆணை பிறப்பித்தும் இன்னும் அப்பணி துவங்கப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

தமிழ்நாட்டின் விறகு மரத் தேவை 186 இலட்சம் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தேவையை, ஒதுக்கக் காடுகள் மூலம் கிடைக்கும் மரங்களின் மூலம் முழுமையாக ஈடு செய்ய முடியவில்லை. பலதரப்பட்ட பயன்பாடுகளைக் கருத்தில் கொண்டு அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டபின் பொதுப் பணித் துறை/ஊராட்சி ஒன்றியக் குளங்களின் கரைகளில்/படுகைகளில் மரங்கள் நடுவதற்கான நடைமுறையில் இருந்து வந்த தடை விலக்கப்பட்டது.

2. பாசனக் கண்மாய்களில் கருவேல மரங்களை வளர்ப்பதற்கு ஒரு எக்டேருக்கு ரூ.10,000/-வீதம் 2000 எக்டேருக்கு தமிழ்நாட்டில் 14 மாவட்டங்கள் தேர்வு செய்து (காஞ்சீபுரம், விழுப்புரம், கடலூர், தருமபுரி, திருச்சி, புதுக்கோட்டை, சேலம், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி) கருவேல மரங்கள் வளர்ப்பதற்கு ரூ.200.00 இலட்சம் வழங்கக் கோரும் கருத்துரு முதன்மை தலைமை வனப் பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. குளக்கரைகள் மற்றும் படுகைகளில் செடிகள் நடுவதற்காகவும் பராமரிப்பதற்காகவும் ரூ.145.00 கோடியில் சமூக வன அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டு அதற்கு உரிய பன்னாட்டு நிதி நிறுவனத்தின் நிதியுதவியைக் கோர மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்நோக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது





வனத் துறை மூலம் ஏரிகளிலே கருவேல மரங்களை நடுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாக 186 இலட்சம் டன் மரங்கள் விறகுக்காகத் தேவைப்படுகின்றன. அப்படித் தேவைப்படுகிற மரங்களுக்காக ஆங்காங்கு இருக்கக்கூடிய கிராமத்து மக்கள் காட்டையே அழித்துக்கொண்டு இருக்கக்கூடிய ஒரு நிலையைப் இன்று பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்க வேண்டும். அதேபோல பஞ்சாயத்து ஏரிகள், பொதுப் பணித் துறை மூலம் நிர்வாகம் செய்யப்படுகிற ஏரிகளில் எல்லாம் கருவேல மரங்களை நட்டு அதை வளர்ப்போம் என்று சொன்னால் அதிலே வரக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு — ஓரளவிற்கு பஞ்சாயத்திற்கும் பணம் கிடைக்கிறது—பொதுப் பணித் துறைக்கும் பணம் கிடைக்கிறது—இயற்கைச் சூழலை நாம் காப்பாற்றுகின்ற வகையில் காடுகள் அழிந்துகொண்டிருக்கக்கூடிய நிலையை மாற்றி அமைத்து இப்போது புதிதாக காடுகளை உருவாக்குகிற ஒரு திட்டமும் வரும் என்கிற காரணத்தினாலே இப்படிப்பட்ட ஆணை வேண்டுமென்று சட்டமன்றத்திலே பலமுறை நாங்களெல்லாம் வற்புறுத்தி இப்போது அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும்கூட, 14 மாவட்டங்களை அரசு தேர்வு செய்து 2 கோடி ரூபாய்க்கு மரம் நடுவதற்காக தலைமை வனப் பாதுகாவலரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டதாக நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய விவா அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். இந்த 2 கோடி ரூபாயில் எப்போது நீங்கள் இந்த மரங்களையெல்லாம் நட இருக்கிறீர்கள்? அதேபோல குளங்கள், படுகைகள் போன்ற இடங்களில் எல்லாம் இப்போது ரூ.145 கோடிக்கு ஒரு திட்டத்தை நிறைவேற்ற (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) அமைச்சருடைய அறிக்கையைவிட உங்கள் கேள்வி நீளமாக இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** அந்த விவர அறிக்கையிலும் நீங்கள் பன்னாட்டு நிறுவனத்தைக் கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை எப்போது கேட்டீர்கள்? அதற்கான பணம் எப்போது வரும்? எப்போது அந்தப் பணி தொடங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அவைக்கு அறிவிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் காடு வளர்ப்புத் திட்டத்திற்கு ஜப்பான் நாட்டிலிருந்து பணம் பெறப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் மூன்றில் ஒரு பங்கு காடு இருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் ஆறில் ஒரு பங்குதான் காடு இருக்கிறது. இதை மனதில் வைத்துக்கொண்டுதான் இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஜப்பான் நாட்டு நிதி நிறுவனத்திலிருந்து நிதி பெற்று இப்போது காடு வளர்ப்புத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருவேல மரம் வளர்ப்பதுபற்றிக் கேட்டிருக்கின்றார்கள். கடந்த ஆட்சியாளர்கள் அதற்குத் தடை விதித்திருந்தார்கள். அந்தத் தடையை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நீக்கியிருக்கின்றார்கள். தலைமை வனப் பாதுகாவலர் அவர்கள் 2 கோடி ரூபாய்க்கு கருத்துரு ஒன்றை அரசுக்கு அனுப்பியிருக்கின்றார்கள். கூடிய சீக்கிரத்தில் அது நிறைவேற்றப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10-05*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டு நிதி உதவியோடு காடுகளை வளர்க்கிற திட்டம் பல ஆண்டுகளாக தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் இப்போது சரிவர நடைபெறுவதே இல்லை. மரங்களை நடுகிறார்கள், அதோடு சரி. பிறகு அவற்றை வளர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்காத காரணத்தினாலேயும், தண்ணீர் போதாத காரணத்தினாலேயும் நட்ட மரங்களெல்லாம் பட்டுப் போய்விடுகின்றன. அதுவும் காட்டிலே எங்கேயாவது ஓரிடத்திலே கொண்டுபோய் நடுகிறபோது அங்கே இருக்கக்கூடிய வனத் துறையினர் முழுமையான கவனத்தை செலுத்துவதில்லை. ஆனால் சமூக நலக் காடுகள் என்பது தரை மட்டத்திலே இருக்கக்கூடிய ஒன்று. ஆகவே தரை மட்ட அளவிலேயே, ஊருக்குப் பக்கத்தில் இருக்கிற ஏரி, குளங்களில், அவற்றுக்குப் பக்கத்தில் நடுவதற்கும் நீங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். மேலும் இந்த 2 கோடி ரூபாய்க்கு இப்போதுதான் கருத்துருவைப் பெற்றுள்ளதாகச் சொல்கிறீர்கள். ஆனால் G.O. போட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. பல மாதங்கள் ஆகியும்கூட ஏன் இன்னும் அது செயல்முறைக்கு வரவில்லை?





அதேபோல, 145 கோடி ரூபாயை நீங்கள் பன்னாட்டு நிறுவனத்திடம் கேட்டிருக்கிறீர்கள். எப்போது கேட்டீர்கள்? பணம் எப்போது கிடைக்கும்? எந்த நிறுவனம் உங்களுக்குப் பணம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது? எத்தனை ஏக்கர் பரப்பளவிற்கு நீங்கள் இதை எல்லாம் நடவிருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 145 கோடி ரூபாயில் சமூக வன அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டு பன்னாட்டு நிதி நிறுவனத்தின் நிதியுதவியைக் கோரி மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிச்சயமாக கூடிய சீக்கிரத்தில் அது கிடைக்கும் என்று தலைவர் மூலமாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன் படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 மீதான ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு திரு ஆர். வைத்திலிங்கம் அவர்கள். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருந்தேன்...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. சாமிநாதன் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிக்கையைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 5. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

*(அ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 மீதான ஆய்வுக் குழு — தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)*

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 125 முதல் 130 வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அந்த நேரம் எல்லாம் முடிந்துவிட்டது.*



## 3. தகவல் கோரல் – தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு-தொடர்ச்சி.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** *தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பது குறித்து—*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அறைக்கு வாருங்கள், பேசுவோம்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்) – தொடர்ச்சி

### தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.* *(இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

[2003 ஜனவரி 30

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. கோவையில் ஒரு நவீன கோளரங்கு அமைப்பது குறித்தும்;

2. பாண்டியாறு - புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டம் குறித்தும்;

3. கோவை நகருக்கு பில்லூர் அணையிலிருந்து குடிநீர் கொண்டுவரும் இரண்டாவது பில்லூர் திட்டம் குறித்தும்;

4. சிமெண்ட் விலையைக் குறைக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும்;

5. தமிழகம் முழுவதும் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறப்பது குறித்தும்;

6. கோவையில் ஓர் நவீன, உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உள் அரங்கு அமைப்பது குறித்தும்;

7. தகுதியுள்ள கல்லூரிகளுக்குத் தன்னாட்சி உரிமை வழங்குதல் குறித்தும்;

8. வாலாங்குளம் புறவழிச் சாலை, ஒண்டிபுதூர், ஈச்சனாரி ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் பணி முடிப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



2003 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10-10*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. வேலூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்குதல் குறித்தும்;

2. வேலூருக்கு ஒகேனக்கல்லில் இருந்து காவிரி ஆற்று நீரைக் கொண்டுவரும் குடிநீர் திட்டம் குறித்தும்;

3. வேலூரை சுற்றுலா மையமாக மாற்றி வசதிகளைச் செய்ய வேண்டுமென்பது குறித்தும்;

4. ரிலையன்ஸ் கம்பெனி மூலம் ஜெயங்கொண்டம் மின்திட்டம் துவங்குவது குறித்தும்;

5. வேலூர் மாவட்டத்தில் புல்லூர் அணை, மேல் அரசம்பட்டு அணை, வெள்ளக்கல் அணை, பத்ரபல்லி மலட்டாறு அணை ஆகியவற்றைக் கட்டும் திட்டம் குறித்தும்;

6. வேலூர் மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டம் குறித்தும்;

7. வேலூரில் இருந்து காட்பாடிக்கு பாலாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம் குறித்தும்;

8. வேலூர் மாவட்டம் ஆலங்காயம் அடுத்துள்ள ஜவ்வாது மலையில் காவலூரில் இருந்து மந்தாரக் குட்டைக்கு சாலை அமைக்கும் திட்டம் குறித்தும்;

9. தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் கரும்பிலிருந்து எத்தனால் தயாரிக்கும் திட்டம் குறித்தும்;

10. வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் திட்டம் குறித்தும்;

11. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் குறித்தும்;

12. விவசாயிகளுக்கு மதிய உணவுக்குப் பதில் அரிசி வழங்கும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தல்லவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

1. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 65,000 சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு ரூ.15 கிடைக்க வழிவகை செய்வது குறித்தும்;

2. ஊட்டியிலுள்ள பிரசித்தி பெற்ற இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனியை தனியார் மயமாக்காமல் தடுக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வது குறித்தும்:

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு ரத்தினச் சுருக்கமாகப் பேசுவார். திரு. ஞானசேகரன் அவரையும் கெடுத்துவிட்டார். (சிரிப்பு) திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிற கல்லணைக் கால்வாய் பகுதிக்கு வறட்சி நிவாரணத்திலே ஏதும் திட்டங்கள் அறிவிக்கவில்லை. இது குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தம் கொடுத்ததை முன்மொழிய வேண்டும். (குறுக்கீடு) வழி மொழிவது வேறு.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அரசன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"வறுமையால் வாடுகிற சிறு மற்றும் குறு நில விவசாயிகளுக்கும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் இலவச மதிய உணவு என்பதற்குப் பதிலாக குடும்பத்திற்கு நாளொன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் ரூ.25-ம் நிவாரணம் வழங்குவது குறித்து" ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி,

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"வறுமையால் வாடுகிற சிறு மற்றும் குறு நில விவசாயிகளுக்கும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் இலவச மதிய உணவு என்பதற்குப் பதிலாக குடும்பத்திற்கு நாளொன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் ரூ.25-ம் நிவாரணம் வழங்குவது குறித்து" ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"வறுமையால் வாடுகிற சிறு மற்றும் குறு நில விவசாயிகளுக்கும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் இலவச மதிய உணவு என்பதற்குப் பதிலாக குடும்பத்திற்கு நாளொன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் ரூ.25-ம் நிவாரணம் வழங்குவது குறித்து" ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. பாலபாரதி முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

[2003 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. விவசாயிகளுக்கு வழங்கும் மதிய உணவுத் திட்டத்திற்குப் பதிலாக அவர்களுக்கு தினசரி ஒரு கிலோ அரிசி மற்றும் 25 ரூபாய் வழங்குவது குறித்தும்;

2. வீட்டுவசதித் துறை மூலம் வீடு பெற்று, அரசு ஏற்கெனவே நிச்சயித்த தொகையை முழுமையாகச் செலுத்தியும் இன்னமும் பத்திரம் கிடைக்காமல் இருப்பவர்களுக்கு பத்திரம் கிடைக்க உரிய ஏற்பாடு செய்வது குறித்தும்;

3. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு தரிசு நிலங்களை வழங்குவது குறித்தும்;

4. தமிழகத்தில் உற்பத்தியாகும் நதிகளின் தொடக்க இடங்களில் மழைதரும் பயன் மரங்களை நட்டு நீர்ப்பிடிப்பை உறுதி செய்யும் திட்டங்கள் குறித்தும்;

5. தமிழகத்தில் மூடிய ஆலைகளைத் திறப்பது குறித்தும்;

6. ஆண்டிப்பட்டி, மதுரை, அவனியாபுரம் ஆகிய பகுதிகளில் காற்றாலை, குப்பையிலிருந்து மரபுசாரா மின் உற்பத்தித் தொடங்கும் திட்டம் குறித்தும்;

7. தமிழ்நாட்டின் திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும்" ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. கணேசன் எடப்பாடிக்குச் சென்றுவிட்டாரா? திரு. கே.வி. முரளிதரன்.



2003 ஜனவரி 30]

**திரு. கே.வி. முரளிதரன்:** Hon. Speaker, Sir, I move the following amendment to the motion of thanks for the Governor's Address:—
"Add at the end, the following:

But regret to note that no mention is made about: "Grant of remunerative prices to the agricultural produces like Food Grains, Vegetables and Fruits, etc., in the Governor's Address.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. முரளிதரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"வேளாண் தொழிலாளர் குடும்பத்தினருக்கு மதிய உணவுக்குப் பதில் ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசி வழங்குவது குறித்து" ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

1. கோவையில் நடைபாதை வியாபாரிகளுக்கு தனி வணிக வளாகம் அமைத்துக் கொடுப்பது குறித்தும்;

2. கோவை மாவட்டத்தில் மூடிக்கிடக்கும் ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகளை மீண்டும் திறந்து இயக்கி பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வாய்ப்புகள் அளிப்பது பற்றிய திட்டம் குறித்தும்;

3. தங்க நகைத் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ்.மகேஸ்வரி முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

[2003 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"நாமக்கல் நகர் நெரிசல் மிகுந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் நகரைச் சுற்றி ஒரு சுற்றுப் பாதை (ring road) அமைப்பது குறித்து" ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு கு. ஜெயக்குமார் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

**•திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. கரூர் நகராட்சிப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

2. கரூர், தமிழ்நாடு காகித ஆலை வெளிவிடும் கழிவு நீரை எதிர்மறை சவ்வூடு செயல்முறை கலன்கள் (Reverse Osmosis Plants) மூலம் சுத்திகரிப்பு செய்யும் திட்டம் குறித்தும்;

3. கரூர் நகரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவிவரும் பெரும் குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவது குறித்தும்" ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.என். சிவசுப்பிரமணியன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டுக்கு இந்த மாமன்றத்திலே ஆளுநர் அவர்கள்



2003 ஜனவரி 30] [திரு. லா. சந்தானம்]

அளித்திருக்கின்ற உரையின்மீது அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தைப் பொறுத்தவரையிலே நல்ல பல கருத்துகளை எடுத்துச் சொல்கின்ற மன்றமாகவும், தங்களுடைய வாதங்களை எடுத்து வைத்து அதற்குரிய பரிகாரங்களைத் தேடுகின்ற மன்றமாகவும் அமைந்திருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம் எல்லாம். இந்த மன்றம் தரக்குறைவான விமர்சனங்களையும் பிரச்சினைகளையும் உருவாக்குகின்ற ஒரு மன்றமாக ஆகிவிடக்கூடாது. தமிழக சட்டமன்றத்திற்கு என்று ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தை மிக அமைதியாகவும் ஒழுங்காகவும் நடத்திச் செல்ல வேண்டும் என்கின்ற நிலையும் தங்களுக்கு உண்டு என்பதைக் கருத்தில்கொண்டு,

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்று சொல்லியிருக்கிறார் வள்ளுவர். எனவே எதிர்க்கட்சிகளாக இருந்தாலும்கூட, ஆளுங்கட்சியிலே இருக்கின்ற நல்ல தன்மைகளைப் பாராட்டுவதற்கு கற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதேபோல, ஏதாவது ஆளுங்கட்சியின் சார்பில் சில திட்டங்கள் சொல்வதற்கு விடுபட்டிருந்தாலும்கூட, அதை ஆக்கபூர்வமாக இந்த மன்றத்திலே எடுத்து வைத்து அதற்குரிய பரிகாரத்தைத் தேடுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதும், எதிர்க்கட்சியினுடைய கடமை என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த அளவிலே பல்வேறு நல்ல திட்டங்கள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. சட்டம்—ஒழுங்கு என்கின்ற நிலையில் கடந்த காலத்தில் நாங்கள் எல்லாம் அதை இருந்து கண்டவர்கள் என்கின்ற முறையில், அந்தச் சட்டம்-ஒழுங்கு என்பது நிச்சயமாக நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டிருக்கிறது, நிர்வகிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். மதத்தின் பெயரால் பழனி பாபா போன்றவர்கள், மதுரையில் இருந்த இராஜகோபாலன் போன்றவர்களுடைய படுகொலை எல்லாம் இன்றைக்குத் தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதேபோல, சாதிகளின் பெயரால் திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் ஏற்பட்ட கலவரத்தினால் பல பேர் உயிரிழக்க நேரிட்டது.

[திரு. லா. சந்தானம்] [2003 ஜனவரி 30

அதைப்போல, சிவகாசியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில்கூட, 3 பேர் உயிரிழக்க நேரிட்டது. தென்மாவட்டங்களில் இருக்கின்ற நாங்கள்தான் இந்தத் துயரங்களிலும் துன்பங்களிலும் மிகவும் கஷ்டத்தை அனுபவித்தவர்கள் என்கின்ற முறையில் இன்றைக்கு அந்த நிலைகள் எல்லாம் மாறி நிறைவாக இருக்கிறோம் என்கின்ற நிலையை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. இதைத்தான் நமது சங்க இலக்கியங்களிலேகூட,

*"நிலமும் உயிரன்றே; நீரும் உயிரன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"*

என்று சொன்னார்கள். ஒரு நாட்டிலே அபரிமிதமாக உணவுப் பொருட்களும், நீரும், வளங்களும் இருந்தாலும்கூட அங்கு சட்டம்—ஒழுங்கு சரியாக இல்லையென்று சொன்னால் அந்த மக்கள் ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ முடியாது; அவர்கள் அத்தனை வளங்களைப் பெற்றிருந்தாலும் நிறைவான வாழ்க்கை அவர்களுக்குக் கிடைக்காது என்பதைத்தான் நமது சங்க இலக்கியங்களிலே சுட்டிக்காட்டினார்கள்.

இன்றைக்கு இயற்கையினுடைய சீற்றத்தினால் தமிழ்நாட்டிலே வறட்சியால் பாதிக்கப்பட்டு, நெல் உற்பத்தியும், நீர் ஆதாரங்களும் குறைந்திருந்தாலும்கூட மன நிறைவாக அம்மாவினுடைய ஆட்சியிலே மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம்—ஒழுங்கு மூலமாக அது காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

முற்பகல் 10-20

அதேபோல, இன்றைக்கு ஆளுகின்ற கட்சியிலே இருக்கிறவர்கள், தங்களுக்கு வாக்களித்த மக்களை வஞ்சிக்கவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் பஞ்சத்தாலும், பசியாலும், பட்டினியாலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த ஆளுநர் உரையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு ஆளுநர் உரையைப் புறக்கணித்து அன்றைக்கு வெளிநடப்புச் செய்த எதிர்க்கட்சிகள் எல்லாம் குறிப்பிட்ட வாசகங்கள் இதுதான். வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடரவில்லை; வறட்சி நிவாரணப் பணிகளை அரசு எச்சரிக்கையோடு செய்வதற்குத் தவறிவிட்டது; தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இந்த அரசு உதவி செய்ய வேண்டும் என்கின்ற



2003 ஜனவரி 30] [திரு. லா. சந்தானம்]

கோரிக்கைகளைத்தான் வைத்து அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். ஆனால் இந்த ஆளுநர் உரையிலே, தமிழகத்தில் இருக்கின்ற 28 மாவட்டங்களையும், சென்னை நீங்கலாக, வறட்சிப் பகுதியாக அறிவித்திருக்கிறோம் என்று சொல்கின்ற நிலையை ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, வறட்சி பாதித்த அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற விவசாயிகள் தாங்கள் விவசாயம் செய்த அந்த விவசாயத்தினுடைய மகசூலைப் பெற முடியவில்லை, காய்ந்து விட்டது என்கின்ற நிலைமை ஏற்படுமேயானால், அந்த நிலைமைகளை ஆராய்ச்சி செய்து ஏக்கர் ஒன்றுக்கு 5000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு கோரிக்கையாக வைத்து இருக்கிறார்கள். ஆக நீங்கள் எதைச் சொன்னீர்களோ, எதைக் கேட்டீர்களோ, எதற்காக வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதை உணர்ந்து இந்த ஆளுகின்ற கட்சியும், மக்களுடைய வாக்குகளைப்பெற்று, தமிழக மக்களுடைய ஆதரவோடுதான் ஆட்சிப் பொறுப்பிலே ஏறியிருக்கிறது. அந்த மக்களைப் பாதுகாக்கின்ற கடமையும், கண்ணியமும் அவர்களுக்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்ற அளவிலேதான் ஆளுநர் அவர்களே தனது உரையிலே அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே இன்றைக்கு இருக்கின்ற இந்த வறட்சி நிலைமையில் விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஆனால் ஆளுகின்றவர்களுக்கு என்று சில சிரமங்கள் உண்டு. இதையே இங்கு இருக்கின்ற அத்தனை பேரும் நாங்கள் கடந்த காலங்களிலெல்லாம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், அரசு வங்கிகளின் மூலமாகவும் பெறப்பட்ட கடன்களை, கடந்த சில ஆண்டுகளாக பருமழை பொய்த்துவிட்ட காரணத்தினால் கட்ட முடியவில்லை என்று வாதாடுகின்ற நேரத்தில் அன்றைக்கு அதைத் தள்ளுபடி செய்ய முடியவில்லை என்கின்ற நிலை இருந்தது. அதற்கு அனைவரும் வாதாடினோம். இந்த அரசு வந்து அதைத் தள்ளுபடி செய்தது அதையும் நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தேயிலை விவசாயிகள் நீலகிரி மாவட்டத்திலே போராட்டம் நடத்தினார்கள். அதற்கு ஒரு தீர்வை இந்த அரசு கண்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அப்படி அன்றைக்கு ஆளுகின்ற நிலையிலே இருந்தவர்களுக்கு அதைச் செய்ய முடியவில்லை. சில சங்கடங்கள் இருந்தன. ஆனால் இன்றைக்கு ஆளுகின்றவர்களுக்கும்

நாம் சொல்கின்ற சில காரியங்களைச் செய்ய முடியாத அளவிலே சில சங்கடங்கள் இருக்கத்தான் செய்யும் என்பதை நாம் உணர்ந்துதான் ஆக வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் ஏழை விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பட்டினியால் வாடி விடக் கூடாது என்கின்ற காரணத்திற்காக சத்துணவுக் கூடங்களிலே இன்றைக்கு அவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது என்கின்ற நிலையை இந்த அரசு எடுத்திருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சிகள் எல்லாம் என்ன கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், உணவு வழங்குவதற்குப் பதிலாக அரிசியாக வழங்கினால் நன்றாக இருக்கும் என்கின்ற கருத்தைச் சொல்கிறார்கள். நானும் என்னுடைய கருத்தாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்வது எல்லாம் நேற்றைக்குக்கூட நமது நிதியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, யாருக்கும் குறைவு இல்லாத அளவிற்கு அவர்கள் எவ்வளவு சாப்பிட முடியுமோ. அந்த அளவு உணவு வழங்கச் சொல்லியிருக்கிறோம். அதற்காக நபர் ஒன்றுக்கு 200 கிராம் அரிசி வழங்குகிறோம் என்கின்ற நிலையை இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சத்துணவுக் கூடங்களிலேயெல்லாம் இருக்கின்ற பாத்திரங்கள் அங்கு இருக்கின்ற அந்தப் பிள்ளைகளுக்கு சமைத்துப் போடுவதற்குப் போதுமான அளவிற்குதான் வழங்கப்பட்டு இருக்கின்றன.

நான்கூட, சென்ற 26 ஆம் தேதி குடியரசு தினத்தன்று சில இடங்களிலே மக்கள் சேவைக் கூட்டங்களிலே கலந்துகொள்ளச் செல்கின்ற நேரத்திலே அந்தக் கிராம மக்களெல்லாம் என்னிடத்திலே சொன்னது; உணவு கொடுக்கிறார்கள்; ஆனால் இங்கு 100 பேர், விவசாயிகள் தங்களுடைய பெயர்களைப் பதிந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அங்கு இருக்கின்ற குழந்தைகளுக்கும் இவர்களுக்கும் சேர்த்து சமையல் செய்கின்ற நேரத்திலே, போதுமான சமையல் பாத்திரங்கள் இல்லை. ஆகையால், அவர்களுக்கு உரிய நேரத்திலே சமைத்துக் கொடுப்பதற்கு இயலவில்லை என்கின்ற நிலையைச் சொன்னார்கள். இது தற்காலிகமான ஏற்பாடுகள்தான் என்கின்ற காரணத்தினால், அந்தச் சமையல் பாத்திரங்களையெல்லாம் வாங்க முடியாத சூழ்நிலை இருக்கும் என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறோம் என்கின்ற காரணத்தினால், நாம் ஒருவருக்கு எவ்வளவு அரிசி — 200 கிராம் வழங்குகிறோம் என்று சொன்னால், ஒரு மாதத்திற்கு 6 கிலோ அரிசி வருகிறது. அந்த 6 கிலோ அரிசியைக்கூட ஒவ்வொருவருக்கும் இந்த அரசு கொடுத்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து என்பதை மாண்புமிகு





முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அதை தயவுசெய்து, உங்களுடைய சிந்தனைக்கு நான் வைக்கிறேன். முடிந்த அளவிற்கு உங்களால் உதவி செய்ய முடிந்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

*முற்பகல் 10-25*

அதேபோல, விவசாய மக்களுக்கு இன்றைக்கு ஓரளவு ஊக்கம் தருகின்ற பயிராக இருப்பது கரும்பு விவசாயம் ஒன்று. அந்த கரும்பு விவசாயம் செய்கின்ற விவசாயிகள் எல்லாம், ஆலைக்கு தாங்கள் கொடுத்த கரும்பிற்கு உரிய பணம் வரவில்லை என்கின்ற நிலையில் மிகுந்த கஷ்டத்தில் இருக்கிறார்கள். அதேபோல, அரசுத் துறையிலே இயங்குகின்ற கூட்டுறவு ஆலைகளிலே தங்களுடைய கரும்புகளையெல்லாம் பதிவு செய்துவிட்டு, அது அறுவடைப் பருவத்தை எட்டியிருக்கின்ற நிலையில், அதை ஆலைகளுக்குக் கொடுக்க முடியவில்லை என்கின்ற நிலையில் கஷ்டத்தில் இருக்கிறார்கள்; துயரத்தில் இருக்கிறார்கள். அந்த ஆலைகளெல்லாம் கரும்பை எடுத்துக்கொள்வதற்கு உடனடியாக முயற்சிகளை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வது விவசாயிகளுக்கு நீங்கள் செய்கின்ற பேருதவியாக அமையும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுக்குச் சொல்லிக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது போல கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்களுக்கு எல்லாம், முக்கியத்துவம் கொடுத்து, அங்கு இருக்கின்ற சாலைகளெல்லாம் சீர் செய்யப்பட வேண்டும். அதுபோல, நீர் ஆதாரத்தைப் பெருக்குவதன் மூலமாகத்தான் இன்றைக்கு தமிழ்நாடு ஒரு வறட்சி மாநிலம்; அந்த மாநிலத்தை வறட்சியிலிருந்து காக்க வேண்டுமென்று சொன்னால் நாம் பல்வேறு நிலைகளிலே, அண்டை மாநிலங்களை எதிர்நோக்குகின்ற ஓர் இக்கட்டான சூழ்நிலையிலே நாம் வைக்கப்பட்டிருக்கிறோம். சென்னைக்குக் குடிநீர் வேண்டுமென்று சொன்னால், ஆந்திர மாநிலத்தின் உதவியை நாட வேண்டியிருக்கிறது. காவிரியிலே தண்ணீர் வேண்டுமென்று சொன்னால், கர்நாடகத்தினுடைய உதவியை நாட வேண்டியிருக்கிறது. நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இங்கு இருக்கின்றவர்களெல்லாம் சொன்னார்கள்; அரசு உரிய முறையிலே, உரிய நடவடிக்கை எடுத்து, விவசாயிகளைக் காப்பாற்றுவதற்குத் தவறிவிட்டது என்று. ஆனால் முதலமைச்சர் அவர்கள் இங்கு தெளிவாகக் குறிப்பிட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை நமக்கு தென்மேற்குப் பருவ மழையைக் காட்டிலும், வடகிழக்குப் பருவ மழையின் மூலமாகத்தான் மழை கிடைப்பதுண்டு. அந்த மழை டிசம்பர் மாதம்

வரை நீடிப்பது வாடிக்கை. வானிலை ஆராய்ச்சி மையங்கள்கூட டிசம்பர் மாதம் நடுவிலேகூடச் சொன்னார்கள் கடலோரப் பகுதியிலே புயல் சின்னம் உருவாகி இருக்கிறது, தமிழகத்திற்கு மழை கிடைக்கும் என்று அறிக்கையைக் கொடுத்தார்கள். ஆனால் அந்த அறிக்கையெல்லாம் பொய்யாகி, மழை இல்லை என்கின்ற நிலை வந்த பிறகுதான் நாம் வறட்சியினுடைய நிலைமையை உணர வேண்டியிருந்தது. சென்ற ஆண்டுகூட இதே நிலையிலே, காவிரிப் பாசனப் பகுதியிலே வறட்சி நிலவிக் கொண்டிருந்த நேரத்தில் மிக அதிகமான மழை பெய்து அந்தப் பகுதிகளெல்லாம் நீரில் ஆழ்ந்து, வறட்சிக்குப் பதிலாக, நாம் வெள்ள நிவாரணம் கொடுக்கின்ற ஒரு நிலையை இந்த அரசு எடுக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. அதுபோல வந்துவிடுமோ என்கின்ற நிலையிலேதான் சற்று காலதாமதமாக வடகிழக்குப் பருவமழை பொய்த்து விட்டது என்கின்ற நிலையை உணர்ந்த உடனே இந்த அரசு வறட்சி நிவாரண நடவடிக்கைகளை மிகத் துரிதமாக மேற்கொண்டது.

*முற்பகல் 10-30*

காவிரியிலிருந்து தண்ணீர் பெறுவதற்கு உண்மையிலேயே நமது முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டுதற்குரியது. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அங்கு 1.25 டி.எம்.சி தண்ணீரைப் பெறுவதற்கு உரிய ஆணையைப் பெற்றும்கூட, அங்கிருக்கின்ற அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நானும்கூட பிரதமரைச் சந்திக்கின்ற குழுவிலே முதலமைச்சரோடு டெல்லிக்குச் சென்றிருந்தேன். அப்போதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களிடத்திலே எவ்வளவு அன்பும், பாசமும், பற்றும் கொண்டிருக்கிறார்கள் என்பதை, முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்ன அந்த நிலையிலேயிருந்து என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

நமது கிராமப்புறங்களில், கரைப்பார் கரைத்தால் கல்லும்கூட கரையும் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அந்த அளவிற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்கின்றபோது, தமிழகத்தினுடைய நிலைமையை அவ்வளவு தெளிவாக, அழகாக, இந்த மக்கள் படுகின்ற துயரத்தை எடுத்து வைத்தார்கள். அதைக் கேட்கின்றபோது எனக்கே உண்மையிலே என்னுடைய நெஞ்சம் எல்லாம் உருகியது. அந்த அளவிற்கு ஒரு பற்றுதலோடு, எப்படியும் தண்ணீரைப் பெற்றுவிட வேண்டுமென்கிற ஆர்வத்தோடுதான் கருத்துகளை எடுத்துவைத்தார்கள். ஆனால் இங்கே





இருக்கின்றவர்கள் ஏதோ அவர்களுடைய அணுகுமுறை சரியில்லை என்று சொல்கிறார்கள். அது நிச்சயமாக இல்லை. தமிழக மக்களுக்கு தண்ணீரைப் பெற்றுத் தர வேண்டுமென்று மிகப் பெரிய முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள் என்பதை நாங்கள் எல்லாம் நேரிலேயிருந்து கண்டவர்கள் என்ற முறையிலே, இந்த அரசு அந்த விதத்திலே வஞ்சனை செய்யவில்லை என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** கிராமப்புறங்களிலே இருக்கின்ற சாலைகளைப் பழுதுபார்ப்பதற்கு இங்கே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நேற்றைக்குக்கூட ஒரு நண்பர், இது போதுமானதாக இல்லை என்று சொன்னார். நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற இந்த அறிக்கையிலேகூட ஆண்டொன்றிற்கு 7,500 கி.மீ. அளவிற்குத்தான் சீர் செய்ய முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நேற்றைக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கின்றபோது, நமது நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக ஏறக்குறைய 55,000 கி.மீ. சாலைகள் இருக்கின்றன என்பதை சொன்னார்கள். அப்படி 55,000 கி.மீ. சாலைகளை 5 ஆண்டுகளிலே சரி செய்தால்தான், அந்தச் சாலைகள் உரிய முறையிலே பராமரிக்கப்பட்டதாக அர்த்தம் என்றும் எடுத்துச் சொன்னார்கள். எனவே ஓர் ஆண்டிற்கு ஏறக்குறைய 11,000 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டால்தான், 5 ஆண்டுகளுக்குள்ளாக முழுமையான பராமரிப்பு செய்ய முடியும் என்கின்ற நிலை ஏற்படும்.

சென்ற காலத்திலேகூட 22,000 கி.மீ. சாலைகள்தான் மேம்படுத்தப்பட்டன, சீர்செய்யப்பட்டன. அதன் காரணமாக பாக்கி இருக்கின்ற 33,000 கி.மீ. சாலைகளும் பழுதடைந்த நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன என்பதை இந்த அரசும் ஒப்புக் கொண்டிருக்கின்ற காரணத்தால், அதை இந்த முறையாவது சீர்செய்ய வேண்டும். கிராமப்புறங்களுக்கு நாங்கள் எல்லாம் செல்கின்ற நேரத்திலே, சில இடங்களில் சாலைகளில் ஏற்பட்டிருக்கின்ற பழுதுகளின் காரணமாக ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள்கூட நின்று போய் இருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அதைச் சீர் செய்வதற்கு இன்னும்கூட நீங்கள் சற்று அதிகப்படியான நிதியினை ஒதுக்கி, ஆண்டு ஒன்றிற்கு 11,000 கி.மீ. அளவிற்கு சாலைகளைச் சீர்செய்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

[திரு. லா. சந்தானம்] [2003 ஜனவரி 30

கடந்த காலங்களில் எல்லாம் நெடுஞ்சாலைத் துறைக்கு பராமரிப்பு நிதி என்று ஒன்றை ஒதுக்குவார்கள். அந்தப் பராமரிப்பு நிதியின் மூலமாக சிறுசிறு பள்ளங்கள் சாலைகளில் ஏற்படுவதை பராமரித்துக்கொள்வதற்காக, தார் போட்டு ஜல்லிகளைப் போட்டு அதைச் சரிசெய்வதற்காக ஒரு நிதி ஒதுக்கப்படும். அதன்மூலமாக சிறுசிறு பள்ளங்கள் நிரப்பப்படும்போது, பெரிய பழுதுகள் குறைக்கப்படும் என்கின்ற நிலையிலே அந்த நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக அந்தப் பராமரிப்பு நிதி எங்கும் ஒதுக்கப்படாத நிலையில், அந்தச் சிறுசிறு பள்ளங்களைக் கூட நிரப்புவதற்கு—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை சபைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாலைகளைப் பழுது பார்ப்பதற்கென்று தனியாக 20.00 கோடி ரூபாய் அளவிற்கு நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. லா. சந்தானம்:** சென்ற ஆண்டு துறையைச் சார்ந்தவர்கள் கூறிய நிலையைத்தான் நான் எடுத்துச் சொன்னேன். அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால் நான் நன்றியோடு உங்களைப் பாராட்டுகிறேன். எனவே அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கு இன்னும் நீங்கள் நிதியினை ஒதுக்க வேண்டும்.

அதுபோல் கிராமப்புறங்களிலே இருக்கின்ற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் துணை நிலையங்களையும் மேம்படுத்துவதற்காக இந்த அரசு ஏறக்குறைய 650 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. அதன்மூலமாக கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் ஓரளவிற்கு நல்ல சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** அது போல ஆதிதிராவிட மாணவிகளுக்கு சைக்கிள் வழங்குகின்ற திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக



2003 ஜனவரி 30] [திரு. லா. சந்தானம்]

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதை நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும் ஒன்று. மிகவும் பின்தங்கிய சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களும், மிகவும் ஏழ்மையிலேயும், வறுமையிலேயும் இருந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகவும் பின்தங்கிய சீர்மரபினர் பெண்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுப்படுத்தினால் நன்றாக இருக்கும் என்கின்ற என்னுடைய கருத்தைத் தெரிவிப்பதற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுபோல குளங்கள், ஏரிகள் தூர்வாருகின்ற நிலை. இன்றைக்கு நிலத்தடி நீர் மிகவும் குறைந்துகொண்டு இருக்கிறது. அதன்காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்கின்ற நிலையிலே குளங்களையும் ஏரிகளையும் தூர் வாருகின்ற நிலையை எடுத்திருக்கின்றீர்கள். அதற்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவசாயிகள் எல்லாம், எல்லாவிதத்திலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கு பேசுகின்றவர்கள் எல்லாம் தஞ்சை என்பது மிகப் பெரிய பாசனப் பரப்பு உள்ளது என்கின்ற காரணத்தினால், அந்தத் தஞ்சைப் பகுதியிலே இருக்கின்ற கஷ்டங்களைத்தான் எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் மதுரை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் மட்டுமல்ல, அங்கு இருக்கின்ற 4, 5 மாவட்டங்கள் — தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் போன்ற மாவட்டங்களுக்கு காவிரிப் பாசனத்திற்கு அடுத்தபடியாக நீராதாரத்தைத் தந்துகொண்டிருக்கின்ற ஆறு, பெரியாறு, ஏறக்குறைய 103 ஆண்டுகளாகிவிட்டது. அந்த அணையைக் கட்டி. ஆனால் அதனுடைய வரலாற்றில், இந்த ஆண்டுதான் இரண்டு போகம் விளைந்துகொண்டிருந்தது, ஒரு போகம்கூட சாகுபடி இல்லையென்கின்ற நிலை இந்த ஆண்டுதான், 103 ஆண்டுகளுக்குப் பின்னால் ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளும் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறார்கள். அங்கு நடவு செய்யப்பட்டுள்ள பயிர்கள் எல்லாம் காய்ந்து விட்டன என்கின்ற நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்த அரசும், மதுரை பகுதிகளை, பெரியாறு பாசனப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கும், தஞ்சையிலே சென்ற முறை எல்லாம் எப்படி அவர்களுக்கு உதவி செய்தீர்களோ, இந்த முறை எப்படி உதவி செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அந்த உதவியை பெரியாறு பாசனப் பகுதியிலே வாழுகின்ற மக்களுக்கும் நீங்கள் நீட்டித்துத் தர வேண்டும், செய்ய வேண்டும், அவர்களும் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகி இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லி, பல்வேறு நலத் திட்டங்கள்

[திரு. லா. சந்தானம்] [2003 ஜனவரி 30

இந்த அரசின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவற்றைச் செயல்படுத்துவதில் சற்று தொய்வு இருக்கிறது. எனக்குக்கூட கடந்த ஆண்டு ஒரு நீர்ப்பாசனத் திட்டம்....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையில், சென்னை தவிர 28 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த 28 மாவட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் பெரியாறு பாசனப்பகுதி விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால் அந்த இழப்பிற்கும் உரிய நிவாரணம் மற்ற மாவட்டங்களில் என்ன அளவிற்குக் கொடுக்கப்படுகிறதோ, அவர்களுக்கும் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு இடத்திலேயும் என்ன Point of order? (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். திரு. சந்தானம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order இருக்கிறது. அமைச்சர் சொல்வதிலே தவறு இருக்கிறது என்று நான் சொல்கிறேன். என்னவென்று கேட்டுச் சொல்லுங்கள். இதில் Point of order இருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கங்களுக்கு நன்றி. இத்துடன் எனக்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order கூட கேட்கவில்லை என்றால் எப்படி? என்னுடைய உரிமை பறிக்கப்படுகிறது.——

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும் போது சொல்லுங்கள். இது Point of order இல்லை. அமைச்சர் பேசியதில் ஏதாவது தவறு இருந்தால் பிறகு நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். உட்காருங்கள்.

***திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கருத்துகளை எடுத்து வைப்பதற்கு ஓர் அரிய



2003 ஜனவரி 30] [திரு. பி.எம். நரசிம்மன்]

வாய்ப்பினை உருவாக்கித் தந்த, நான் நித்தம், நித்தம் வணங்குகின்ற எங்கள் ஆராதனைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை அவர் மலர்ப்பாதங்களிலே வைத்து என்னுடைய கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

முற்பகல் 10-40

ஆளுநர் உரை, வரப்போகிற நிதிநிலை அறிக்கைக்கு ஒரு முன்னுரையாக அமைந்து இருக்கிறது. ஒன்றரை ஆண்டு காலங்களிலே நடைபெற்ற திட்டங்களுக்கு ஆளுநர் உரை ஓர் அணிந்துரையாக அமைந்திருக்கிறது. கூர்ந்த அறிவு, கொள்கைப் பிடிப்பு, பாந்த இதயம், அயராத உழைப்பு, தடுத்து நிறுத்துவது எதுவானாலும் அஞ்சாது உழைத்து முன்னேறும் மன உறுதி ஆகிய நற்பண்புகளோடு புதிய திட்டங்களையும் புரட்சிகரமான சட்டங்களையும் தமிழகத்தை முன்னேற்றப் பாதையிலே கொண்டு செல்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 வரைக்கும் முதல்வராக இருந்து ஒரு சமூக பொருளாதாரப் புரட்சியை தமிழகத்திலே ஏற்படுத்தினார்கள். அதற்குப் பின் வந்த அரசியல் மாற்றங்களாலே எந்தத் தலைவரும் சந்தித்திராத சோதனைகளை வென்று பல சாதனைகளைப் புரிந்தார்கள் என்பதை நாடு நன்கு அறியும். விவசாயிகள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், மகளிர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரும் நன்மை பயக்கும் வகையிலே பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

வறட்சி நிவாரணத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு ஜூன் மாதத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே காவிரி டெல்டா விவசாயிகளுக்காக, அவர்கள் நன்மை அடைகிற வகையிலே ரூபாய் 164.18 கோடிக்குத் நிவாரணத் திட்டங்களை அளித்து காவிரிப் பகுதி விவசாயிகள் பயன்பெறுகிற வகையிலே பல்வேறு வளர்ச்சிப் பணிகளை உருவாக்கி இருக்கிறார்கள். மேலும் இடர்ப்பாடுகள் நிவாரணமாக, இயற்கை இடர்ப்பாடுகள் நிவாரணமாக 30-7-2002 வரைக்கும் 55 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து ஆணையிட்டிருக்கிறார்கள். மேலும் ரூபாய் 65 கோடியை பல்வேறு மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்து பல்வேறு வளர்ச்சிப் பணிகளை, நிவாரணப் பணிகளை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்

*தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலே ரூபாய் 30 கோடியை ஒதுக்கீடு செய்து சாதனை படைத்திருக்கிறார்கள். வறட்சி நிவாரணமாக ஒரு எக்டேர் நிலப்பரப்பிற்கு தென்னை விவசாயிகளுக்கு ரூ.8.9 கோடியை ஒதுக்கீடு செய்து ஆணையிட்டிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் அரசு கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பதற்காக மையங்களை அமைத்து நிலத்தடி நீரை அதிகப்படுத்த ரூபாய் 25 கோடியை ஒதுக்கீடு செய்தார்கள். காவிரி டெல்டா விவசாயிகளுக்காக, அவர்களுடைய துயர் துடைப்பதற்காக 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூபாய் 21 கோடி மதிப்பீட்டிலே பண்டிகைப் பரிசுகளை வழங்கி சாதனை படைத்தார்கள். (மணியடிக்கப்பெற்றது.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஏற்கெனவே அறிவித்தவாறு தற்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் முற்பகல் 11-15 மணிக்குக் கூடும்.*

*முற்பகல் 11-15 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில், பேரவை மீண்டும் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. நரசிம்மன், ஆரம்பியுங்கள்.*

**திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், யாரும் சாதித்திடாத நடவடிக்கைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள். எதிர்க்கட்சியாக இருந்தபோதும் சரி, ஆளும் தரப்பிலே இருக்கிறபோதும் சரி, உரிய நடவடிக்கைகளை எடுத்து, பொதுமக்களுடைய பாராட்டுதலைப் பெற்றிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, மைய அரசிலே பங்கேற்கிறபோது. அமைச்சர்களைக்கூட இராஜினாமா செய்யச் சொல்லி, காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்காக உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல. முதல்வராக இருந்தபோது காவிரி நதிநீர் உரிமையைப் பெறுகிற வகையிலே உண்ணாநோன்பினையும் மேற்கொண்டிருக்கிறார். இப்படி எந்த அரசியல் கட்சியும் செய்திடாத அளவுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்; இன்றும் எடுத்து வருகிறார். இன்றைக்குத் தமிழகத்திலே*





*இருந்து 10 அமைச்சர்கள், மைய அரசிலே பங்கு பெற்றிருக்கிறார்கள். அவர்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே எத்தகைய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நாடு உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது.*

*பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், நெசவாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்தீர்களா என்று கேட்டார். 1998 ஆம் ஆண்டிலேயிருந்து 2001 வரைக்கும் ரூ.400 கோடி அளவுக்கு, பட்டு மற்றும் பருத்தித் துணிகள் தேங்கிக் கிடந்தன. அவற்றை விற்பதற்கு முந்தைய ஆட்சியாளர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஆனால் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், 120 கைத்தறிக் கண்காட்சிகளைத் தொடங்கி, அவற்றிலே அப்படிப்பட்ட துணிமணிகளை விற்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தார். 25 கோடி ரூபாய் அளவுக்கு, 'கோ-ஆப்டெக்ஸ்' மூலமாகத் துணிமணிகளை நெசவாளர்களிடத்திலேயிருந்து கொள்முதல் செய்து, அவர்களுடைய கண்ணீரை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துடைத்தார்கள். 1998 ஆம் ஆண்டிலேயிருந்து, அரசு நெசவாளர்களுக்கு ரூ.77 கோடி அளவுக்குப் பணம் தர வேண்டும். ஆனால் அதற்குரிய நடவடிக்கைகளை முந்தைய ஆட்சியினர் எடுக்கவில்லை. அதற்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், ரூ.30 கோடியை ஒதுக்கீடு செய்து, நெசவாளர்கள் துயரைப் போக்கினார். அதுமட்டுமல்ல. 25 ஆயிரம் நெசவாளர் குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி, அதுவும் 3 முறை கொடுத்து நெசவாளர்களின் கண்ணீரைத் துடைத்தார்.*

*அதேபோன்று பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் பேசுகிறபோது, அரசு ஊழியர்களைப் பார்த்தீர்களா, அவர்களுக்கு நாங்கள் கொடுத்த உரிமையைக்கூட நீங்கள் வழங்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டினை இங்கே சொன்னார். அவர்கள் ஆளுகிறபோது, அரசு ஊழியர்களுக்கு மைய அரசு அறிவித்த D.A. உயர்வினைத் தருவதாகச் சொல்லி முந்தைய தி.மு.க. அரசு அறிவித்ததே தவிர, அந்த உயர்வினை 2002-2003, 2003-2004-ல் தருவதாகச் சொல்லி ஏமாற்றினார்கள்.*

*அந்தச் சுமைகூட இந்த அரசாங்கத்தின்மீது விழுந்து, அந்தச் சுமை ரூ.1800 கோடி செலவு செய்து தீர்க்க வேண்டிய நிலையிலே, மாண்புமிகு*

[திரு. பி.எம். நரசிம்மன்] [2003 ஜனவரி 30

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இன்றைக்கு இருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு இப்படி அரசு ஊழியர்களையும் நெசவாளர்களையும் வஞ்சித்தார்களே தவிர, அவர்களுக்கு எவ்வித உதவிகளையும் செய்யவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

முற்பகல் 11-20

தமிழ் மொழி பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். 1998 ஆம் ஆண்டிலே மத்திய அரசில் கூட்டணி ஆட்சிக்கான தேசியக் கொள்கை செயல் திட்டத்திலே இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையில் உள்ள தமிழ் மற்றும் 18 தேசிய மொழிகளை மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும் என மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணித்தரமாக எடுத்து வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தஞ்சையிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தினார்கள்; தமிழுக்கு பெருமை சேர்த்தார்கள். அதுமட்டுமல்ல. தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை அரசுடமை ஆக்கி, அவர்களுக்கெல்லாம் சிறப்பினைச் சேர்த்து தமிழுக்கு மேலும் சிறப்பினை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை செம்மையாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்தினார்கள்.

ஓர் அரசியல் கட்சியின் செல்வாக்கை நிரூபிக்கிற ஓர் அளவுகோல் எது என்று சொன்னால், பொதுத் தேர்தல். பொது மக்களிடத்திலே எந்த அளவுக்கு ஓர் அரசியல் கட்சிக்கு செல்வாக்கு இருக்கிறது என்பதை நிரூபிப்பது பொதுத் தேர்தல். விரைவில் சாத்தான்குளத்தில் இடைத் தேர்தல் நடைபெற இருக்கிறது. அங்கே பிரதான எதிர்க்கட்சி என்ன நிலையை எடுத்து இருக்கிறது என்பதை நாடு உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஓர் அரசியல் கட்சி என்று சொன்னால், தேர்தலிலே ஒன்று போட்டியிட வேண்டும்; அல்லது தோழமைக் கட்சிக்கு ஆதரவினைத் தர வேண்டும். அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலை என்ன? நீங்கள் போட்டியிடப் போகிறீர்களா அல்லது தோழமைக் கட்சிக்கு ஆதரவினை நல்கப் போகிறீர்களா என்பதே தெரியாமல் திக்கித் திணறி திண்டாடிக்கொண்டிருக்கிறீர்கள். தேர்தல் களத்தைச் சந்திக்க முடியாமல் ஓடப் பார்க்கிறீர்கள். நான் கேட்பதெல்லாம் அரசியல் கட்சியை நடத்துகிறீர்களா அல்லது அரசியலைவிட்டு ஒதுங்கி, கதை வசனம் எழுதப் போகிறீர்களா என்பதுதான், இன்றைக்கு



2003 ஜனவரி 30] [திரு. பி.எம். நரசிம்மன்]

எங்களுடைய கேள்வியாக, பிரதான கேள்வியாக இருந்துகொண்டிருக்கிறது. நீங்கள் சொல்கிறீர்கள்; மத்தியிலே பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டு என்று சொல்கிறீர்கள்; ஆனால் மாநிலத்திலே ஒரு நிலையை நீங்கள் எடுக்கிறீர்கள். ஏன் இந்த இரட்டை வேடம்? யாரை ஏமாற்ற இந்தக் கபட நாடகம் என்பதை நாட்டுமக்கள் இன்றைக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

மேதகு ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு முன்பே பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகையில், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று காட்டாட்சி நடத்தும் போக்கைக் கண்டித்து வெளிநடப்பு என்றார். யாரை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஆட்சி நடத்தியது என்பதை தயவுசெய்து பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

27-3-1997-ல் பத்திரிகையிலே ஒரு Photo வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பக்கத்திலே ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே ஈடுபட்ட கொலையாளிகள் Photo இருப்பதாக பத்திரிகையிலே வந்த தவறான செய்தி இந்தச் சட்டமன்றத்திலே எழுப்பப்படுகிறது. அப்போது, அதற்கு முன்னாள் முதல்வர் என்ன சொல்லி இருக்க வேண்டுமென்றால், அதை விசாரித்துச் சொல்கிறேன் அல்லது விசாரணைக்கு உட்படுத்துகிறேன் என்று சொல்லி இருக்க வேண்டும். ஆனால் முன்னாள் முதல்வர் அவர்கள் இந்த அவையிலேயே குறிப்பிடுகிறபோது, அவைக் குறிப்பேட்டிலும் பதியப்பட்டு இருக்கிறது. அப்போது அவர் சொல்கிறார், 'தாங்கள் குறிப்பிட்டதைப்போல உணர்ச்சிபடக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டதை மறுக்க முடியாது, அதில் ஒன்றும் ஆச்சரியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை, இந்த நேரத்தில் இந்தப் புகைப்படம் ஒரு புதிய திருப்பமாக அமைந்துள்ளது' என்று ஒரு முதலமைச்சராக இருப்பவர், இப்படிச் செய்தி வருகிறபோது, தீர விசாரிக்காமல் சொல்வதனுடைய நோக்கம் என்ன? எதிர்க்கட்சியை ஒடுக்க வேண்டும்; அடக்க வேண்டும், எதிர்க் கட்சிமீது பழியைச் சுமத்த வேண்டும் என்று எடுத்தேன், கவிழ்த்தேன் என்கிற பாணியில் முன்னாள் முதல்வர் அவர்கள் சென்றிருக்கிறாரே தவிர, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருபோதும் அதுபோன்று நடக்கவில்லை. அரசமைப்புச் சட்டப்படி குற்றங்களை விசாரிக்க நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன; வழக்குகளை விசாரிக்கின்றன. ஆனால் எதிர்க் கட்சிகளை நசுக்க வேண்டும் என்பதற்காக, ஒடுக்க வேண்டும் என்பதற்காக முந்தைய ஆட்சியினர் தனி நீதி மன்றங்களை

[திரு. பி.எம். நரசிம்மன்] [2003 ஜனவரி 30

உருவாக்கினார்கள். இவர்கள் மக்கள் வரிப் பணத்தை வீணாக்கினார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு, தனி நீதி மன்றங்களை அமைக்கவும் மற்றும் இதன் நிர்வாகச் செலவுகளுக்காக 57 கோடி ரூபாயை முந்தைய ஆட்சியினர் செலவு செய்திருக்கிறார்கள். மக்கள் வரிப் பணத்தைக் கொண்டு யாரை அழிப்பதற்காகச் செலவழிக்கப்பட்டது? எனவே முன்னாள் முதல்வர் அவர்கள், முதல்வர் என்கிற பதவியிலே அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்பதற்கு இது ஒன்றே எடுத்துக்காட்டு. இப்போது நான் வேண்டிக்கொள்வது எல்லாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தெரிவித்துக்கொள்வது எல்லாம் இதற்காக அவர்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசை இந்த நேரத்திலே, இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் முதல்வர் அவர்கள்மீது சர்க்காரியா கமிஷன் கூறிய குற்றச்சாட்டுகளை உலகமே அறியும். அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று 1989 ஆம் ஆண்டிலே, ஆட்சிக்கு வந்ததே அதற்காகத்தான் என்பதைப்போன்று ஓர் ஆணையை அவரே எழுதிக் கொண்டார். ஒரு குற்றவாளியே தீர்ப்பினை எழுதிக்கொள்ள முடியுமா என்ற ஒரு விந்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் ஏற்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முந்தைய ஆட்சிக்காலத்திலே போடப்பட்ட வழக்குகளை எல்லாம் எதிர்கொண்டு வெற்றி பெற்று வருகிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே முந்தைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட வழக்குகள், முன்னுக்குப்பின்னே தவறான வழக்குகள், உண்மைக்கு மாறான வழக்குகள் என்று சொல்லி, அவற்றையெல்லாம் திரும்பப் பெறுவதற்கு ஓர் உத்தரவைப் போட்டிருக்கலாம். ஆனால் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெஞ்சுரத்தோடு அவற்றையெல்லாம் எதிர்கொண்டு இப்போது வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரதான எதிர்க்கட்சி வெளிநடப்புச் செய்கிறபோது மதிய உணவுத் திட்டத்தைக் குறிப்பிடுகிறபோது, மதிய உணவு பெறுபவர்களை இரவலர்களைப்போன்று இந்த அரசு இழிவுபடுத்தி வருகிறது என்ற குற்றச்சாட்டை இங்கே வைத்தார்கள். சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வருகிறபோது பிச்சைக்காரத் திட்டம் என்று சொன்னார்கள். அவர்கள்



2003 ஜனவரி 30] [திரு. பி.எம். நரசிம்மன்]

ஆட்சிக்கு வந்தபோது இந்தத் திட்டத்தை நிறுத்த முடிந்ததா என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

முற்பகல் 11-30

நெசவாளர்களுக்கு கஞ்சித் தொட்டிகளைத் திறக்கத் தூண்டி விட்டாரே, அதை என்னவென்று முன்னாள் முதல்வர் அவர்கள் அழைக்கப் போகிறார்கள் என்பதைச் சொல்லியாக வேண்டும். எந்தத் திட்டத்தை இன்றைக்கு நம்முடைய அரசு கொண்டுவந்தாலும் அந்தத் திட்டங்களை குறை சொல்வதிலேதான் நாட்டமாக இருக்கிறார்கள். நாட்டு நடப்புகளை கவனிப்பதைவிட வெளிநடப்பு நாடகங்களை நடத்துவதிலேதான் இன்றைக்கு எதிர்க்கட்சிகள் முனைப்பாக இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பிரதான எதிர்க் கட்சியினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், இந்த ஆளுநர் உரை குறித்து கேள்வி பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருக்கிறார். அதிலே அவர் சொல்கிறார். நேற்றைய செய்திகள் இன்றைய கவர்னர் உரை என்று சொல்லி இருக்கிறார்கள். தலைவர் என்று சொன்னால் யாராவது கேள்வி கேட்பார்கள். தலைவர் பதில் சொல்வார்கள். ஆனால் இவர், கேள்வியும் அவரே, பதிலும் அவரே. அந்த அளவுக்குப் போய்விட்டார். அவருடைய சட்டமன்ற உறுப்பினரேகூட உரையைத் தொடங்குகிறபோது வயதான காலத்திலே என்று குறிப்பிடுகிறார். ஆகவே அவருடைய பேச்சுகளை எல்லாம் மழை காலத்திலே நனைகின்ற மணல் வீடுகளாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் லாட்டரிச்சீட்டு ஒழிப்பு, கந்துவட்டி ஒழிப்பு, காவல் துறையை நவீனமயமாக்குதல், கடும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படுவதைத் தடுக்க எடுக்கும் முயற்சிகள், காரண காரியங்களை விளக்கி மத்திய அரசு நிதி ஒதுக்குவதை உயர்த்த எடுக்கும் நடவடிக்கைகள், காலமெல்லாம் தரிசாகக் கிடந்த நிலங்களை கழனியாக மாற்ற எடுக்கும் பணிகள், கைத்தறி நெசவாளர்கள் துயர் துடைப்புப் பணிகள், காலத்திற்கும் மறக்க முடியாத சென்னை நகர அடிப்படை வசதிகளைப் பெருக்கும் சிறப்புத் திட்டங்கள், காலம் காலமாக ஒதுக்கப்பட்ட மகளிர்க்கான நாடு போற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள், கல்லூரியில் மாணவர்களுக்கு உற்சாகம் தரும் உதவிகள், கருணை உதவியோடு திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட அன்னதானத் திட்டங்கள், கண்காணிப்புடன் கூடிய நிர்வாக வெளிப்பண்ட மற்றும் பங்கேற்பு உதவிடும் நிலைப்பாடு என இப்படி பல்வேறு திட்டங்களை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

[திரு. பி.எம். நரசிம்மன்] [2003 ஜனவரி 30

இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த ஆளுநர் உரை ஒரு வெல்லக்கட்டி. எந்தப் பக்கத்தைக் கடித்தாலும் சுவை தருகிற ஆளுநர் உரை. ஆளுநர் உரை ஒரு முன்னோட்டம். வரும் நாட்களில் எத்தனையோ நல்வாழ்வுத் திட்டங்கள் வர இருக்கின்றன என்பதை இந்த ஆளுநர் உரையில் சொல்லப்படுகிறது. ஆளுநர் உரை ஒரு சான்றிதழ். சரியான பாதையில் துரிதமான வேகத்தில் சென்று துயர் துடைக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செய்யத் துடிக்கிறது என்பதை இந்த ஆளுநர் உரை விளக்குகிறது. புரட்சித் தலைவி தலைமையிலான அரசு வீறு நடைபோடுகிறது. அனைவருக்கும் நல் வாய்ப்புகளையும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும் நிச்சயம் பெற்றுத் தரும். தேசியத் தலைமையே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தேடி வரும் காலம் வேகமாக வந்துகொண்டு இருக்கிறது. இந்தியாவிலே நமது மாநிலம் முதல் இடத்தைப் பெறும் வகையில் இலட்சியம் நிச்சயம் நிறைவேறும் என்ற நமது நம்பிக்கையைத் தெரிவித்து, எனது பாராட்டுதல்களையும் திரும்பத் திரும்பச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காமராஜ் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னைப் பேசுவதற்கு அனுமதித்ததற்காக முதலாவது எனது இதயங்கனிந்த வாழ்த்துகளையும், வணக்கத்தையும் கூறிக்கொள்கின்றேன். மாண்புமிகு தமிழக ஆளுநர் ஆற்றிய உரையில் அந்த உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது சில கருத்துகளை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். 55 பக்கங்களை உள்ளடக்கிய இந்த உரையைப் படித்தவர்கள் சிலர், படிக்காதவர்கள் சிலர்.

*முற்பகல் 11-35*

இங்கே ஆளுநர் உரை தமிழிலே படிக்கப்படவில்லை என்ற ஆதங்கத்தைக் காட்டிக்கொண்டிருந்தார்கள். என்னைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தமிழிலே நாம் வாசித்துவிட்டால், படித்துவிட்டால், இவர்கள் திரும்பப் படிக்கமாட்டார்கள் என்கின்ற காரணத்தினாலே அதை தமிழிலே படிக்காமல் அவர்கள் வீட்டிலே சென்று ஆளுநர் உரையினை தமிழிலே படித்துக்கொள்ள வேண்டும் என்கின்ற உணர்வோடு அந்தத் தமிழாக்கத்தை விட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அதைப் புரிந்துகொள்ளாத சிலர்



2003 ஜனவரி 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அங்கும் இங்கும் தாவிக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றபோது பரிதாபமாக இருக்கிறது.

இங்கே இந்த 55 பக்கங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது சில பாராட்டுகின்ற அம்சங்களை—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருமே என்னைவிட பெரிய தமிழ்ப் புலவர்கள். நிச்சயமாக அதைப் படித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கைதான்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உங்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. நிச்சயமாக உங்களைவிட வல்லவர்களும், வில்லவர்களும் இந்த அவையிலே தமிழிலே புலமை பெற்றிருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் பாராட்டுகின்ற அம்சங்கள் நிறைய இருக்கின்றன. தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக எடுத்திருக்கிற நடவடிக்கைகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. POTA சட்டத்தை பாராளுமன்றத்தில் ஆதரித்துப் பேசிவிட்டு, விடுதலைப் புலிகளுக்காக இங்கே குரல் கொடுக்கிறபோது, அவன் M.P.-யாக இருந்தாலும் கம்பி எண்ண வேண்டும் என்கின்ற மனோபக்குவத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) POTA சட்டத்தை பயன்படுத்தியதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு கோடி கையெழுத்தில்லை. ஓராயிரம் கோடி கையெழுத்திட்டாலும், அம்மா இருக்கிறவரைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) வெளியே வருவது மிக சிரமம். ஆக செய்த தவறுக்கு பிராயச்சித்தம் தேடிக்கொண்டால், அம்மா அவர்கள் ஒருவேளை கருணை கொண்டால், வெளியே வருவதற்கான முயற்சி ஏற்படலாம். அவர்களுக்காக அனுதாபப்படுகின்ற நண்பர்கள் அதைக் கருத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பத்து இலட்சம் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு ரூபாய் 21 கோடி செலவில் தீபாவளிப் பரிசுகள் வழங்கப்பட்டிருப்பது, விவசாயிகளுக்கு தீய்ந்து போன, கரிந்துபோன பயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை என்கின்ற காரணத்தினாலே, ஆளுங்கட்சியும் அதைத்தான் சொல்கிறது. எதிர்க் கட்சிகளும் அதைத்தான் சொல்கின்றன, ஏக்கர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் பெற்றுத் தர வேண்டுமென்று. நாம் எதிர்க் கட்சிகளாக இருந்து அரசைக் குறை சொல்வதைவிட, இவற்றை என்ன விதத்தில் சாதிக்கலாம், இந்தக் குறைகளை எப்படிப் போக்கலாம் என்று இதற்கான அறிவுரைகளையும் நீங்கள் சொல்லியிருந்தால், அது

[டாக்டர் தே. குமாரதாஸ்] [2003 ஜனவரி 30

பாராட்டுதற்குரியது. ஐந்தாயிரம் கொடு, பத்தாயிரம் கொடு, இல்லையென்றால் நான் வெளியே போகிறேன் என்றால், எப்படிப் பணத்தைக் கொடுப்பது என்கின்ற கருத்தினையும் நீங்கள் சொல்லியிருக்கலாம். ஆக, அம்மா அவர்கள்கூட கவர்னர் உரையிலே மத்திய அரசிடம் 5,000 ரூபாய் எங்களுக்குக் கொடுக்க வேண்டும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தத் தொகையினை வழங்கிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களே, இந்தப் பெருந்தன்மையைப் பாராட்டுவதற்குரிய மனம் உங்களுக்கு இல்லாமல் போனதைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன். நேற்றைக்குக்கூட எங்களுடைய அருமைச் சகோதரர், சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அம்மா அவர்களிடம் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளியே சென்று விட்டார்கள், அவர்களை மீண்டும் அவைக்கு வருவதற்கு அழைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அம்மா அவர்கள் பெருந்தன்மையோடு அவர்களை சபைக்கு அழைத்தபிறகு, அந்தப் பெருந்தன்மையை ஏற்றுக்கொள்ள உங்களால் முடியவில்லை. நாங்கள் என்ன செய்ய முடியும், பாவம். ஆக, நேற்றைக்கும் சபையை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ், ஏற்றுக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அவர்கள் நேற்றைக்கு வந்திருக்க வேண்டும். இன்றைக்கு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு வந்ததற்கு வாழ்த்துக்கள். அது வேறு விஷயம். ஆக, விவசாயிகளுக்கு 5,000 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற வேண்டுகோள். அதேபோல, சென்னை நீங்கலாக மற்ற மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு ஒரு சந்தேகம். ஒன்றும் புரியவில்லை. ஏனென்றால், மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களிலே எல்லாம் ஆண்டாண்டுதோறும் வறட்சி. ஆண்டாண்டுதோறும் வறட்சி என்று சொன்னால் அங்கே உள்ள ஏழை விவசாயிகள் தற்கொலைக்கு முனைப்புடன் செயல்படவும் இல்லை; பூமி வறண்டு விட்டது, பயிர் வாடி விட்டது என்று சாகவும் இல்லை. ஆனால் தஞ்சையில் பிறந்த காரணத்தினாலே தஞ்சையைச் சேர்ந்தவர்கள் புத்திமதி சொன்ன காரணத்தினாலே இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றனவோ என்கின்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது. ஆக, எல்லாப் பகுதிகளிலும் விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாயத்தில் நஷ்டம் வரும், இலாபம் வரும். நஷ்டம் வந்தவுடன் இப்படிப்பட்ட தற்கொலை மனப்பான்மை வருவது என்பது ஏற்புடையதல்ல. அதை அந்தப் பகுதியிலே மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2003 ஜனவரி 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அதேபோல 1984-லே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மக்களவை உறுப்பினராக இருந்தபோது கங்கை-காவிரியை இணைத்திட வேண்டுமென்று குரல் கொடுத்திருக்கிறார்கள். நேற்றையதினம் அருமைச் சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் அப்பாவு அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டதைப்போல அதை நான் வலியுறுத்துகிறேன். கங்கை-காவிரி திட்டம் என்பதை கங்கை-கன்னியாகுமரி வரைக்கும் அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு பெருமுயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

அதேபோல, 12 இலட்சம் ஏழை விவசாயிகளுக்கு, பசியால் துடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, மதிய உணவுத் திட்டத்தைத் தீட்டி அவர்களை பசியிலிருந்து காப்பாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல ஆண்டுகளாக ஏரிகள், குளங்கள், குட்டைகள் தூர் வாரப்படாமல், சாலைகள் பராமரிக்கப்படாமல் இருக்கிற சூழ்நிலையை உணர்ந்து, நிலத்தடி நீரைப் பாதுகாத்திட வேண்டுமென்ற உணர்வோடும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியை விரைவாக ஆற்ற வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடும், குளங்கள், ஏரிகள், சிறு குட்டைகள் போன்றவற்றை தூர் வாருவதற்காக எடுத்திருக்கிற பெருமுயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, 111.48 கோடி ரூபாய் செலவில் 43,580 வீடுகள் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி எங்களுடைய கண்களுக்கு இந்த ஆளுநர் உரையில் இருக்கிற திட்டங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன. தமிழிலே ஒரு பழமொழி சொல்வார்கள்.

** ஆக, கற்பூரமாக வைத்திருக்கிற.........

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2003 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், அந்த வாக்கியத்தை நீக்கிக்கொள்ள அனுமதிக்க வேண்டுகிறேன். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு எத்தனையோ பழமொழிகள் இருக்கின்றன.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை. ஓர் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அம்மா அவர்கள் 1991-லே ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் நான் அன்றைக்கு வேறு கட்சி. அந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சி நண்பர் மரியாதைக்குரிய திரு. பீட்டர் அல்போன்ஸ் இந்த அவையிலே பேசுகிறபோது, அம்மாவினுடைய ஆட்சிக்கு 'குங்குமம் சுமக்கும் கழுதையாக' நாங்கள் இருந்து செயல்படுவோம் என்று சொன்ன காலங்கள் உண்டு. எனவேதான் அப்படிச் சொன்னேன். கழுதை என்று சொன்னதால் நான் யாரையும் குறிப்பிடவில்லை. அப்படி நினைத்துக்கொள்பவர்களுக்காக நான் வருத்தப்படுகிறேன். வேறு யாரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவுமில்லை. **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கழுதை' என்பது உழைப்புக்கு இலக்கணமான ஒரு சொல். அதில் எந்தத் தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், அதை பாராட்டுவதற்குப் பயன்படுத்தினால் ஏற்றுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக எடுத்துக்கொள்ளலாம். அதற்கு நான் பொறுப்பு ஏற்க முடியாது. ஆக இப்படிப்பட்ட நல்ல அம்சங்களை உள்ளடக்கிய இந்த கவர்னர் உரையை நாங்கள் அதிகமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருப்பதில், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, மற்ற அனைத்து எதிர்க்கட்சிகளும், காங்கிரஸ் கட்சியானாலும் சரி, பாட்டாளி மக்கள் கட்சியானாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியானாலும் சரி, எல்லோரும், அம்மாவுடைய ஆதரவைப் பெற்று, வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக வந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இவர்களைப்பற்றி அன்றைக்கே தெரிந்து வைத்துக்கொண்டுதான், 'போகாத இடந்தனிலே போக வேண்டாம்; பொல்லாங்கு செய்வாரோடு இணங்க வேண்டாம், மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

(மேசையைத் தட்டும் ஒலி) என்று அவ்வையார் அன்றைக்கே எழுதி இருக்கிறார். எல்லோருக்கும் சேர்த்து, தி.மு.க.வில் இருப்பவர்கள் எதிர்ப்பவர்கள் எதிர்த்துக் கொண்டு இருக்கட்டும்; ஆகவே நமது கூட்டணி நண்பர்கள் மனசாட்சியோடு, இந்த அம்மா அவர்கள் நம்மைப் பார்த்து தொகுதிக்கு வருகிறபோது அம்மா ஒரு ரவுண்டுகூட (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி, அவர் பேசி முடிக்கட்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அவரது திருமுகத்தைக் காட்டி வாக்குகளை வாங்குகிறபோது ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆக, அம்மாவுடைய திருமுகத்தைப் பார்த்து வாக்குகள் வேண்டுமென்றபோது, கொள்கையும் இல்லை, இலட்சியமும் இல்லை. எம்.எல்.ஏ., எம்.பி. அதுதான் இலட்சியம். அதற்குப் பிறகு எல்லோருக்கும் கொள்கை உண்டு. இலட்சியம் உண்டு. சாத்தான்குளத்தைப் பார்ப்போம். பார்க்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை.

முற்பகல் 11-45

இதில் காங்கிரஸ் கட்சியினர் சொல்கிறார்கள். 'சிறுபான்மை' என்று. என்ன சிறுபான்மை? இந்தக் கட்சியில் இரண்டு சிறுபான்மை எம்.எல்.ஏ.-க்கள் தான் இருந்தோம். குமாரதாஸ், ஹக்கீம். இரண்டு பேரையும் வெளியே போட்டுவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோகட்டும். தமிழ்நாட்டில் 54 மாவட்டங்கள். அந்த 54 மாவட்டங்களில் யாராவது ஒரு இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மாவட்டத் தலைவர் உண்டா? 54 பேரைப் போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் சொல்வது கட்சி மாவட்டம். கட்சி மாவட்டத்தில், 54 மாவட்டங்களில், காங்கிரஸ் கட்சியில் ஓர் இஸ்லாமிய நண்பராவது; சிறுபான்மை மக்களுக்காக வாய் கிழியப் பேசுகிறார்களே, ஓர் ஆள் உண்டா? கிடையாது, சும்மா மேடைக்குப் பேசலாம், ஓட்டுக்குப் பேசலாம். சிறுபான்மை மக்களை காங்கிரஸ் கட்சியிலே இருக்கக்கூடிய ஆர்.எஸ்.எஸ்.-காரர்களே, இந்தப் பயலுகளை உள்ளுக்கு வைக்கக்கூடாது என்று கூறி வெளியேற்றுகிறார்கள். ஆக எங்களைப் பார்த்து, சிறுபான்மை மக்களுக்கு ஆதரவு என்றுப்பேசுகிறார்கள். (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியிலே இருக்கக்கூடிய ஆர்.எஸ்.எஸ்.ஆள். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில்

[டாக்டர் தே. குமாரதாஸ்] [2003 ஜனவரி 30

நமது அம்மாவைப் பார்த்துக் குறை சொல்வதற்கு என்றே இருக்கிறார். நான் வேண்டுகோள் விடுவது என்னவென்று சொன்னால், அரசியலாக இருந்தாலும் சாத்தான்குளத்திலே சந்திப்போம் என்று சொல்கிறார். யாரைப் பார்த்து, என்ன பயமா? சாத்தான்குளத்திலே சிறுபான்மை மக்களைச் சந்திப்பதற்காக அவர்களுக்காக என்ன தியாகம் செய்ய வேண்டும் என்றாலும் குமாரதாஸும், ஹக்கீமும் அங்கே கலந்துகொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். எல்லாவற்றையும் விடுங்கள். நாங்கள் பாடுபட்டுத்தான் ஜெயிக்க வேண்டும் என்று இல்லை. அம்மா ஒரு ரவுண்டு வந்தாலே 25 ஆயிரம் வோட்டு வித்தியாசத்திலே ஜெயிப்பார்கள். அது வேறு விஷயம். அது வேறு விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும் காங்கிரஸ் கட்சி தன்மானம் மிக்கது. எங்களுக்கு தி.மு.க.வோடு ஒட்டோ உறவோ கிடையாது என்று சொல்கிறார். அன்றைக்கு மத்தியிலே தேவகவுடா அவர்களுடைய, குஜ்ரால் அவர்களுடைய அரசாங்கம் இருந்தபோது, ஜெயின் கமிஷனிலே, ராஜீவ் காந்தி கொலையிலே இவர்களுக்குத் தொடர்பு இருக்கிறது, மறு விசாரணை செய்ய வேண்டுமென்று சொன்ன நேரத்தில், அதற்கு முடியாது என்று சொல்லி, பதவியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த கால கட்டத்திலே, அன்றைக்குப் பாராளுமன்றத் தேர்தலில்கூட தி.மு.க. கூட்டணி இருந்த காரணத்தினாலே, காங்கிரஸ் கட்சி அன்றைக்கு தன்னுடைய ஆதரவைப் பின்பற்றி பாராளுமன்றத் தேர்தலைச் சந்தித்ததை இந்த நாடு மறந்து விடாது. ஆனால் இன்றைக்கு அந்த காங்கிரஸ் கட்சி—எந்த காங்கிரஸ் கட்சி மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் பாரதத்தினுடைய பிரதமராக வர வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தோமோ அந்த நேரத்திலே அவர்களுக்கு ஆதரவு கொடுக்காமல் பின்வாங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத்தான் இன்றைக்கு இந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள். **(மேசையைத் தட்டும் ஒலி) அத்தனையும் விட்டு ஓட்டுக்காகக் கையேந்தி நிற்கின்றது என்று சொன்னால் இதைவிட கேவலம் என்ன இருக்க முடியும்? அதுமட்டுமல்ல, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், திரு. குமாரதாஸ் பேசி முடித்தவுடனே உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ் பேசி முடித்தவுடனே வாய்ப்புத் தருகிறேன். பேசி முடிக்கட்டும் அவர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2003 ஜனவரி 30]

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் பேசுகிறபோது மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கு— (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், திரு. ஞானசேகரன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதுமட்டுமல்ல, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ் உட்காருங்கள், உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி., திரு. எஸ்.ஆர்.பி., சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் குமாரதாஸ், திரு. எஸ்.ஆர்.பி. பேசுகிறார். திரு. எஸ்.ஆர்.பி. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. பேசுகிறார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள்.... (குறுக்கீடு) ஆளும் கட்சியைப் பாராட்டிப் பேச வேண்டும், முதலமைச்சரைப் பாராட்டிப் பேச வேண்டுமென்று சொன்னால் தாராளமாகப் பாராட்டிப் பேசட்டும்; நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் பயன்படுத்துகிற சொற்கள், சொற்றொடர்கள், பழமொழிகளில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாடாளுமன்ற மரபை மீறுவதாக இருக்கக்கூடாது. தொடர்ந்து நாடாளுமன்ற மரபை மீறுகின்ற வகையில் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். குறிப்பாக ** என்ற சொற்கள் எப்படி அவைக் குறிப்பில் ஏற நீங்கள் அனுமதிக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ் அவர்கள், திரு. குமாரதாஸ் உட்காருங்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 ஜனவரி 30

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அது ஒன்றும் தப்பு இல்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. பேசுகிறார். சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். என்னைப் பார்த்துச சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதற்கு என்ன சொல்கிறீர்கள்? ** என்று கேட்கிறாரே, ** என்ற சொற்களைப் பயன்படுத்தக் கூடாது என்று சொன்னால், ** என்று கேட்கிறாரே, என்ன பேச்சு இது? சட்டசபையிலே பேசக்கூடிய பேச்சா இது? சட்டசபையிலே பேசக்கூடிய பேச்சா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது என்ன நியாயம்? இந்த மாதிரிதான் பேசுவார் என்றால், அதை நீங்கள் அனுமதிப்பீர்கள் என்றால் நாங்கள் சபைக்கே வரவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். சரி, உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இந்த மாதிரிதான் பேசுவார்கள் என்றால் நாங்கள் சபைக்கே வரவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நான் சொல்கிறேன். திரு. குமாரதாஸ் அவர்கள், அவருடைய கருத்தை வெளிப்படுத்துவதிலே எந்தவிதத் தவறும் இல்லை. அவருடைய எண்ணத்தை வெளிப்படுத்துவதிலே எந்தத் தவறும் இல்லை. ஆனால் ஆத்திரத்தைத் தூண்டக்கூடிய வகையில் உள்ள அதுபோன்ற சொற்களைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் பயன்படுத்திய சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அது எல்லாம் முடியாது இங்கே. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு நிமிஷம் இருங்கள். தலைவர் மூப்பனார் அவர்களுடைய பெயரைப் பயன்படுத்துவதற்கு ** அவர். தலைவர் மூப்பனார் அவர்கள்- (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பிறகு தாங்கள் அதே மாதிரி பாணியைப் பின்பற்றுவது சரியல்ல. (குறுக்கீடு) முறையல்ல, முறையல்ல. (குறுக்கீடு) அந்த ** என்ற சொல் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் மூப்பனார் அவர்களுடைய முழு சம்மதத்தோடு அவர் விரும்பியபடிதான் காங்கிரஸ் கட்சியிலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தன்னை இணைத்துக்கொண்டது. அவர் உயிரோடு இருக்கின்ற நேரத்திலே என்னையும், திருமதி ஜெயந்தி நடராஜன் அவர்களையும் சோனியா காந்தியை நேரிலே சென்று சந்தித்து வரச்சொல்லி என்னைப் பணித்தவரே மூப்பனார் அவர்கள்தான். இன்னும் ஒருமுறை மூப்பனார் அவர்களுடன் சென்று, இத்தனை நாட்கள் எங்களுக்குக் கால அவகாசம் கொடுங்கள், இது முடிந்ததும் நிச்சயமாக நாங்கள் கட்சியை இணைத்துவிடுகிறோம் என்று தலைவர் மூப்பனார் அவர்கள் நேரடியாக சோனியா காந்தியிடத்திலே சொல்லி எங்களையெல்லாம் அழைத்துக்கொண்டுபோய் ஒருமுறை பேசவைத்து, பிறகுதான் நாங்கள் சேர்ந்திருக்கிறோம். எனவே மூப்பனாருக்கு விரோதமாக, மூப்பனாருக்கு சம்மதம் இல்லாமல் நடப்பதைப் போல இங்கே பேசுவது....

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, இதுபற்றி நீண்ட விவாதம் செய்வதற்கு நேரமில்லை. திரு. குமாரதாஸ் அவர்கள் அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் சொன்ன அந்த **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஏற்கெனவே நீக்கப்பட்டு விட்டது. திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, அவர் சொன்ன ** என்ற சொற்கள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டன. (குறுக்கீடு) எல்லாம் நீக்கப்பட்டுவிட்டன. திரு. குமாரதாஸ், நீங்கள் அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது பேரவைத் தலைவரை முன்வைத்து, பேரவைத் தலைவரை நோக்கிப் பேச வேண்டுமே தவிர, நீங்கள் ஒருவருக்கொருவர் வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்வது நல்லதல்ல. அது முறையும் அல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2003 ஜனவரி 30

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் உங்களைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர் என்னைப் பார்த்து ** என்று கேட்டால், அது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைச் சொல்லவில்லை. பொதுவாக எல்லோரையும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், நீங்கள் அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் கழிந்த ஆட்சி (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் சொன்ன அந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான், ** என்ற வார்த்தை நீக்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவர் என்னைப் பார்த்து ** என்று கேட்கிறாரே, அது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதுவும் நீக்கப்பட்டுவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** உங்களுக்கு இருப்பதைவிட அதிகம் இருக்கிறது குமாரதாஸிற்கு. சும்மா உட்காருங்கள் ஐயா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் என்னை நோக்கி நீங்கள் பேசுங்கள். அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, நீங்கள் ஆட்சேபித்த சொற்கள் நீக்கப்பட்டுவிட்டன. (குறுக்கீடுகள்) நீங்கள் ஆட்சேபித்த சொற்கள் நீக்கப்பட்டுவிட்டன. தாங்களும் அதே பாணியில் ** என்று பேசுவது முறையல்ல. அதுவும் நீக்கப்பட்டுவிட்டது. உட்காருங்கள். திரு. குமாரதாஸ், அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் கடந்த ஆட்சி நடைபெற்றபோது இறுதிக் காலக்கட்டத்தில் என்ன சொன்னார்கள் தெரியுமா? (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், இருங்கள். என்ன, திரு. எஸ்.ஆர்.பி. சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. சொல்லுங்கள். என்ன விஷயம் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான்தான் சொல்ல வருகிறேன். நீங்கள் சொல்ல விடமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பிறகு அவரையே பேச விடுகிறீர்கள். நாங்கள் சொன்னால், வியாக்யானம் பண்ணுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. குமாரதாஸ், உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது சபையிலே ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போதோ அல்லது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிற நேரத்திலோ, உறுப்பினரைப் பார்த்து நேரடியாக இன்னொரு உறுப்பினர் பேசுவதும், அது இவருக்குத்தான் பொருந்தும் என்று சொல்வதும் சரியல்ல. அதை எப்படி நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அகற்றினால் போதுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. இதுபோன்ற நடைமுறையை கடைப்பிடிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தொடர்ந்து அவர் செய்கிறார். நேற்றும் செய்தார் என்று சொன்னாலும், அது நேற்றோடு முடிந்து போய்விட்டது. நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து அகற்றிவிட்டீர்கள். போதும் என்று நான் என்னுடைய கட்சிக்காரர்களிடத்திலே சொல்லிவிட்டேன். ஆனால் தொடர்ந்து வேண்டுமென்றே இழிவுபடுத்துகிற வகையில் வேண்டுமென்றே ஆத்திரமூட்டுகிற வகையில்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. குமாரதாஸிற்கு மட்டுமல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும்.

[பேரவைத் தலைவர்] [2003 ஜனவரி 30

இதைப்போல நேரடியாக வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்ளக்கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே அறிவுறுத்துகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இந்த மாதிரி தொடர்ந்து அவர் செய்வதை அனுமதித்தால், நாங்கள் இந்தப் பேரவை நிகழ்ச்சியிலே கலந்துகொள்ளவில்லை. நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். நாங்கள் கலந்துகொள்வதை நீங்கள் விரும்பவில்லை என நினைக்கிறேன். நாங்கள் கலந்துகொள்ளக்கூடாது என்பதற்காகவே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, தாங்கள் சொன்ன கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டேன். *(குறுக்கீடு)* அவர் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. பதிலுக்கு நீங்களும் ஆத்திரப்பட்டு உங்களுக்கு ** இருக்கிறதா என்று சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. *(குறுக்கீடுகள்)* ஒட்டுமொத்தமாக நான் சொல்வது, பேரவைத் தலைவரை நோக்கி நீங்கள் பேச வேண்டுமே தவிர, உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்ளக்கூடாது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எல்லா உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும். உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் ** என்கிற சொல் Parliamentary தான். It is not Unparliamentary.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சொற்கள் என்பது Parliamentary-யா Unparliamentary-யா என்பது வேறு. சொல்லக்கூடிய முறை, சொல்லக்கூடிய பாணி, இவை எல்லாம் மனதைப் புண்படுத்தக்கூடிய வகையில் வரக்கூடாது. *(குறுக்கீடு)* அவரைப் பார்த்து நீங்கள் கேட்பதும் முறை இல்லையே?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொன்னது பாராளுமன்ற நடைமுறைக்கு ஒவ்வாத வார்த்தை அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் எல்லாமே அவைக் குறிப்பில் இருக்கட்டும். அவர் சொன்ன ** இருக்கட்டும். நீங்கள் சொன்ன** இருக்கட்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஜனவரி 30]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் தொடர்ந்து இப்படித்தான் பேசுவார். அதை நீங்கள் அனுமதிப்பீர்கள். அனுமதிப்பது மட்டுமல்ல, நாங்கள் வைத்த கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்று சொல்லிவிட்டால், நாங்கள் அவை நிகழ்ச்சிகளிலே இருந்து வெளியேறிவிடுகிறோம். நாங்கள் கலந்துகொள்ளத் தயாராக இல்லை. இது முறையும் இல்லை. இன்று ஒரு நாள் அல்ல. நேற்றும் இதேமாதிரி பேசியிருக்கிறார். நேற்று அவைக் குறிப்பிலிருந்து அகற்றிவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று அவர் பேசவே இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தனிப்பட்ட முறையில் ஒருவரை இகழ்ந்து பேசுவது, தனிப்பட்ட முறையில் மனம் புண்படும்படி பேசுவது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிப்பட்ட முறையில் அவர் யாரையும் பேசவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னென்ன மோசமான வார்த்தைகளைப் பேசினார் என்று அங்கே இருந்து நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். நான் கேட்காமல் இல்லை. என்னுடைய நிலை உங்களுக்குத் தெரியும். நான் ஏன் உள்ளே வரவில்லை என்று உங்களுக்குத் தெரியும். நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். அதுதான், வேறு ஒன்றும் காரணம் இல்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. குமாரதாஸ் அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் தொடர்ந்து இதேபோல பேசிக்கொண்டிருந்தால் நாங்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்ய வேண்டி வரும்.

*முற்பகல் 11-55*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைப்பதற்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிபற்றி என்ன சொன்னார் தெரியுமா? மக்கள் விரோத அரசு, எனவே அந்த மக்கள் விரோத அரசோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தோடு எந்தவிதமான ஒட்டும் உறவும் கிடையாது என்று சொல்லித்தான், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் செய்த கொடுமையை எண்ணித்தான் அவரோடு சேர்ந்தவர்களும் அந்தக் கூட்டணியை வலுவாக எதிர்த்தோம்,

[டாக்டர் தே. குமாரதாஸ்] [2003 ஜனவரி 30

வெளியேறினோம். ஆனால் இன்றைக்கு பாவம் ஒரு சட்டமன்ற உறுப்பினர் பதவி கிடைக்காதா என்பதற்காக . . . (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** Point of order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன திரு. துரைமுருகன், அவர் பேசி முடிக்கட்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் சாத்தான்குளத்தில் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. குமாரதாஸ். திரு. துரைமுருகன் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் அவர் கருத்துகளைச் சொல்வதிலே எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. இன்னும் சொல்லப்போனால் கொஞ்சம் வேகமாகப் பேசுவதைக்கூட நான் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடியவன்தான். ஆனால் அவர் காலையிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகத்தை கொஞ்சம் உரசிப் பார்த்தார். நேற்று உரசிப் பார்த்திருக்கிறார். இப்போது நாங்கள் மூப்பனாருக்கு ஏதோ துரோகம் செய்துவிட்டோம் என்று ஒரு புதிய குற்றச்சாட்டைச் சொல்கிறார். ஆனால் இதுவரையிலே அவர் பேசியதை நான் எப்படி எடுத்துக்கொண்டேன் என்றால், எங்கள் வீட்டுத் திருமணத்திலே ஒரு நாதஸ்வர கச்சேரியை வைத்தேன். அந்தக் கச்சேரியை நடத்தியவர், அற்புதமாகப் பாடினான் அந்தப் பாட்டை. அதே கச்சேரிக்காரன் வேறு ஒரு வீட்டுக் கல்யாணத்தில் போய் பாடுகிறான். நான் சபாஷ் சொல்வேனே தவிர வேறல்ல. ஏனென்றால் இங்கே பாடுவது மாதிரிதான் அங்கே பாடுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்று நினைப்பேன். அதனாலே அவர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கதை சொல்வதற்கு நேரமில்லை. (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சேரி நடத்திப் பழக்கப்பட்டவர்களுக்கு கச்சேரியினுடைய சிந்தனைதான் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அதிலே நான் குறிக்கிட விரும்பவில்லை. எனவே இந்தச் சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் தனியாக நிற்கப் போகிறோம், சாத்தான்குளத்திலே தேர்தலை சந்திக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள்



2003 ஜனவரி 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

இன்றைக்கு மடிப்பிச்சை ஏந்தி நின்றுகொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையைப் பார்க்கின்றபோது . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு யாருக்கும் அனுமதி இல்லை. திரு. குமாரதாஸ் பேசுங்கள். பேசி முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மடிப்பிச்சை ஏந்தி நிற்கிறார்கள் ஓட்டுக்காக. மக்கள் தலைவரை அவமதித்தவர்களை, மக்கள் தலைவர் ஐயா மூப்பனாரை ஏற்றுக்கொள்ளாத நபர்களை, இன்றைக்கு தேடிச் சென்று அவர்கள் முன்னாலே நிற்கிற சூழ்நிலையைப் பார்க்கிறபோது உள்ளபடியே வேதனையான ஒரு சூழ்நிலை. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் ஆலமரமாக அவருடைய கட்சி இருக்கிறது என்று சொல்கிறார். எங்களுடைய பார்வையிலே இன்றைக்கு கமுக மரம் அளவுக்குக்கூட இல்லை. கமுக மரம் என்று சொன்னால், அந்த அளவுக்குக்கூட இல்லை. அவர்கள் இன்றைக்கு நாடிச் சென்று உங்களுக்குத் தேர்தலிலே நாங்கள் வாக்களிக்கிறோம் என்று சொன்னால், அங்கே நின்றால் பருப்பு வேகாது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தெரியும். தெம்பு இருந்தால், துணிவிருந்தால் அங்கே எத்தனாவது இடத்திற்கு வருகிறோம் என்கிற விதத்திலேயாவது ஒரு பரிட்சையாவது திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திப் பார்த்திருக்கலாம். அதற்குக்கூட அவர்களுக்குத் துணிவில்லை என்கிற ஒரு சூழ்நிலை...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** என்ற ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருப்பதை நான் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் பேசட்டும். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக் கொள்ளக்கூடாது. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக் கொள்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) வேறு யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் . . . (குறுக்கீடுகள்)

[2003 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) தி.மு.க. உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) மீண்டும் நேற்றைய நிலைமைதான் மறுபடியும் தொடரக்கூடிய சூழ்நிலை வரும். (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இடத்திற்கு முதலிலே போங்கள். திரு. குமாரதாஸ் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி, உங்கள் இடத்திற்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி, உங்கள் இடத்திற்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) இடத்திற்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதியை அவையைவிட்டு வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் தி.மு.க. உறுப்பினர்கள் அவர்களுடைய இடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவரவர்களிடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உங்களுடைய கட்சி உறுப்பினர்களை அவரவர்களுடைய இடத்திலே உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலிலே உங்களுடைய இடத்திலே உட்காருங்கள்.

*நண்பகல் 12-00*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நான் மீண்டும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய கட்சி உறுப்பினர்களை அவரவர்களுடைய இடத்திலே உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) திரு. அசோகன், இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இடத்திற்குப் போங்கள். அசோகன், இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இடத்திலே போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப் போல, ஆளும் கட்சி, அவர்களுக்கு அனுசரணையாக இருக்கிற கட்சிகள் கொஞ்சம்கூட நாக்கில்



2003 ஜனவரி 30] [திரு. துரைமுருகன்]

நரம்பு இல்லாமல் எதிர்க்கட்சிகளை விமர்சிப்பதை நீங்கள் அனுமதிக்கிற காரணத்தால்இந்தச் சபை நடவடிக்கைகளில் நாங்கள் கலந்துகொள்ளவில்லை என்பதைத் தெரிவித்து, நாங்கள் இன்றைக்கு வெளிநடப்புச் செய்கிறோம். நாளைக்கும் இதேபோல், நாங்கள் வரமுடியாது என்பதை, தங்களுக்கு-நாளைக்கும் நாங்கள் கலந்துகொள்ள மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியே போங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் என்று சொன்னாலே தி.மு.க.-வினர் ஓட்டம் பிடிக்கிறார்கள் என்பதைத்தான் இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது என்ன சொல்லிவிட்டார்? சாத்தான்குளத்தில் போட்டியிட வருகிறீர்களா என்று கேட்டார். உடனே ஓட்டம் பிடிக்கிறார்கள். பதில் சொல்ல முடியவில்லை. இன்று மட்டும் இல்லை; நாளைக்கும்கூட வரப்போவதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இவர்கள் எந்த அளவிற்கு ஜனநாயக மரபுகளை மதிக்கிறார்கள் என்பதை இதிலேயிருந்தே தெரிந்துகொள்ளலாம். நானும் அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் வெளியேறுவதானால் வெளியேறுங்கள். அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகத்தை ஏற்படுத்தாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானங்கள்

*(அ)* திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் தீர்மானம் கொண்டு வாருங்கள்.

**•மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அவையினுடைய அமைதியைக் குலைக்கும் வண்ணம், கண்ணியத்தைக் காற்றில் பறக்கவிடும் வண்ணம், அடாவடித்தனமாகப் பேசிக்கொண்டு, கலாட்டா செய்கின்ற தி.மு.க. வினரை அவையை விட்டு வெளியேற்ற வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2003 ஜனவரி 30

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

வெளிநடப்புச் செய்கிறோம் என்று அவர்களுடைய துணைத் தலைவர் அறிவித்ததற்குப் பிறகும் உள்ளே இருந்துகொண்டு, வேண்டுமென்றே குழப்பம் விளைவிக்கிற தி.மு.க. உறுப்பினர்களை அவைக் காவலர்கள், வெளியேற்ற வேண்டும் என்று கட்டளையிடுகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை அவைக் காவலர்கள் அவையிலிருந்து வெளியேற்றினர்.)

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில், நான் உங்களை மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த ஆளுநர் உரையில் நான் என்னுடைய கருத்துகளை அழகாக இங்கே கூறியிருக்கிறேன். தொடர்ச்சியாக நான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குச் சில கோரிக்கைகளை உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்று சொன்னால், இன்றைய சூழ்நிலையில் எல்லாப் பகுதிகளிலும் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்;** பஞ்சம், பசி என்கிற ஒரு சூழ்நிலையை மாற்றி நீங்கள் ஏழை எளிய மக்களுக்கு வயிறார உணவு கொடுத்திருக்கக்கூடிய சூழ்நிலையில், உங்களுக்குத் தெரியாமல் ஒன்றிரண்டு தவறுகள் பல்வேறு பகுதிகளிலே நடந்திருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன்.

*பிற்பகல் 12-05*

குறிப்பாக நான் இரண்டு தினங்களுக்கு முன்பு வேளாங்கண்ணி திருக்கோயிலுக்குச் சென்றிருந்தேன். அப்போது அந்தப் பகுதியினுடைய (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தவர்களை வெளியேற்றுகிற



2003 ஜனவரி 30] [பேரவைத் தலைவர்]

நடவடிக்கை இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் வெளியேறட்டும், அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அங்கே சென்றிருந்தபோது, முதியோர் இல்லம், உடல் ஊனமுற்றோர் விடுதி, மனவளர்ச்சி குன்றியோர் பகுதி ஆகிய பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 70 கிலோ அரிசியை நீங்கள் (குறுக்கீடுகள்) வழங்கிக்கொண்டிருந்தீர்கள். மாதம் ஒன்றுக்கு 2,020 கிலோ அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேச அனுமதி கொடுக்காததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். இன்றைய நிகழ்ச்சிகளை புறக்கணிப்பு செய்கிறோம். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், பேசி முடியுங்கள், (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. பழனிசாமி அவர்களைக் கேட்கிறேன். கொஞ்சம் நடுநிலையோடு நடந்து கொள்ளுங்கள், எல்லாவற்றிலும் அரசியல் செய்யப் பார்க்காதீர்கள். என்னென்ன நடக்கிறது என்பது உங்களுக்கே தெரியும். தயவுசெய்து அமருங்கள். திரு. குமாரதாஸ், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில் நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எனவே ஒன்றிரண்டு கருத்துகளை மாத்திரம் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்) நான் இரண்டு தினங்களுக்கு முன்பாக... (குறுக்கீடுகள்)

(சட்டமன்ற வளாகத்தில் நின்றுகொண்டு சில உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அநாவசியமாக கோஷம் போட்டு அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பவர்களை சட்டசபை வளாகத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எனவே இந்தச் சூழ்நிலையிலே (குறுக்கீடுகள்) போவதாக இருந்தால் போங்கள்; இருப்பதாக இருந்தால் இருங்கள்.

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஒன்றிலாவது அவர்கள் உட்கார்ந்திருந்தால் மிக நன்றாக இருக்கும், போவதாக இருந்தால் போகட்டும். எனக்கு nuisance-ஆக இருக்கிறது இல்லையா? (குறுக்கீடுகள்) எனவே அம்மாவினுடைய கவனத்திற்கு நான் ஒன்றிரண்டு கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், என்ன?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியை ஆதரித்துப் பேசுவதிலே எந்தவிதமான தவறும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், குமாரதாஸ் பேசியது அவை மாபுக்கு மீறியது அல்லது விதியை மீறியது என்று ஏதாவது ஒரு வார்த்தையைச் சொல்லுங்கள், நான் அந்த வார்த்தையை நீக்குவதற்குக் கட்டளையிடுகிறேன். அவை மரபுக்கு உட்பட்டு, எல்லா உறுப்பினர்களும் எப்படிப் பேசுகிறார்களோ, அதைப்போலத்தான் அவரும் பேசுகிறார். தி.மு.க. உறுப்பினர்கள் பேசவில்லையா? திரு. பொன்முடி பேசவில்லையா? இதற்கு முன்னாலே திரு. பரிதி இளம்வழுதி பேசவில்லையா? அவர்கள் பேசியதை எல்லாம் நான் அனுமதிக்கவில்லையா? என்னென்ன வகையிலே எல்லாம் அவர்கள் கிண்டல் செய்தார்கள்? முதலமைச்சர் கனவு கண்டார் என்றெல்லாம்கூட பேசினார்கள். அதுவெல்லாம் அனுமதிக்கப்பட்டது. ஆக, அவை மரபுக்கு உட்பட்டு, விதிக்கு உட்பட்டு பேசக்கூடிய கருத்துகள் காரமாக இருந்தாலும்கூட அவற்றை ஒப்புக்கொள்வதுதான் மரபு. இல்லாவிட்டால் அவையை நடத்த முடியாது. அவையிலே சில அரசியல் கருத்துகள் வரக்கூடும். அவற்றைத் தாங்கிக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் வேண்டுமே தவிர, எதைச் சொன்னாலும் உடனே கோபப்படக்கூடாது. அவர் என்ன சொன்னார்? சாத்தான்குளம் தொகுதிக்கு வருகிறீர்களா என்று கேட்டதிலே இவ்வளவு ஆத்திரப்படுவதற்கு என்ன இருக்கிறது? இவ்வளவு கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது? அவர்கள் வரவேமாட்டோம் என்று சொல்லிவிட்டு எங்கே போகிறார்கள்? ஆக இவையெல்லாம் ஏற்புடையதல்ல, நீங்கள் எல்லாவற்றையும் பார்த்துக்





கொண்டிருக்கிறீர்கள். அரசியல் காரணத்துக்காக இவற்றையெல்லாம் பயன்படுத்துவது முறையல்ல. திரு. குமாரதாஸ் அவர்கள் மரபை மீறி, விதியை மீறி, சட்டசபையில் பயன்படுத்தக்கூடாத சொற்கள் எதையாவது பேசியிருந்தால் நீங்கள் சொல்லுங்கள், நான் அவற்றை நீக்குவதற்குக் கட்டளையிடுகிறேன்.

*பிற்பகல் 12-10*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த உறுப்பினரும் ஒருமையிலே பேசுவதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? அது நடக்கவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருமையிலே யாரும் பேசவில்லை. சபைக்குள் ஒலி பெருக்கியிலே யாரும் ஒருமையிலே பேசவில்லை. பேச வேண்டிய கருத்துகளைப் பேசினார்கள். (குறுக்கீடு)அப்படிப் பேசியது நீக்கப்பட்டிருக்கிறது. நான் உறுப்பினர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன். ஒருவரையொருவர், நீங்கள் நேருக்கு நேர் பார்த்துப் பேசிக்கொள்ளாதீர்கள்; பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள். கோபம் வந்தால்கூட பேரவைத் தலைவர் மேலே காட்டுங்கள். நான் தாங்கிக்கொள்கிறேன். எதற்காக நீங்கள் ஒருவரையொருவர் பார்த்துப் பேசிக்கொள்கிறீர்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறேன். அப்படியிருந்தும்கூட, பேசிக்கொண்டு அவர்களே விவகாரத்தை வளர்த்துக்கொண்டு, அவர்களே வெளியேறிப் போயிருக்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்வது? திரு. குமாரதாஸ் அவர்கள், பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள், அதனால் நான் உட்கார்ந்திருக்கிறேன். அதுதான் மரபு, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். சரி, பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளை எதிரிக் கட்சிகளாகத் தாங்கள் என்றும் நிச்சயமாகக் கருதமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கருதுவதில்லை. நான் சபாநாயகர், எனக்கு எல்லோரும் சமம். எதிரிக் கட்சி என்று ஆளும் கட்சியே கருதவில்லை. முதலமைச்சர் அவர்களே கருதவில்லை. சொல்லக்கூடிய கருத்துகளை, ஆக்கப்பூர்வமான கருத்துகளைக்

கேட்டுக்கொள்கிறார்கள். அதற்குப் பதில் சொல்கிறார்கள். எல்லா குற்றச்சாட்டுகளுக்கும், எதுவாக இருந்தாலும் ஏற்றுக்கொண்டு நேருக்கு நேராக உட்கார்ந்து பதில் சொல்லக்கூடிய ஒரே முதலமைச்சர் தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலேயே இவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதும் எழுந்து போவதில்லை; அவர் எந்தப் பிரச்சினையானாலும் எழுந்து போவதில்லை. எந்தக் குற்றச்சாட்டு வந்தாலும் எழுந்து போவதில்லை. எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஜனநாயகக் கடமையை ஆற்றாமல், இதிலே தப்பித்தோம் பிழைத்தோம் என்று எதற்காக ஓட வேண்டும்?

**திரு. ஐ. கணேசன்:** முதலமைச்சர் அவர்கள் நேருக்கு நேர் பதில் சொல்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. எங்களுக்கு அதிலே எந்தவிதமானதொரு வெறுப்பும் கிடையாது. ஆனால் ஓர் உறுப்பினர் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. கணேசன், இவையெல்லாம் நீக்கப்பட்டுவிட்டன. பேசியது எல்லாமே அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டுவிட்டன.

**திரு. ஐ. கணேசன்:** நீக்கியதை மறுபடியும்—அதைச் சொன்னார். நீங்கள் சொன்னதனாலே நான் ஒத்துக்கொள்கிறேன், அதுவும் இருக்கட்டும், இதுவும் இருக்கட்டும் என்று.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் சொன்னால், மறுபடியும் நீக்கப்படும். அவ்வளவுதான்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, நீங்களே உறுதி சொன்னீர்கள், நமக்குள்ளே வாக்குவாதம் வேண்டாம் என்பதற்காக நான் ரொம்பவும் அமைதியாகப் போகிறேன். மறுபடியும் காங்கிரஸ் தலைவர் சொன்னதனாலே, நீங்கள் சொன்னதனாலே, அதுவும் இருக்கட்டும் என்று நீங்கள் கோபமாகச் சொன்னீர்கள். அதுவும் அவைக் குறிப்பிலே இருக்கும். இருந்தாலும், எங்களுக்கு–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, காங்கிரஸ் தலைவர், அவரைத் திரும்பிப் பார்த்து, திரு. குமாரதாஸைத் திரும்பிப் பார்த்துக் கேட்டார். திரு. குமாரதாஸ் கேட்டதைப் போலவே அவரும் திரும்பக் கேட்டார். ஆகவே இரண்டும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது என்று நான் சொன்னேன். இல்லை, அதிலே என்ன மாறுபாடு இருக்கிறது, அது இருக்கட்டும் என்று அவர் வாதாடினார். இருக்கட்டும் என்றால், திரு. குமாரதாஸ் பேசியதும் இருக்கட்டும் என்று நான் சொன்னேன். இப்போது நீங்கள் கோரிக்கை வைத்தால், அவற்றையெல்லாம் நீக்குவதற்கு நான் கட்டளையிடுகிறேன். போதுமா, உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீக்கியது நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டியது. யார் எதைப் பேசினாலும், நேற்று நான் பேசும்போது எவ்வளவோ குறுக்கீடுகள் வந்தன. எப்படி எப்படியோ வந்தன. நீங்கள் கொடுத்த அதே புள்ளிவிவரங்களை அப்படியே எடுத்துச் சொன்னேன். அதையேதான் முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். அந்தப் புள்ளி விவரத்திலேயிருந்துதான் அதையும் எடுத்துச் சொன்னார்கள். அதற்குக் கூட எவ்வளவோ மறுப்பு வந்தது. நான் எந்தவிதமான வார்த்தைகளையும், தகாத வார்த்தையையும் பயன்படுத்தவில்லை. இந்த அவையிலே இருக்கிறது, Record-லே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் மேலே எந்தக் குற்றச்சாட்டும் சொல்லவேயில்லையே?

**திரு. ஐ. கணேசன்:** அதைப்போல, இந்த கவர்னர் உரையிலே பேச வேண்டியதை, அருமை நண்பர் கவர்னர் உரையிலே பேசியிருந்தால் நிச்சயமாக எந்தவிதமான பிரச்சினையும் வந்திருக்காது. அதை விடுத்து, அவர்கள் இருந்த, கட்சியிலேயிருந்த மாறுபட்ட கருத்தினை இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு இன்று அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். அந்தக் கால நேரத்தை வீணாக்கியிருக்கிறீர்கள். இதுதான் என்னுடைய மன வேதனை என்பதைச் சொல்லி, நீங்கள்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், பேசுகிறபோது அரசியல் கருத்துகளை அந்தந்த உறுப்பினர்கள் சொல்ல வேண்டிய சில நிலைமைகள் வரலாம். அதை அனுமதிப்பது என்பது மரபு. கடந்த காலத்தில் இந்தச் சட்டமன்றத்திலே பேசப்பட்ட பேச்சுக்களெல்லாம் உங்களுக்குத் தெரியாதா? கடந்த சட்டமன்றத்திலே நீங்கள் இருந்தீர்களா இல்லையா? என்னென்ன பேசப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா தெரியாதா? இன்றைய முதலமைச்சர் அவர்களைப்பற்றி கடந்த காலத்திலே, சட்டமன்றத்திலே ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்னென்ன பேசினார்கள் என்பது அவைக் குறிப்பிலே இருக்கிறது. எடுத்து வாசிக்கட்டுமா,

என்னென்ன பேசினார்கள் என்று. ஆகவே அரசியல் கருத்துகளைப் பேசுவது என்பதை நாம் தடுக்க முடியாது. அதிலே அவை மரபை மீறி, விதியை மீறி, ஏதாவது வார்த்தைகள் வந்தால் அதைத்தான் நாம் நீக்க முடியும். அதைத்தான் நான் செய்திருக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** நீங்கள் சொல்லியபடி அந்த ஒருமையிலே பேசியது, மற்ற Unparliamentary வார்த்தைகளைப் பயன்படுத்தியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டீர்கள் என்ற ஒரே காரணத்திற்காக எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக உங்களுக்கு என் நன்றியைச் சொல்லி, இனிமேல் அவையிலே எந்த உறுப்பினரும் நான் உட்பட, எந்த உறுப்பினரும் ஒருமையிலே பேச அனுமதிக்கக்கூடாது என்பதுதான் (குறுக்கீடு) எங்களுடைய ஆழமான கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவரைக்கும் அனுமதித்ததில்லை; இனி அனுமதிக்கவும் மாட்டேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 12-15*

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். அதாவது கடந்த 2, 3 நாட்களாக இங்கே நடந்துகொண்டு இருக்கக்கூடிய விவாதங்கள், வெளிநடப்புகள், வெளியேற்றங்கள், இவற்றை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் குறிப்பிட்ட சில பிரச்சினைகளுக்காக சேர்ந்து வெளிநடப்புச் செய்கிறபோது, இது ஒரு அரசியல் அணி என்கிற நிலையிலே ஆளும் கட்சி உறுப்பினர்களோ அல்லது பேரவைத் தலைவர் அவர்களோ கருத வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் அந்த மாதிரி இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள், தி.மு.க. உறுப்பினர்களை வெறும் வார்த்தை ரீதியிலே சொன்ன ஒன்றிரண்டு வார்த்தைகள் சரியல்ல அவற்றை நீக்க வேண்டும் என்கிற பிரச்சினையே எழவில்லை. அது வந்திருக்கிறது. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நீங்கள் சொன்னீர்கள், சரி. ஆனால் அவர் பேசிய மொத்த பேச்சும் அரசியல் வெளி மேடைகளிலே பேசுவதாக இருந்ததே தவிர, கவர்னர் உரையின்மீது அவர் பேசும் பேச்சாக நிச்சயமாக அமையவில்லை. மொத்தமாக—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. கருணாகரன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எப்படிப் பேச வேண்டும் என்றெல்லாம் பாடம் நடத்த முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒரு பாணி இருக்கிறது.





ஒவ்வொருவருக்கும் கருத்துகளைச் சொல்வதற்கான ஒரு முறை இருக்கிறது. ஆக, அதிலே குறுக்கிட்டு இப்படித்தான் நீங்கள் பேச வேண்டும் என்றெல்லாம் கட்டளையிட முடியாது. தாங்களே பேசலாம். தாங்களே பல கருத்துகளைப் பேசலாம். அரசியல் கருத்துகளைப் பேசலாம். பேசுவதற்கான வாய்ப்பிருக்கிறது. கண்ணியமான சொற்களைப் பயன்படுத்த வேண்டும். சட்டமன்றத்திற்கு உட்பட்ட கண்ணியமான சொற்களை, வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்கிற அளவிலேதான் நான் கட்டுப்படுத்த முடியும். ஆகவே தாங்கள் ஒட்டுமொத்தமான பேச்சை குறை சொல்வதும், ஓர் உறுப்பினரை குறை சொல்வதும் முறையல்ல.

**திரு. கே.சி. கருணாகரன்:** நிச்சயமாக அவருக்குப் பாடம் கற்பிப்பதோ, அவருடைய நோக்கத்திற்கு மாறுபட்டு புரிந்துகொள்வதோ அல்ல. அப்படி நான் சொல்ல வரவில்லை. அவர் எல்லா கட்சிகளையும்—இரண்டு கட்சிகளை மட்டும் அல்ல, எங்களை உட்பட அனைத்துக் கட்சிகளையும் விமர்சனம் பண்ணுகிறார். அதற்கு நாங்கள் பதில் சொல்லும்போது, நீங்கள் சொல்கிற மாதிரி சொல்வோம். ஆனால் இப்படிப்பட்ட ஒரு காரசாரமான விவாதம் நடப்பதற்கு அவர் அதிக நேரம் எடுத்துக்கொண்டதும், இந்தச் சபை அனுமதித்ததும் தவறு என்பது எங்களுடைய கருத்து. நீங்கள் அவருடைய வார்த்தையை நீக்கினீர்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அவருடைய பேச்சைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** ஒரு நிமிடம் (குறுக்கீடு) ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினைகள் எங்களுடைய கட்சியினுடைய தலைவர் பேச்சை சுற்றி வந்த காரணத்தினால் ஓர் அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நாங்கள் இங்கே ஆன்மீகக் கூட்டம் நடத்துவதற்காக வரவில்லை. அரசியல் கருத்துகள் பேசப்படத்தான் செய்யும். ஆனால் பிறருடைய மனதைப் புண்படுத்துகிற விதத்திலே இருக்கும் என்று சொன்னால், அதற்காக நாங்கள் வருத்தம் தெரிவிக்கவும் தயாராக இருக்கிறோம். அவை தவறு என்று சொன்னால், அவைத் தலைவர் நீக்கினால் நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அரசியல் ரீதியாக எங்களுக்கு என்று சில கொள்கைகள் இருக்கின்றன. எங்களுக்கு என்று சில பிரச்சினைகள் இருக்கின்றன. ஆக,

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2003 ஜனவரி 30

கவர்னர் உரையின்மீது பேசுவது என்று சொன்னால், கவர்னர் உரையின்மீது மாத்திரமே எல்லோருமே அப்படியே சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு அதையே சுற்றி வருகிற மாதிரியும், நாங்கள் மாத்திரம் வெளிக் கோட்டிலேயிருந்து தாவி வந்துவிட்டோம் என்கிற மாதிரியும் பேசிக்கொண்டிருப்பது நியாயம் அல்ல. எங்களுக்கு யாரும் ஆலோசனை சொல்லக்கூடாது என்பதற்கு அல்ல. அறிவு பூர்வமாக அதை ஏற்றுக்கொள்ளத் தகுதியாக இருந்தால் பரிபூரணமாக நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தலைவர் காமராஜரிடத்தில் நாங்கள் கற்ற பாடத்தில், தலைவர் மூப்பனாரிடத்திலே நாங்கள் தெரிந்துகொண்ட விஷயத்தில் எங்களுக்கு அரசியல் ரீதியாக உராய்வு இந்தக் காலக்கட்டத்தில் வரும் என்று சொன்னால், அதற்குப் பதில் சொல்லித்தான் தீர வேண்டும் என்ற அடிப்படையில் இவை சொல்லப்படுகிறது. சகிப்புத்தன்மை இல்லை, நிதானம் இல்லை, பொறுத்துக்கொள்கிற வழி இல்லை. ஆகவே அவர்கள் தங்கள் கசப்பைத் தெரிவிக்கிறார்கள். ஆகையால் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய துணைத் தலைவருக்கு மரியாதைக்குரிய என்னுடைய அன்பு அண்ணன் ஜஜி. அவர்களுக்கு நான் பணிவன்போடு இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறேன். நாங்கள் யார்மீதும் மாசு தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தெரிவிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜஜி. என்பது கணேசனைத் தானே சொல்கிறீர்கள். காக்கி உடை போட்டால் I.G. மாதிரித்தான் இருப்பார். (சிரிப்பு)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** அதே நேரத்தில் ஒரு பணிவான வேண்டுகோள், மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பரிதி எப்படி வந்தார் என்பதையும் பார்த்தீர்கள். அவர் என்ன சொன்னார், தெருச் சண்டைக்குத் தயார். குமாரதாஸ் நீ சென்னையிலே வெளியே வந்தால் ஆள் அடிபட்டுப் போகும். உன்னைக் கொலை செய்யாமல் விட மாட்டோம் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். தகுந்த பாதுகாப்பும் தர வேண்டும். அதன்மீது உரிய நடவடிக்கையும் எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் ஏற்கெனவே தேர்தல் நடைபெற்ற காலத்திலேயே—அதெல்லாம் கலவரத்திற்குள்ளாக்கப்பட்ட விஷயங்கள். அவருடைய தொகுதியில் நடந்தது உங்களுக்குத் தெரியும். அவர் நடந்துகொண்டதும் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இந்த மாதிரி அரசியல் நடவடிக்கைகளையும் நாட்டு மக்கள் அறிவார்கள். தாங்களும் அறிவீர்கள். அமைச்சர் பெருமக்களும் அறிவார்கள். அம்மா அவர்களும் அறிவார்கள்.



2003 ஜனவரி 30] [திரு. எம்.ஏ. ஹக்கீம்]

ஆகையினாலே அத்துமீறி வந்தது மாத்திரமல்ல. அக்கிரமமான வார்த்தைகள். நீ வெளியிலே வந்தால் உன்னை கொலை செய்யாமல் விட மாட்டோம், நீ வாடா பார்ப்போம் என்று சவால் விட்டுவிட்டு இங்கே பேசிவிட்டுப் போவது என்பது எந்த வகையில் நியாயம்? இதற்கு எங்களுக்கு ஒரு நீதி, நியாயம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பேரவைத் தலைவர் வாயிலாக பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை உறுப்பினர்களுக்கு முழுமையான பாதுகாப்பு கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக உரிய ஏற்பாட்டை நான் செய்கிறேன் என்கிற உறுதியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம் அவர்கள், இங்கே நடைபெற்ற நிகழ்ச்சியை, அவர் பயன்படுத்திய வார்த்தைகளைக் குறிப்பிட்டு எனக்கு ஒரு விண்ணப்பமாகவும் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குள்—அதுவும் அவர் இருக்கை இங்கே இருக்கிறது. அங்கு சென்று, அந்த இடம் சென்று திரு. ரோகிணி கிருஷ்ணகுமார் அவர்களையும் அடித்துத் தள்ளிவிட்டு, 'கொலை செய்வேன், வெளியே வா' என்று மிரட்டுகிற அளவுக்கு, அவையில் இந்த அளவிற்கு ஒரு வன்முறையை அவையிலேயே கட்டவிழ்த்துவிடக் கூடிய அளவிற்கு, attempt to murder என்ற முறையிலே அவர் செயல்பட்டிருக்கிறார். ஆகவே அவை இதுகுறித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பரிதி இளம்வழுதிமீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் புண்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையிலே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ், பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், தேனி மாவட்டத்திற்கும், வேலூர் மாவட்டத்திற்கும் மருத்துவக் கல்லூரி தந்த அந்த பெருந்தகை எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிந்து வணங்குகிறேன்.

எங்களுடைய மாவட்டம் தொடர்பான சில கோரிக்கைகளை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை நீங்கள் பார்த்து. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னீர்கள். ஒரு நீதிமானாக, நீதி அரசராக இருக்கிற மாண்புமிகு சபாநாயகர் அவர்களை நான் இதயபூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சில கோரிக்கைகளை மாத்திரம் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன்.

வேளாங்கண்ணி பகுதியிலே உள்ள கோவிலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நான் சென்றிருந்தேன். அங்கேயுள்ள பங்கு தந்தை மற்றும் கன்னியர்கள் என்னிடம் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அந்தப் பகுதியிலே முதியோர், உடல் ஊனமுற்றோர், மனநலம் குன்றியோர், இப்படிப்பட்டவர்கள் சுமார் 200, 300 பேர்களுக்கு சாப்பாடு அளித்து, ஹாஸ்டல் நடத்தி வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு ஒரு நாளைக்கு 20 கிலோ அரிசி இவ்வளவு நாட்களாகக் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் திடீரென்று அதை 15 கிலோவாகக் குறைத்திருக்கிறார்கள்.

## 9. உரிமைப் பிரச்சினை திரு. பரிதி இளம்வழுதி மீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள். அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றபோது பரிதி இளம்வழுதி அவர்கள் அவருடைய இடத்தை விட்டு மீறிச் சென்று, இடையிலே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் தள்ளிவிட்டு, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த டாக்டர் குமாரதாஸ் அவர்களை, 'நீ வெளியே வா; சென்னைக்கு வா, உன்னை நான் கொலை செய்கிறேன்' என்கிற அளவிற்குப் பேசியிருப்பது, மிகவும் வருந்தத்தக்கது; அது கண்டிக்கத்தக்கது. ஆகவே பரிதி இளம்வழுதி மீது நீங்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டின் மீது ஆய்ந்து அறிக்கை அளிக்க வேண்டுமென்கிற விண்ணப்பத்தோடு அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.





## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) திரு. பரிதி இளம்வழுதியை வரவு-செலவு கூட்டத்தொடர் முடியும் வரை பேரவை நடவடிக்கையிலிருந்து நீக்கி வைத்தல்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி மீதான குற்றச்சாட்டை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதோடு, அவர் அவையிலே இருக்கின்றபோது டாக்டர் குமாரதாஸ் உயிருக்கோ, அவரை ஆதரிப்பவர்கள் உயிருக்கோ ஆபத்து ஏற்படும் என்கிற சூழலும் இருக்கிற காரணத்தால், தொடர்ந்து பட்ஜெட் கூட்டம் முடியும் வரை அவரை அவையிலே பங்கேற்காமல் நீக்கிவைக்க வேண்டுமென்ற தீர்மானத்தையும் நான் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் ஏற்கப்படுகிறது.

**திரு. ஐ. கணேசன்:** சார், ஆளுநர் உரை வரையுமா? பட்ஜெட் வரையுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பட்ஜெட் வரைக்கும். ஆளுநர் உரை மீதான விவாதம் நாளையோடு முடிந்துவிடுகிறதே!

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்தின்போது, இப்போது நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் நாம் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கே இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் இங்கே வந்து சத்தம் போட்டது உண்மை. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதேபோல, இங்கேயிருந்த அருமை நண்பர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் எதுவுமே பேசவில்லை என்று ஒப்புக்கொள்கிறீர்களா (குறுக்கீடு) அவர்கள் எதுவுமே வாதிடவில்லையா? 'வா, பார்க்கலாம்' என்று சொல்லவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களுடைய இடத்தை விட்டு தாண்டி வந்து திரு. ரோகிணி அவர்களையும் தள்ளிவிட்டு, குமாரதாஸைப் பார்த்து அப்படி மிரட்டி

இருப்பது முறையற்றது. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. கணேசன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கணேசன் அவர்கள். தாங்கள் நியாயமானவர், நடுநிலையானவர், என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். உங்களுடைய உறுப்பினர்களிடத்திலே கேட்டுக்கொள்ளுங்கள். பின்னாலே உங்களுடைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். விசாரித்துக் கொள்ளுங்கள்.

*பிற்பகல் 12-25*

**திரு. ஐ. கணேசன்:** கட்சி உறுப்பினர்கள்தான் நிறுத்தினார்கள். நான் திரும்பிப் பார்க்கும்போது அதைப் பார்த்தேன். ஆனால் அதேபோல அதே வார்த்தைகளை இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் பயன்படுத்தினார்களா, இல்லையா? (கூச்சல்-குழப்பம்) இங்கே எத்தனை பேர் வந்தார்கள்? (கூச்சல்-குழப்பம்) தண்டனை கொடுப்பது என்பதை இந்த கவர்னர் உரையோடு, நாளையோடு முடித்துக்கொள்ளுங்கள். பட்ஜெட் வரைக்கும் என்று சொல்வது ** அர்த்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** பரிதி இளம்வழுதி ஏற்கெனவே இதுபோன்ற குண நலன்களோடு இந்த அவையிலே நடந்து, நீக்கப்பட்டிருக்கிறார். இப்பொழுது அவர் நடந்துகொண்டது என்பது மிகவும் முறைகேடானது. அவர் இடத்தை விட்டு தாண்டி வந்து, இருக்கிற உறுப்பினர்களையெல்லாம் தள்ளிவிட்டு வந்து, குமாரதாஸ் அவர்களை மிரட்டுகின்ற அளவிற்கு வந்திருப்பது என்பது—இதே நிலைமை நீடிக்குமானால் சட்டசபையை நான் நடத்த முடியாது. இது திரு. கணேசன் அவர்களுக்கும் பொருந்தும். குமாரதாஸுக்கு இருந்த நிலைமை நாளைக்கு திருகணேசனுக்கு வராதா? இது எல்லோருக்கும் பொருந்தும். இங்கே வந்து என்னிடத்திலே சத்தம் போடுகிறார்கள். என்னென்ன பேசினார் என்பதை நான் சொல்லவில்லை. நான் தாங்கிக்கொள்கிறேன். ஆனால் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது என்னுடைய கடமை. இதே நிலைமை திரு. பரிதி இளம்வழுதிக்கு வேறொரு உறுப்பினரால் ஏற்பட்டிருந்தாலும்கூட, நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன். ஆகவே நடைபெற்ற இந்தத் தவறை நீங்கள் மூடி மறைக்க வேண்டாம். முலாம் பூச வேண்டாம். உங்கள் உறுப்பினரிடத்திலேயே நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். உரிய தண்டனைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. ஐ. கணேசன்:** அவர்கள் வார்த்தையைப் பயன்படுத்தியது நிச்சயமாக ஒத்துக்கொள்ள முடியாது. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதேபோல, ஆளுங்கட்சியினர் இந்த அடாவடியிலே இந்தத் தகராறிலே நடக்கவில்லையா? (கூச்சல்-குழப்பம்) இதை ஒத்துக்கொள்ள முடியாது. இந்தத் தீர்ப்பு நியாயமான தீர்ப்பு அல்ல. அமைச்சர்களேகூட குறுக்கிட்டுப் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சியினர் ஓர் எல்லைக்கோட்டை மீறி அவர்கள் போகவில்லை.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் தகாத முறையிலே நடந்துகொள்ளலாம். ஆனால் அமைச்சர் அதற்குப் பதில் சொல்வது தவறா?

**திரு. ஐ. கணேசன்:** சட்டமன்ற விதிகளை எல்லாம் படித்து தேர்ந்தவர் என்ற முறையிலே ஒவ்வோர் நாளும் குறுக்கிட்டு குறுக்கிட்டு இந்த ஆட்சியில்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடைபெற்ற தவறுக்கு நீங்கள் நியாயம் கற்பிப்பது சரியல்ல. தயவுசெய்து அமருங்கள். டாக்டர் குமாரதாஸ் நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டம் சம்பந்தமான சில கோரிக்கைகளை மாத்திரம் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன் அவர்களே, போதுமான அளவிற்கு உங்களுக்குப் பேச அனுமதித்தாகிவிட்டது. உங்கள் கருத்துகளைச் சொல்ல அனுமதித்தாகிவிட்டது. இந்த விவாதத்தை நீங்கள் நீட்டித்துக்கொண்டிருப்பது முறையல்ல. என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ** இங்கே நடந்துகொண்டதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. போங்கள்.

*(உறுப்பினர் திருமதி வி. சிவகாமி அவர்களைத் தவிர, எஞ்சிய பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)*

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்–தொடர்ச்சி

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தர வேண்டும் என்ற ஒரு கோரிக்கையினை நான் அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே சமர்ப்பிக்கிறேன். காரணம் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் அங்கே மீன்பிடி தொழில் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு அது பயன்பட வேண்டுமென்ற விதத்திலே, ஆட்சியிலே உங்களுக்கு பல்வேறு பணக் கஷ்டங்கள், சிரமங்கள் இருந்தாலும், சுமார் 10 ஆயிரம் மக்களுடைய வாழ்வு வளம்பெற அந்த மீன்பிடித் துறைமுகத்தை நீங்கள் அமைத்துத் தா வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, எஸ்.பி. மாங்குடி என்ற பகுதி என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதி. அங்கே ஒரு பாலம் அமைக்கப்பட வேலை ஆரம்பிக்சப்பட்டு 7 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் இந்த 7 ஆண்டுகளிலே இதுவரைக்கும், அந்தப் பணியைச் செய்து முடிக்காமல் சுமார் 100 அடி தூரம் கடப்பதற்கு 15 கிலோமீட்டர் சுற்றி வருகிற ஒரு கொடுமை நிலவுகிறது. நான் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. பன்னீர்செல்வம் அவர்களிடம் சொல்கிறபோது, விரைவிலே அதை நிறைவேற்றித் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணி கொஞ்சம் தொய்வு அடைந்திருக்கிறது. அதை வேகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு இரப்பர் தொழிற்சாலை வேண்டுமென்ற கோரிக்கை வெகு நாட்களாக இருக்கிறது. நான் கடந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரிலே கேட்கிறபோது, கலைஞர் என்னிடத்திலே என்ன சொல்வார் என்றால், ரப்பர் அல்லவா, குமாரதாஸ் கொஞ்சம் இழுத்துக்கொண்டுதான் இருக்கும். இப்படியே சொல்லிச் சொல்லி அதனுடைய ஆயுள் நீடித்துக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை வராத ஒரு சூழ்நிலை



2003 ஜனவரி 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

ஏற்பட்டிருக்கிறது. எனவே இதை நீங்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குளச்சல் பகுதியிலே ஒரு துறைமுகம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வெகுநாட்களாக இருந்துவருகிறது. அம்மா அவர்கள் அதைக் கனிவுடன் பரிசீலித்து, எங்களுடைய மாவட்டத்திற்கு அந்த குளச்சல் துறைமுகத்தை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அதேபோல 1970 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட காவலர்கள் எங்களுடைய மாவட்டத்திலே மாத்திரம் 46 ஏட்டு; அவர்கள் இன்னும் S.I. ஆகவில்லை. அந்த மாவட்டத்திலே மாத்திரம் அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அம்மா அவர்களிடம் நியாயமாக முறையிடுகிறபோது—அது உங்களுடைய கவனத்திற்கு வராமல் இருந்திருக்கலாம். — அதைப் பரிசீலித்து உரிய பதவி உயர்வினை, வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், S.I.-யிலிருந்து இன்ஸ்பெக்டர் ஆக வேண்டுமென்று சொன்னால், written test அல்லது வேறு எந்தவிதமான பரீட்சையும் கிடையாது. அவர்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் promotion கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் போலீஸிலிருந்து ஏட்டு ஆகி, ஏட்டிலிருந்து S.I. ஆக வேண்டுமென்று சொன்னால் பல்வேறு பரீட்சைகள் இருக்கின்றன. அதனால் எங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே அம்மா அவர்கள் அதை தயவுசெய்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது ஒட்டுமொத்தமாக இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அம்மா அவர்கள் இப்போது புதிய விளையாட்டு ஆணையத்தை அமைத்து, இளைஞர்களை உற்சாகப்படுத்துகின்ற விதத்திலே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். எனவே இந்திய அளவிலே, உலக அளவிலே அல்லது மாநில அளவிலே விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துகின்றமுகத்தான் வேலைவாய்ப்பிலும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கொடுப்பீர்கள் என்று சொன்னால், இளைஞர்கள் வேகமாக, விவேகமாக விளையாட்டுக்களிலும் தங்களது ஆர்வத்தைக் காட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [2003 ஜனவரி 30

அதேபோல, தமிழர்களுக்கே உரிய சிலம்பாட்டம் என்கிற ஒரு பயிற்சியை — அந்தக் கலை இன்றைக்கு அழிந்து வருகிறது, மறைந்து வருகிறது. — அம்மா அவர்கள் விளையாட்டுத் துறையிலே அந்த சிலம்பாட்டத்தையும் இணைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, P.G. படித்து முடித்தவர்களுக்கு வயது வரம்பு இல்லை; அதைத் தளர்த்தியிருக்கிறீர்கள். வேலைவாய்ப்பு என்று வருகிறபோது அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறீர்கள் அதற்காக முதுகலைப் பட்டதாரிகள் எல்லாம் உங்களை வணங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல T.T.C. முடித்தவர்களுக்கும் வயது வரம்பைத் தளர்த்தி, அவர்களுக்கு வேலைவாய்ப்பு என்று வருகிறபோது, நீங்கள் கொடுக்கலாம். அதுவரைக்கும் இந்தக் குறிப்பிட்ட காலத்திலே இந்த வயது இருக்க வேண்டும் என்று வயது வரம்பைத் தளர்த்தித் தர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்றை இறுதியாகச் சொல்லி, என்னுடைய உரையினை நிறைவு செய்ய விரும்புகின்றேன். பேச்சிப்பாறை, சிற்றாறு, பெருஞ்சாணி என்கின்ற இந்த 3 அணைகளும் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ளன. இந்த மூன்று அணைகளிலும் தூர் வாரி ஆண்டுகள் பல கடந்துவிட்டன. தண்ணீரின் கொள்ளளவு மிகக் குறைவாக இருந்துவருகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த மிகப் பெரிய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, பாசனத்திற்கும், விவசாயத்திற்கும் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு என்கிற இந்த ஒன்றிரண்டு அணைகள்தான் பயன்பட்டு வருகின்றன. அந்த அணைகளைத் தூர் வாரி, கால்வாய்களை பராமரித்துத் தர வேண்டுமென்று நான் உங்களிடம் மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழக போராட்ட தியாகிகளுக்கு பென்ஷன் வழங்கி வருகிறீர்கள். அது பாராட்டுக்குரியது. ஆனால் இன்னும் சில ஏழைத் தியாகிகள் பென்ஷன் கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்களையும் நீங்கள் கருத்திலேகொண்டு, முடிந்த அளவிற்கு அவர்களுக்கும் நீங்கள் பென்ஷன் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே எனக்கு உரையாற்ற வாய்ப்பினைத் தந்ததற்காகவும், —அதே நேரத்திலே நான் யாரையும் புண்படுத்த வேண்டும் அல்லது



2003 ஜனவரி 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

யாரையும் தரக்குறைவாகப் பேச வேண்டும் என்கிற உணர்வோடு சொல்லவில்லை. ஒருவேளை, நான் நான்காவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். எனக்கு இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கிறபோது, சில அரசியல் விவாதங்களையும் நான் சொல்லியாக வேண்டும். எல்லோரும் வாக்குகள் என்று வருகிறபோது, தேர்தல் என்று வருகிறபோது — பைபிளிலே ஒரு கதை சொல்வார்கள். ஒரு கெட்ட குமாரன் கதை. அந்தக் கதையை மாத்திரம் சொல்லி, என்னுடைய உரையை இன்னும் 2 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். ஒரு முதலாளி/ஒரு பணக்காரன். அவனுக்கு 2 பிள்ளைகள்; ஒரு மூத்தவன், ஒரு இளையவன். அந்த இரண்டு பேரிலே மூத்தவன் ஊதாரித்தனமாகச் செலவுகளைச் செய்து, பணத்தை அழித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தந்தையிடம் போய், 'எனக்கு என்னுடைய சமபங்கு உரிமையைக் கொடு; அதை நான் பெற்றுக்கொண்டு வெளியேறுகிறேன்' என்று சொல்கிறான். சரி என்று சொல்லி, தகப்பனும் அந்தச் சொத்துக்களை பங்கு வைத்து, மூத்தவனுக்கும், இளையவனுக்கும் கொடுக்கிறான். பங்கினைப் பெற்றுக்கொண்ட மூத்தவன் என்ன செய்கிறான் என்று சொன்னால், அந்தப் பணத்தை/ பொருளை ஆறு மாத காலத்திற்குள், ஓர் ஆண்டு காலத்திற்குள் அத்தனையும் அழித்துவிடுகிறான். அவன் பஞ்சம், பசி, வறுமை, கொடுமைகளில் தாண்டவம் ஆடுகிறான். என்ன செய்வது என்று அங்கலாய்க்கிறான். வேறு வழியின்றி தகப்பனாரிடம் மீண்டும் செல்கிறான். "ஐயா, நான் நீங்கள் கொடுத்த அனைத்தையும் இழந்துவிட்டேன்; எனக்கு நீங்கள் மறுவாழ்வு தர வேண்டும்" என்று கேட்கிறான். அந்தத் தகப்பன், அந்த மகனை ஆரத்தழுவி, அரவணைத்து, 'நீ என்னுடைய மகன்தானடா; நல்லபடியாக இரு' என்று அவனை உபசரித்து, கிடாக்களை வெட்டி, ஆடுகளை வெட்டி பெரிய விருந்து பரிமாறினான். அவன் உண்டு மகிழ்ந்து அங்கேயே இருக்கிறான்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், இந்த கெட்ட குமாரர்கள் மீண்டும் 'அம்மா, எங்களைக் காப்பாற்றுங்கள்' என்று உங்கள் பாதங்களிலே வந்து பணிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நேரத்திலே நீங்கள் அவர்களை அரவணைத்துக்கொள்வீர்கள். இதுவரைக்கும் நீங்கள் அரவணைத்து இருக்கிறீர்கள்; இன்னும் அரவணைப்பீர்கள் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்தி, இந்த நல்ல சந்தர்ப்பத்திலே எனக்கு உரையாற்றுவதற்கான வாய்ப்பினைத் தந்தமைக்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

[2003 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

*பிற்பகல் 12-35*

**திரு. கே.என். இலட்சுமணன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேசுவதற்கு பாரதிய ஜனதா கட்சிக்கு வாய்ப்பினை அளித்தமைக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டினையும் பாதுகாக்க மத்திய அரசு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழக அரசு தன்னுடைய முழு ஆதரவைத் தொடர்ந்து அளிக்கும் என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டதை பாரதிய ஜனதா கட்சி வரவேற்கிறது. அதேபோல 'POTA' சட்டத்தை வலிமையாக இந்தத் தமிழகத்திலே அமல்படுத்துவதற்கு அரசு முன்வந்திருப்பதையும் வரவேற்கின்றோம். மேலும், தமிழகத்திலே குறிப்பாக ஏழையெளியவர்கள் மத்தியிலே கந்துவட்டிக்காரர்கள் கொடுமையான வட்டிக்குப் பணத்தைக் கொடுத்து வசூலிக்கின்றார்கள். 35 சதவிகிதம் முதல் 200 சதவிகிதம் வரை அந்தக் கந்து வட்டியை வசூலித்து, ஏழையெளியவர்கள் கொடுமையான வாழ்விற்குத் தள்ளப்படுகிறார்கள். அந்தக் கொடுமையை உணர்ந்து தமிழக அரசு அதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட ஒரு சட்டத்தினை வரவேற்கிறோம். அதைத் தவிர, 100 கண்காணிப்பாளர்கள் கண்காணிக்க அமைக்கப்பட்டிருப்பதால், மாவட்டந்தோறும் இதற்கென ஒரு Task force செயல்முறையிலே இருக்கக்கூடிய ஓர் அமைப்பை தமிழக அரசு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். மேலும், கட்டப் பஞ்சாயத்தின் மூலம் பல கொடுமைகள் இந்தத் தமிழகத்திலே நடக்காத வண்ணம் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு மத்திய அரசு முழு ஆதரவு கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றது என்பதைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழக அரசு விரைவில் அந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். காவிரிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவதாகச் சொல்லப்படுகின்ற அந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மத்திய அரசு தமிழக அரசுக்கு உறுதுணையாக எப்போதுமே இருந்துக் கொண்டு வருகிறது. காவிரிப் பிரச்சினைக்கு, நிரந்தரமாகத் தீர்வு காண வேண்டுமென்றால்—மத்திய அரசு, வாஜ்பாய் அரசு ஒரு இலட்சம் கோடி ரூபாயிலே, பிரம்மபுத்திராவிலேயிருந்து கங்கை,



2003 ஜனவரி 30] [திரு. கே.என். இலட்சுமணன்]

கங்கையிலேயிருந்து மகாநதி, நர்மதா, கோதாவரி, கிருஷ்ணா, பாலாறு, காவிரி ஆகியவற்றை இணைப்பதற்கான ஒரு திட்டத்தை மத்திய அரசு தீட்டியிருக்கின்றது. ஆகவே சென்ற ஆளுநர் உரையிலே தென்னக நதிநீர் வாரியத்திற்கு ஆதரவு கொடுத்ததுபோல, தமிழக அரசு இதைப் பயன்படுத்திக்கொண்டு, நிரந்தரமாக நீர்ப்பாசன வசதிக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பவானி ஆறு அருகே கேரளா அரசு அணை கட்டிவிட்டால், அந்த ஆறும் வற்றிப்போய்விடும். அதற்கு மத்திய அரசு, வாஜ்பாய் அரசு உடனடியாகத் தடை விதித்திருக்கின்றது. தமிழக மக்களுடைய நீர்ப் பிரச்சினைக்கு உதவிட என்றென்றுமே மத்திய அரசு காத்துக்கொண்டிருக்கிறது.

தவிர, பவானி ஆற்றின் குறுக்கே அணை கட்டினால், கேரளாவிலே இருக்கின்ற மிக அருமையான காடு, Silent Valley என்று சொல்லப்படுகின்ற அந்தச் சூழ்நிலையும் கெட்டுவிடும். அதையும் மனதில் கொண்டுதான் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கண்டிப்பாக அங்கே அணை கட்டக்கூடாது என்று மீண்டும், மீண்டும் நம்முடைய முதலமைச்சர் கேரள முதலமைச்சரைச் சந்தித்து, அதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதுவரை மத்திய அரசு, வறட்சி நிவாரணமாக தமிழகத்திற்கு 109 கோடி ரூபாய் நிதியுதவியை அளித்திருக்கின்றது. 3,000 கோடி ரூபாய், தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்கள், பிரதம மந்திரி வாஜ்பாய் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கண்டிப்பாக அத்தகைய சூழ்நிலை உருவாகி, தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று நாங்களும் விரும்புகின்றோம். இங்கே இருக்கின்ற பற்றாக்குறை, நிதி நெருக்கடியைப்போல, மத்திய அரசுக்கும் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே காங்கிரஸ்காரர்கள் விட்டுச்சென்றபோது, 11,25,000 கோடி ரூபாயை கடனாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆண்டு ஒன்றிற்கு 1¼ இலட்சம் கோடி வட்டியாக மட்டும் கட்ட வேண்டியிருக்கின்றது. அந்தச் சூழ்நிலைகளையெல்லாம் சரிக்கட்டிவிட்டு, கண்டிப்பாக தமிழகத்திற்கு மத்திய அரசு முதன்மை ஸ்தானம் கொடுத்து உதவி செய்யும் என்கின்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. சென்ற மாதம் திருச்சிக்கு அகில இந்திய தலைவர் வெங்கய்யா நாயுடு வந்திருக்கும்போது நாங்கள் நேரடியாகச் சொன்னோம். பாரதப் பிரதமரை நேரடியாகச் சந்தித்துப் பேசி இதைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும் நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம். ஆகையினாலே நமக்கு நல்ல உதவி கிடைக்கும் என்று கண்டிப்பாக நாங்கள்

[திரு. கே.என். இலட்சுமணன்] [2003 ஜனவரி 30

நம்புகின்றோம். தேசிய நதிகளை இணைக்க மத்திய அரசு முனைப்போடு செயல்படத் தொடங்கி இருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். நம்முடைய தமிழக அரசு வருகிற பட்ஜெட்டிலே என்ன செய்ய வேண்டுமோ அதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

*பிற்பகல் 12-40*

புதிய வீராணம் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று தமிழக அரசு முடிவு எடுத்திருக்கின்றது. அந்த வீராணம் ஏரிக்கு நீர்வரத்து காவிரியிலிருந்துதான் வருகிறது. காவிரியே வற்றியிருக்கின்ற நேரத்திலே அந்தப் புதிய வீராணம் திட்டம் எந்த அளவிற்கு தமிழக மக்களுக்குப் பயன்படும் என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பணிவன்போடு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். அப்படிச் செய்யப்பட்டபோதிலும் வீராணம் ஏரியில் 6 அடி அளவிற்கு சேறு அடைத்துக் கிடக்கின்றது. அதைத் தூர் வாருவதற்கும் ஏற்பாடு செய்துவிட்டு மறுபடியும் இதைப்பற்றி கவனிக்க வேண்டுமென்று நாங்கள் குறிப்பிட விரும்புகின்றோம்.

விவசாயிகளுக்கு மதிய உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. அதை நாங்கள் வரவேற்கிறபோதிலும், உலகத்திற்கே உணவு அளிக்கின்ற விவசாயிகள் தாங்கள் கையேந்தி உணவை ஏற்றுக்கொள்வதற்கு கூச்சப்படுகின்றார்கள். அதுதான் உண்மையான நிலையாக இருக்கிறது. அதற்குப் பதிலாக இந்த மாநில அரசு அவர்களிடம் நாள் ஒன்றிற்கு ஒரு கிலோ, இரண்டு கிலோ அரிசியை குடும்பத்தினுடைய அளவை அனுசரித்துக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

சென்ற கூட்டத் தொடரிலே நான் சொன்னதுபோல தமிழக அரசிற்கு ஏகப்பட்ட நிதி நெருக்கடி இருக்கின்றது. அந்த நிதி நெருக்கடியைப் போக்க வேண்டுமென்றால், ஏற்கெனவே ஒரு குழு அது குறித்து பரிந்துரை செய்திருக்கின்றது. 75 ஆயிரம் அதிகாரிகள்—பணியாளர்கள் தமிழக அரசிலே வீணாக இருக்கிறார்கள், மிக அதிகமாக இருக்கிறார்கள், தேவைக்கு அதிகமாக இருக்கின்றார்கள், என்று குறைபட்டு இருக்கிறது. ஆகவே ஆய்வு செய்து இலாகாக்களிலே எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு அதிகாரிகளை நியமித்துக்கொண்டால் ஏராளமான செலவினம் குறையும். அது தவிர , விற்பனை வரி வசூல் எவ்வளவு ஆக வேண்டுமோ அந்த அளவிற்கு இல்லாமல் 20% கூட வசூல் ஆகவில்லையென்கிற



2003 ஜனவரி 30] [திரு. கே.என். இலட்சுமணன்]

நிலைமை இருக்கின்றது. முழுமையாக விற்பனை வரியை வசூலிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தால், கண்டிப்பாக நமக்கு பணப் பற்றாக்குறையே இருக்காது. தமிழக அரசும் சீராக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

மெரீனா கடற்கரையை அழுகுபடுத்தும் திட்டத்தின் ஒரு அங்கமாக—அங்கே குப்பங்கள் இருக்கின்றன. மீனவர்கள் வசிக்கின்ற குப்பங்கள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் சுமார் 500 ஆண்டு காலமாக, 600 ஆண்டு காலமாக அவர்கள் இருக்கின்றார்கள். சென்னை மாநகரம் தோன்றுவதற்கு முன்னாலேயே அதுதான் சென்னை பகுதியாக இருந்தது. அந்தக் காலத்திலிருந்த மன்னர்களுக்கெல்லாம் அந்த மீனவர்கள் உறுதுணையாக இருந்திருக்கின்றார்கள். வாழையடி வாழையாக அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே அவர்கள் வாழ்வதற்குக் காரணம் அவர்களுடைய தொழில். கடலுக்குச் செல்ல வேண்டும். இரவு ஒரு மணிக்கு, இரண்டு மணிக்குச் சென்று 7, 8 மணிக்கு அவர்கள் திரும்ப வேண்டும். கடற்கரையில் இருந்தால்தான் அவர்களுடைய தொழில், அவர்களுடைய ஜீவனமே அதிலேதான் அடங்கியிருக்கிறது. ஆகவே அந்தக் குப்பங்களை அகற்றிவிட்டு 5 நட்சத்திர ஹோட்டல்களைக் கட்டுகின்றோம், அழகுபடுத்துகின்றோம் என்று சொல்வதைக் காட்டிலும் அங்கேயே அவர்கள் வாழ்வதற்கு தமிழக அரசு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அப்படி . ஓர் ஐந்து நட்சத்திர ஓட்டல் கட்ட வேண்டுமென்றால் சேரனி அரங்கத்திற்கு வடக்குப் பக்கத்திலே, University Centenary building எதிரிலே மிக அருமையான இடம் இருக்கிறது. அங்கே அழகாகக் கட்டிக்கொள்ளலாம் என்று நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பிற்பகல் 12-45*

திருவண்ணாமலை கிரிவலம் வருகின்ற பாதையைச் சுற்றிலுமே நிறைய ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. மத்திய அரசினர் அதை தொல்பொருள் துறைக்கு எடுத்துக்கொள்வதாக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் சட்டமாக வரவில்லை. மக்களுடைய கருத்தை அறிவதற்காக இப்படிச் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே அந்த கிரிவலம் வருவதற்கு அங்கே இடர்பாடுகள், ஆக்கிரமிப்புகள் நிறைய இருக்கின்றன. அதனை அகற்ற வேண்டும். அதற்காகக் கொண்டுவருகிறோம் என்று சொல்கின்றார்கள்.

[திரு. கே.என். இலட்சுமணன்] [2003 ஜனவரி 30

அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்களே சொல்லியிருக்கின்றோம். தொல்பொருள் ஆய்வு ஆணையம் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது. நம்முடைய தமிழ்நாடு அறநிலையத் துறையிலேயே அது இருக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றோம். ஆகவே தமிழக அரசு. அவர்கள் எந்தக் குறையைக் காரணம் காட்டி இதை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்கிறார்களோ அந்தக் குறைகளை, அதாவது கிரிவலப் பாதையைச் சுற்றிலும் இருக்கிற ஆக்கிரமிப்புகளையெல்லாம் தமிழக அரசு உடனடியாக நீக்குவதற்கு, ஆவன செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதுதவிர நம்முடைய ஆளுநர் உரையிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருப்பது நெசவாளர்களுடைய பிரச்சினை. மலிவு விலை சேலை வேட்டிகளையெல்லாம் விற்பனை செய்து, கல்லூரிகளிலே இருக்கின்ற மாணவிகளெல்லாம் அதை மிக வேகமாக வாங்கி அந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய நலிவை ஓரளவிற்குப் போக்கியிருக்கின்றார்கள். அதற்கு ஏற்பாடு செய்த தமிழக அரசை நாங்கள் பாராட்டுகின்றோம். இன்னும் அதிகமாக கைத்தறி ஆடைகளை விற்பதற்கு இந்தமாதிரி பல்வேறு ஊக்கத் திட்டங்களையெல்லாம் செய்தால் பல லட்சக்கணக்கான ஏழை நெசவாளர் குடும்பங்கள் என்றென்றும் தமிழக அரசை வாழ்த்தும். அவர்கள் வாழ்வில் வளம் பெறுவதற்கு நில வள வங்கி இருப்பதுபோல், கைத்தறி வள வங்கி ஒன்றை ஏற்படுத்தி நவீன முறையிலே நவீன ஆடைகளை உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்கெல்லாம் வழிவகுத்துக் கொடுத்து ஆதரவு கொடுக்க வேண்டும். விசைத்தறி போட்டி இருக்கிறது. கைத்தறித் தொழிலாளர்கள் வேண்டுமென்று அந்தத் தொழிலில் ஈடுபடவில்லை. மாற்றிக்கொள்வதற்கும் வசதி இல்லை. ஆகையினாலே தட்டுத் தடுமாறிக்கொண்டு அந்தத் தொழிலிலே இருக்கிறார்கள். இருந்தபோதிலும் கைத்தறியிலே இருக்கின்ற நுண்மை, அந்தத் திறமை வேறு எதிலும் வர முடியாது. நம்முடைய கலாச்சாரத்திலே ஊறியது கைத்தறி. ஆகையினாலே அதைக் காப்பாற்ற இந்த அரசு கண்டிப்பாக முயன்று செயல்பட வேண்டும். வருகின்ற பட்ஜெட்டிலே அதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.



2003 ஜனவரி 30] [திரு. கே.என். இலட்சுமணன்]

நம்முடைய நாட்டிலுள்ள குளங்கள், ஏரிகளெல்லாம் நன்றாகப் பராமரிக்கப்பட்டால் நீர்வளம் நன்றாக இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். அதுபோல, தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை குளங்களிலும் நீர் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். குறிப்பாக என்னுடைய மைலாப்பூர் தொகுதியிலுள்ள சித்திரக்குளம் அண்மையிலே மழை வந்தபோது நிரம்பியது. அந்தக் குளத்திற்கு நீர் வரக்கூடிய வாய்க்கால்களிலெல்லாம் மண் மண்டிக் கிடந்தது; மண் மூடப்பட்டு இருந்தது—நாங்கள் என்ஜினியர்களையெல்லாம் வைத்து அதையெல்லாம் சரி செய்த காரணத்தினாலே சித்திரக்குளமே நிரம்பியது. எல்லோரும் பாராட்டினார்கள். அதுபோல மைலாப்பூர் கோயிலுக்கு முன்னாலே இருக்கின்ற அந்தக் குளத்தையும் தூர் வாரி எடுத்து அதிலே தண்ணீரை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தால், அந்தப் பகுதியிலே நிலத்தடி நீர் தானாகவே உயரும். அதையும் தூர்வாருகின்ற திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றையதினம் சென்னை நகரிலே சேரிகளிலே உள்ள குடிசைப் பகுதிகளிலே கொசுத் தொல்லை மிக ஏராளமாக இருக்கிறது. பக்கிங்காம் கால்வாய் பகுதியிலே உள்ள குடிசைகளிலே இருக்கின்றவர்களுக்கு, அண்மையிலே *10, 15* நாட்களுக்கு முன்னாலே யானைக்கால் வியாதி பரவியிருக்கிறது. ஆகையினால் யானைக்கால் வியாதி தடுப்பூசி அங்கே போடப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். பல நல்ல திட்டங்களை, இந்த ஆளுநர் உரையிலே சேர்க்க வேண்டுமென்று பாரதிய ஜனதா கட்சியின் சார்பிலே கேட்டுக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை வருக, வருக என்று வரவேற்று, திரு. கருணாகரன் அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், என்ன?

[2003 ஜனவரி 30

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** இடையிலே ஒரு நிமிடம் என்னைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு ஒரு புகார் மனுவைத் தங்களுடைய பார்வைக்குத் தர வேண்டியிருக்கிறது. இதுகுறித்து, இந்தச் சபையில் நான் தெரிவித்துவிட்டு, தங்களிடம் அதை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, இன்று காலை 11-45 மணிக்கு, தங்கள் அனுமதியுடன் எங்கள் தமிழ் மாநில காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. குமாரதாஸ் அவர்கள் பேசினார். அவரது பேச்சைப் பொறுத்துக்கொள்ள இயலாமல், திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினர்கள், தேவையில்லாமல் சச்சரவை உருவாக்கி, கலவரம் பண்ணி, சபை நடவடிக்கைகளைத் தடுத்து, சத்தம்போட்டு நிறுத்தினார்கள். அந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், தனது இடத்தைவிட்டு தாண்டிவந்து இழிவான வார்த்தைகளைப் பேசிக்கொண்டே, திரு. குமாரதாஸ் அவர்களை நோக்கி முன்வந்து, 'டேய், உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்டா' என்றும், 'சபையை விட்டு வெளியே வா; உன்னை, சென்னை வீதிகளிலே விட்டு, கொலை செய்யவில்லை என்று சொன்னால், நான் திமுக-காரன் இல்லைடா' என்றும் சொல்லி, மிரட்டி, தாக்க வந்ததை இந்தச் சபையும் பார்த்தது. எங்கள் பகுதியிலிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினர், அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். சபையில் அனைவரும், இந்தக் காட்சியைப் பார்க்கத்தான் செய்தார்கள். ஏற்கெனவே திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், கலவரக்காரர், பல கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்; சென்னையில் பல கிரிமினல் சம்பவங்களில் அவர் ஈடுபட்டவர் என்று சம்பந்தப்பட்ட செய்திகள் நிறைய உண்டு. எனவே அவரால் எந்தவித அசம்பாவித சம்பவமும் ஏற்படலாம் என்று நாங்கள் கருதுகிற காரணத்தினால், அவர் கொலை முயற்சியில் ஈடுபட்டதை இந்த மன்றமே பார்த்திருக்கிற சூழ்நிலையில், அவர்மீது கொலை முயற்சி வழக்கை, கிரிமினல் ரீதியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மேற்கொண்டு, நடவடிக்கை எடுத்து, எங்களுக்கு நல்ல நீதியையும் நியாயத்தையும் தர வேண்டுமென்று இந்த அவையில் பணிவோடு கேட்டு, இதுகுறித்த புகார் மனுவை நான் தங்களுக்கு நேரில் வந்து சமர்ப்பிக்கிறேன்.

(திரு. எம்.ஏ. ஹக்கீம் இதுகுறித்த புகார் மனுவை, மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்தார்.)



2003 ஜனவரி 30]

## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) திரு. பரிதி இளம்வழுதி மீது கிரிமினல் நடவடிக்கை எடுப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அலுவல்களை நடைபெறாது இடைமறித்தும், பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்று பின்பற்றியதாலும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களைத் தாக்கும் எண்ணத்தோடு தனது இருக்கையை விட்டுச் சென்று அச்சுறுத்தும் வகையில் பேசியுள்ளதாலும், திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கலாம் என்கிற தீர்மானத்தை பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'இன்று, 30-1-2003 அன்று, அவை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி, தனது இருக்கையை விட்டு ஆவேசமாக, திரு. ஹக்கீம் மற்றும் திரு குமாரதாஸ் ஆகியோர் இருக்கும் பகுதிக்குச் சென்று, திரு. குமாரதாஸ் அவர்களை நோக்கி கொலை வெறியுடன், திரு. குமாரதாஸ் அவர்களின் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவதாக கூறிக்கொண்டு ஓடிவரும்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரால் தடுக்கப்பட்டபோது, திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், திரு. குமாரதாஸ் அவர்களை நோக்கி, திரு. குமாரதாஸ் அவர்கள் அவையை விட்டு வெளியே வரும்போது, மெட்ராஸ் வீதிகளில் வைத்து, திரு. குமாரதாஸ் அவர்களைக் கொன்று விடுவதாக மிரட்டியதாலும், இதுகுறித்து கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு. ஹக்கீம் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் சட்டப்படி கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும்'
என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் ஏற்கப்படுகிறது.

அடுத்து, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே–

[2003 ஜனவரி 30

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. சுந்தரம். திரு. கே.சி. கருணாகரன், கொஞ்சம் இருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களாக நாங்கள் இருந்த காரணத்தினால், ஒரு கருத்தைத் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன். அன்றைக்கு நாங்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்பற்றி, ஆளுங்கட்சிக்காரர்கள் மிகத் தரக் குறைவாகப் பேசும்போது, நாங்கள் பேச எழுந்தபோதெல்லாம் எங்களையெல்லாம் தூக்கி வெளியிலே எறிந்துவிட்டார்கள். இப்போது ஓர் அமைச்சர் அவர்கள் பதிலுக்குப் பதில் சொல்வதற்குக்கூட அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சட்டமன்றத்திலேயே சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களையெல்லாம் ஓர் அமைச்சர் தாக்கிய நிகழ்ச்சிகள் எல்லாம் உண்டு. தற்போது நான் நேரடியாகப் பார்க்கிறேன். உங்களை நேரடியாக வந்து * எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருமையிலே கையைநீட்டிப் பேசுவதும், அதேபோல மாண்புமிகு அம்மா அவர்களைப் பார்த்து...(குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்களை நோக்கி நேரடியாக இங்கே வந்து கையை நீட்டிப் பேசுவதும் போன்ற தகாத செயல்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே உங்களை 'கேரோ' செய்வது போலவும், மாண்புமிகு அம்மா அவர்களை நேருக்கு நேர் கையை நீட்டிக்கொண்டு, அம்மா அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் உட்காராமல் பேசிக்கொண்டிருக்கும் செயல்களுக்குக்கெல்லாம் நீங்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைப்பற்றி தவறாகப் பேசுவது; மாண்புமிகு முதல்வர் அவர்களைப்பற்றிப் பேசுவது; இதை முதலமைச்சர் அவர்களும் தாங்கிக்கொள்கிறார்கள்; நானும் தாங்கிக்கொள்கிறேன். மற்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்த ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. திரு. சுந்தரம் அவர்கள் சொன்னதைப்போல, அந்த அரசினுடைய போக்கு அப்படி; இந்த அரசு, கண்ணியமான அரசு; இந்த அரசு நிச்சயமாக உரிய வகையிலே நியாயபூர்வமாக செயல்படக்கூடிய அரசு என்பதை நாம் நிலைநாட்டுவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



2003 ஜனவரி 30] [பேரவைத் தலைவர்]

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும்போது, எதிர்க்கட்சி என்று குறிப்பிட்டுச் சொல்வதற்குப் பதிலாக ஆளும் கட்சி என்று சொல்லிவிட்டார். அதைத் திருத்திப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிவு செய்யும்போது, 'ஆளும் கட்சி' என்று சொன்னதை மாற்றி, 'எதிர்க்கட்சி' என்று திருத்திக்கொள்ள வேண்டும்.

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்–தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். திரு. கே.சி. கருணாகரன் பேசலாம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே நடந்திருக்கக்கூடிய இந்தச் சம்பவங்களுக்காக மீண்டும் என்னுடைய வருத்தத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். சபையினுடைய பெருவாரியான, இன்னும் சொல்லப்போனால் ஒட்டுமொத்த உறுப்பினர்களின் ஆதரவோடு அது நிறைவேறி இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட சம்பவத்திற்கு டாக்டர் குமாரதாஸ் அவர்களே துவக்கி வைத்து, காரணமாக இருந்து இருக்கிறார் என்பதை மீண்டும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடு) அவர்மீது எடுத்த நடவடிக்கையில் நான் குறுக்கீடு செய்ய விரும்பவில்லை. (குறுக்கீடு) நான் விஷயத்திற்கு வருகிறேன்.

சென்ற ஆண்டினுடைய, மார்ச் மாதம் நடைபெற்ற பட்ஜெட், சென்ற அக்டோபர் மாதம் நடந்திருக்கக்கூடிய துணை நிதிநிலை அறிக்கை, அதையொட்டிய விவாதம், தற்போதைய கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை, அதில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள்—இவை மூன்றையும் அரசியல் வித்தியாசம் இல்லாமல் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி அல்லது ஒட்டுமொத்த கட்சிகள் என்ற நிலையிலே உள்நோக்கம் கற்பிக்காமல் யதார்த்த நிலையில் இதைப் பார்க்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றுகூட அனைத்துக் கட்சிகளும் வெளிநடப்புச் செய்து இருக்கும்போது, இன்னும் சொல்லப் போனால் ஒரு பகிஷ்காரம் செய்திருக்கக்கூடிய சூழ்நிலையிலே இருக்கிறபோது,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதில் நாங்கள் கலந்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால், ஒட்டுமொத்த நிலைகளை இந்த அவைக்கும் ஆளும் கட்சிக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் தெரிவிக்கவேண்டும் என்பதற்காகத்தான். எல்லாக் கட்சிகளும் ஒரே கோணத்தில் ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சிகள் எல்லாம் ஓர் அணியாக ஆகிவிட்டன என்ற கருத்து இங்கே பரவலாக இருக்கிறது; அது சரியல்ல என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கட்சிகளோடு ஓர் அரசியல் அணியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கிக் கொள்ளவில்லை. ஆகவே சொல்லப்படுகிற இந்த விஷயங்களில் யதார்த்தங்களைப் புரிந்துகொள்வது அவசியம் என்று நான் கருதுகிறேன். ஆகவே 3 அறிக்கைகளில்-சென்ற ஆண்டு பட்ஜெட், துணை நிதிநிலை அறிக்கை, இப்போதைய அறிக்கை-சுமார் 1½ ஆண்டுகளில் இதையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கூட்டிக் கழித்து அல்லது ஒப்பிட்டுப் பார்க்கும்போது, விடை திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கிறதா; விரக்தி அளிக்கக்கூடியதாக இருக்கிறதா என்பதை தயவுசெய்து நாம் உணர வேண்டும். எங்களைப் பொறுத்தவரை, விரக்தி அளிக்கக்கூடியதாக இருக்கிறது; வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது; தமிழகம் ஒட்டுமொத்த நெருக்கடியிலே சிக்கித் தத்தளிக்கிறது என்பதுதான் உண்மையான நிலை.

அது கவர்னர் அவர்களுடைய உரையில் கடைசியாக தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. 45-வது பாராவிலே அதிலே, 'இந்த அரசு 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, பல்வேறு பிரம்மாண்டமான பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வந்துள்ளது. நிதிப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள கடும் இடர்ப்பாடு, தொடர்ந்து இரு பருவமழை பெய்ததாலும், கர்நாடக மாநிலம் காவிரி நீரில் நமக்கு உரிமை உள்ள பங்கைத் தர மறுத்ததாலும்...,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பருவமழை பொய்த்ததாலும் என்று திருத்திக்கொள்ளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** பருவமழை பொய்த்ததாலும், கர்நாடக மாநிலம், காவிரி நீரில் நமக்கு உரிமை உள்ள பங்கைத் தர மறுத்ததாலும் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்பு ஆகியவை, எந்த அரசின் உறுதிப்பாட்டையும் குலைத்து, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் நிலைகுலையச் செய்திருக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது





நிலை குலைந்து இருக்கிறதா, இல்லையா என்பதுதான் எங்கள் கேள்வி; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்க விரும்புகிறது. முதல்வர் அவர்களுடைய தனித்த திறமையின்மீது எஃகு போன்ற மன உறுதிப்பாட்டின்மீது எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அவர்களுடைய நிர்வாகத் திறமை மொத்தமும் இன்று தமிழ்நாட்டினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நம்முடைய ஒட்டுமொத்த அமைச்சரவையின் அதிகார அமைப்பும் ஒத்துழைத்து இருக்கிறதா, தீர்வு காணப்பட்டு இருக்கிறதா என்பதிலே எங்களுக்கு மிகப் பெரிய அதிருப்தி உள்ளது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-00*

அடுத்து சென்ற நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய விஷயங்களில் ஒன்றிரண்டை நினைவுபடுத்துவது அவசியம் என்று நினைக்கிறேன். குறிப்பாக மத்திய அரசு சம்பந்தமானது. மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிதிப் பங்கில், எவ்வாறு மத்திய அரசு துரோகம் செய்கிறது? 5 ஆண்டு காலத்திற்கு எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் நமக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது? கடைசியில் ரூ. 3 ஆயிரம் கோடியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டார்கள். அதையும்கூட கொடுப்பதற்கு மத்திய அரசு எவ்வாறு மறுத்து வருகிறது என்பதைப்பற்றி நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டது; வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டது; அக்டோபர் மாத துணை நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டது; இப்போதும் சொல்லப்படுகிறது. இதைச் சொல்கிறபோது, இங்கேதான் நாங்கள் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறோம்; தமிழ்நாட்டை ஒருமுகப்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளையும் இணைத்து, குறிப்பாக இன்றைக்கு நாம் சந்திக்கும் வறட்சி சம்பந்தமான பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இவர்களை எல்லாம் இணைத்துக்கொண்டு போக வேண்டும் என்பதில் எதிர்க் கட்சிகளைக் காட்டிலும் ஆளும் கட்சிக்கு முதன்மைப் பொறுப்பும், இன்னும் சொல்லப்போனால் நிதானத்துடன்கூடிய அணுகுமுறையும் தேவை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகமும் பாட்டாளி மக்கள் கட்சியும் மத்தியில், அதிகாரத்தில் கூட்டணியில், பங்காளிகளாக இருக்கும் கட்சிகள். அவை இதைப் பெறுவதிலே தயக்கம் காட்டுவதோ அல்லது கேட்காமல்

இருப்பதோ சரியல்ல. தமிழ்நாட்டில் இருக்கும் அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கு உண்டான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் சாகசம் செய்கிறார்கள். மத்தியிலும் இருக்கிறார்கள், இங்கே போராடவும் செய்கிறார்கள். ஆனால் நீங்கள் எங்களை எவ்வாறு பார்க்கிறீர்கள்? அவர்களோடு சேர்ந்து நீங்கள் போராடுங்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் உண்மையான நிலை என்ன? நாங்கள் நடத்தும்படியான எந்தக் கூட்டு இயக்கங்களிலும் — அண்மையில் நடைபெற்ற கூட்டு இயக்கங்களிலும்கூட, அவர்களை வைத்துக்கொண்டே கேட்கிறோம். அவர்கள் புரிந்துகொள்வதற்கு, நான் இந்த மேடையைப் பயன்படுத்திக்கொள்ள, இந்த அவையைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலைமைக்கு யார் காரணம்? இதை அவர்களுக்குப் புரிய வைத்து இருக்க வேண்டாமா? அவர்களையும் இதிலே இணைத்து இருக்க வேண்டாமா? 3 ஆயிரம் கோடி ரூபாய் நிதி வேண்டும். தமிழ்நாட்டில் வறட்சியை நாம் தனிப்பட்ட முறையில் எப்படிச் சந்திக்கப் போகிறோம்? மத்திய அரசிடமிருந்து பெற வேண்டியவற்றை அவர்களையும் இணைத்துக்கொள்ளாமல் எவ்வாறு பெறப் போகிறோம்? ஆனால் அவர்கள் ஏதோ ஒரு நோக்கத்தோடு இருக்கிறார்கள் என்பது உண்மை. எல்லா சந்தர்ப்பங்களிலும் அதைப் பயன்படுத்துகிறார்கள் என்பது உண்மை. 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்கிற நிலைப்பாட்டை அவர்கள் எடுக்கிறார்கள் என்பதை எங்களைப் போன்றவர்கள் உணராதவர்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி. ஆகவே எங்களையும், மற்றவர்களையும் ஒரேமாதிரியான சூழ்நிலையில் தயவு செய்து பார்க்க வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன்.

கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம்மீது எங்களுக்கு இப்போதும் எதிர்ப்பு இருக்கிறது. வேலைநிறுத்த தடைச் சட்டத்தின்மீது மாறுபட்ட கருத்து இருக்கிறது. பஸ் தனியார்மயம், நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அரிசி விலை உயர்வு போன்றவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே எங்களுடைய எதிர்ப்புகளைத் தெரிவிக்கிறோம். அதை அவர்களும் பயன்படுத்துகிறார்கள். நாங்கள் சொல்வதிலிருந்தும், தமிழ்நாட்டு மக்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளிலிருந்தும் நாம் ஒரு நியாயபூர்வமான முடிவுக்கு வரவேண்டும். அதைத்தான் அரசாங்கத்திடமிருந்தும், ஆளும் கட்சியிடமிருந்தும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதுமாதிரி, இப்போது சொல்லப்பட்டிருக்கிற அறிவிப்புகள், கொள்கைகள், திட்டங்கள் இவை எவ்வாறு அமலாகின்றன? அவற்றில் ஏற்பட்ட அனுபவம் என்ன?





படிப்பினை என்ன? இதில் முன்னேற்றம் அல்லது பின்னடைவு, இவற்றைப் பரிசீலனைக்கும், விவாதத்திற்கும் நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

தவறுகளை, குறைகளைச் சுட்டிக்காட்டுவது, கருத்து தெரிவிப்பது எதிர்க் கட்சிகளின் கடமை. சிலவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதும், கண்டனம் தெரிவிப்பதும்கூட எதிர்க்கட்சிகளின் ஜனநாயகபூர்வமான கடமை; அதைத்தான் நாங்கள் செய்து வருகிறோம்.

ஆளுநர் உரையின்போது ஏன் நாங்கள் வெளிநடப்புச் செய்தோம்? எல்லோரும் போனார்கள் என்றா நாங்களும் போனோம்? 10 விஷயங்களை முன்வைத்தோம். எங்களுடைய அறிக்கைகள் தனித்தனியாக கொடுக்கப்பட்டன. அரசு அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்; தனித்தனியாக கொடுக்கப்பட்டன. அதிலே மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிதி, அரிசி மற்றும் உணவு தானிய உதவி இவற்றைப் பெற வேண்டும் என்பது உள்பட. இரண்டு விஷயங்களை அரசு ஏற்றுக்கொண்டு சொல்லியிருக்கிறீர்கள் 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்திருக்கிறீர்கள். பயிர் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு 5000 ரூபாய் நிவாரணம், இரண்டும் சரி. பயிரே செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3000 ரூபாய் வேண்டுமென்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. மதிய உணவு திட்டத்திற்குப் பதிலாக இலவச அரிசியும், நாளொன்றுக்கு 25 ரூபாய் நிவாரணம் வேண்டுமென்ற முறையிலே சொல்லப்பட்டிருக்கிறது. வேலைக்கு உணவுத் திட்டம் அமல் நடத்தப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அது தொடர வேண்டும். அதுமாதிரி பயிர்க் கடன்களை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டது. சாவு; அது பட்டினியிலா, தற்கொலையிலா, வியாதியிலா? சாவு; அதைச் சொல்வதற்குக்கூட அரசியல் நோக்கம் என்ற முறையிலே எதிர்க்கட்சிகள்மீது குற்றம் சொன்னால்—எல்லாச் சாவுகளையுமா சொல்ல முடியும்? ஒரு நாளைக்கு ஆயிரம் பேர் சாகிறார்கள். இலட்சம் பேர் ஒரு மாதத்திற்கு சாகிறார்கள். எல்லாச் சாவுகளும் சட்டசபையில் இடம் பெறுவது இல்லை. எல்லாச் சாவுகளும் பத்திரிகையில் இடம் பெறுவது இல்லை. எல்லாச் சாவுகளும் ஆய்வுக்கு உள்ளாக்கப்பெறுவது இல்லை. இந்த 13 தான். 12, 1, ஆகவேதான் நீங்களே இங்கே பட்டியல் வாசிக்க வேண்டி வந்தது. பிரத்யேகமாக ஏற்பட்டிருக்கிற இந்தச் சூழல் எதனால் வந்தது? ஒரு நாளில் வந்ததா? 28 மாவட்டங்களை வறட்சி என்று அறிவிக்க வேண்டிய முன் அறிவிப்பு இந்த அரசுக்கு வந்து இருந்தது என்றால் ஒரு நாளில், இரண்டு நாளில் ஏற்பட்டதா? கடந்த

[திரு. கே.சி. கருணாகரன்] [2003 ஜனவரி 30

2 ஆண்டுகளில்—கவர்னர் அறிக்கையிலே உங்களுடைய அரசாங்கம் குறிப்பிலே சொல்லியிருப்பதுபோல இது 2 ஆண்டுகளில்—ஏற்பட்ட பாதிப்பு. காவிரி நீர் கிடைக்காதது. பருவ மழை பொய்த்தது. எல்லாவிதமான பாதிப்புகளையும் சேர்த்து 2 ஆண்டுகளில் படிப்படியாக ஏற்பட்ட வளர்ச்சி. மத்திய அரசு துரோகம் இழைத்தது. இவையெல்லாம் சேர்த்துதான் இந்த 2 ஆண்டுகால தொடர்ச்சிதான், இப்போது 28 மாவட்டங்களில் வறட்சி. ஆகவே இந்த வறட்சி வருகிறபோது மற்றவையும் அதனுடன் இணைந்துவிடும் அல்லவா? விவசாயம் பண்ண முடியாது. வேலைக்குப் போக முடியாது. சம்பளம் கிடைக்காது. கூலி கிடைக்காது. வேறு வாழ்க்கையே இல்லாத நிலையில் வறுமையில் இருக்கிறபோது அவர்கள் பட்டினியில் இருப்பார்கள் அல்லவா? வியாதி வரும் அல்லது சாவும் வரும். ஆகவே இவற்றின் தொடர்ச்சியாக இந்த விஷயங்களைப் பார்க்க வேண்டும் என்றுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்த விரும்புகிறது; எடுத்துச் சொல்ல விரும்புகிறது.

பிற்பகல் 1-05

அடுத்து 15 இலட்சம் ஏக்கர் சம்பா சாகுபடி நடந்து இருக்க வேண்டும். ஆனால் 7 இலட்சம் அளவுக்குத்தான் நடந்து இருக்கிறது. 2 ஆண்டுகள் விவசாயம் இல்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. அவையெல்லாம் சேர்த்துதான் இந்தப் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது.

அடுத்து, நேற்றையதினம் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. மகேந்திரன் பேசுகிறபோது முதல்வர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு குழு வந்து இருக்கிறது. அது ஆய்வு செய்கிறது. இங்கே நடத்துகிற விவாதம், நாம் உரிமையைப் பெறுவதற்கு இடையூறாக ஆகிவிடக்கூடாது என்று. நிச்சயமாக இல்லை. நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். இங்கே நடத்துகின்ற விவாதம் இந்தக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து நாம் இங்கே ஒருமுகமாக ஒரு தீர்மானம் கொண்டு வந்து இருப்போம் என்றால் தமிழ்நாட்டின் மொத்த நிலையை மத்தியக் குழுவிற்கு உணர்த்துவதற்கும், உடனடியாக நிவாரணத்தைப் பெறுவதற்கும் அது கட்டாயம் வாய்ப்பாக இருந்திருக்கும். இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நாளைய தினத்திலாவது இந்தச் சபை ஒருமனதாக தீர்மானத்தை, 'தமிழ்நாடு காக்கப்பட வேண்டும், வறட்சியிலிருந்து தமிழகம் மீட்கப்பட வேண்டும், இதற்கு இந்த நிதியைத் தரவில்லை என்றால் இந்த மாநிலம் கொந்தளிக்கும்' என்று சொல்வதிலே ஒரு தவறும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே மத்திய அரசாங்கத்தை



2003 ஜனவரி 30] [திரு. கே.சி. கருணாகரன்]

வலியுறுத்துகிற அந்த உறுதிபூர்வமான நடவடிக்கைக்கு வர வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்து, அச்சுறுத்துவது குடிநீர்ப் பிரச்சினை. இப்போதே தீவிரமாகி வருகிறது. பல இடங்களில் பிரச்சினை இருக்கிறது. வீராணம் திட்டம் நிறைவேறினால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போல் சென்னையின் குடிநீர்ப் பற்றாக்குறையும் நிவர்த்தி ஆகி பாதி விவசாயமும் பாதிக்கப்படாமல், மேற்கொண்டு 1 டி.எம்.சி. தண்ணீர் கூடுதலாகக் கிடைக்கும் என்கின்ற நிலை வருமானால், உண்மையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதைப் பெருமையோடு அங்கீகரிக்கும். இதைத் தீர்க்க வேண்டும். தமிழ்நாடு பூராவும் மார்ச் மாதம் தொடங்கி ஏப்ரல் மாதம் வரைக்கும் பருவ மழை பொய்த்துவிட்டது என்றால் அதில் வேறுவிதமான குடிநீர்த் தட்டுப்பாடு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சென்ற ஆண்டிலேயே நம்முடைய பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின் மீதும் சரி, எதிர்கால அறிவிப்புத் திட்டத்தின்மீதும் கூட இதை நிவர்த்தி செய்வதற்காக, குளம், குட்டை, ஏரி இவற்றை தூர் எடுத்து ஆழப்படுத்துவது என்ற முறையிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டோம். 1400-க்கும் மேற்பட்ட ஏரி, குளங்களை, குட்டைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று. அந்த நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும். அது தென் மாவட்டங்களில் மட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதும் இதைத் தீவிரப்படுத்துவதும், அதற்கான முறையிலே என்ன சிரமம் வந்தாலும் மாநிலம் முழுவதும் செய்யச் சொல்வது என்பதும் அவசியம். இப்போது மழை நீரைச் சேகரிக்கிறோம். அது எந்த அளவுக்குப் பயன் அளிக்கும் என்பது எதிர்காலத்தில் பார்க்க வேண்டியது. அதில் எவ்வளவு சேமிக்க முடியும். அதனால் எவ்வளவு நெருக்கடியும், கஷ்டமும் தீரும் என்பதை நடைமுறையில் பார்க்க வேண்டும். அதுமட்டும் போதாது. குளம், குட்டை, ஏரி போன்றவற்றை தூர் எடுத்து ஆழப்படுத்தும் வேலையை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்தது, சில விமர்சனங்கள். சில விமர்சனங்கள் கஷ்டமாக இருந்தாலும் விமர்சிக்காமல் இருக்க முடியாது. அதை இங்கே சொல்லாவிட்டாலும் வெளியே பேசத்தான் போகிறோம். பேசிக்கொண்டு இருக்கிறோம். அது என்னவென்று சொன்னால், சென்ற ஆண்டு நடந்த அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டம், அதிலே எல்லோருடனும் சேர்ந்து நீங்களும் எங்களைச் சொன்னீர்கள். வெளியிலே போனபோது அவர்கள் சொன்னார்கள், உங்களால்தானே இவர்களும் வந்துவிட்டார்கள் என்று.

[திரு. கே.சி. கருணாகரன்] [2003 ஜனவரி 30

நண்பர் குமாரதாஸ் இங்கே பேசுகிறபோது சொன்னார். நாம் எல்லாம் சேர்ந்துதானே ஓட்டு வாங்கி வந்தோம் என்று. நாம் எல்லாம் சேர்ந்தது என்பது ஒரு மதச் சார்பற்ற Secular Section என்பதன் பேரில் தமிழ்நாடு முழுவதிலும் மக்க்ளை நாம் நம்ப வைத்தோம். ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக அணி என்பதை உறுதி செய்தோம்.

*பிற்பகல் 1-10*

ஐந்தாண்டு கால தி.மு.க.வினுடைய நடவடிக்கைகளை இங்கே நீங்கள் பேசுகிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமை மாண்புமிகு உறுப்பினர்களே, உங்களை விட கூடுதலாக கடந்த 5 ஆண்டுகளின் ஆட்சிக் காலத்தில் வீதிகளில் இறங்கி தெருவிலே இருந்து கடும் போராட்டத்தை நடத்தியவர்கள் மார்க்சிஸ்டுகள், இடது சாரிக் கட்சிகள். சில விஷயங்களில் உங்களோடு சேர்ந்து நின்றோம். இவ்வாறான அரசியல் சூழ்நிலை வருவதற்கு ஏற்பட்டிருக்கிற அக, புற அரசியல் நிலைகளை ஆய்வு செய்துகொள்ளாமல், திரு. குமாரதாஸ் போன்றவர்கள், வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று வார்த்தைகளை இங்கே பேசுவது தவறாகும். எங்களுக்கெல்லாம் ஒரு பாரம்பரியம் உண்டு. மலிவான அரசியலை மார்க்சிஸ்டுகள் அல்லது கம்யூனிஸ்டுகள் ஒருபோதும் தமிழக மண்ணில் நடத்தியது கிடையாது. இனியும் நடத்தமாட்டோம். ஆண்டிப்பட்டி தேர்தலில் நாங்கள் சரியான நிலையைத்தான் எடுத்தோம். எங்கள் அரசியல் தலைமை தலையிட்டு முதல்வர் அவர்கள் பதவிப் பிரமாணத்தை பாத்திமா பீவி அவர்கள் கவர்னராக இருந்தபோது செய்து வைத்ததை சரி என்று சொன்னவர்கள் நாங்கள். ஆகவே அவர்கள் மீண்டும் தேர்தலிலே நின்று முதல்வராக வர வேண்டுமென்று விரும்பியவர்கள். நடுநிலை எதற்காக வகித்தோம்? எங்களுக்குத் தெரியாதா? அதை நிறுத்தி இருக்க முடியாதா அல்லது யாரையாவது ஆதரித்து இருக்க முடியாதா? அவ்வாறு செய்யவில்லை. ஒரு கொள்கைபூர்வமான முடிவு எடுத்து அதை நிறைவேற்றுகிற நிலையிலே இருந்தோம். சில விஷயங்கள் இங்கே இருக்கும்படியான அரசியல் சூழ்நிலைகளைக் காரணமாக வைத்து ஒரு கட்சி மத்தியில் நிரந்தரமாக இருக்கிறது.

இன்னொன்று. அவர்கள் பேசுகிற பேச்சு என்பது உங்களுக்கே தெரியும். அவர்கள் தெளிவாகவே வெளியிலே பேசுகிறார்கள். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று எப்போதும் எங்களோடு இருக்கும். எங்களுக்கு ஒன்றும் கவலை இல்லை. எங்கே இருந்து வருகிறது அவர்களுக்கு இந்தத் தைரியம்?



2003 ஜனவரி 30] [திரு. கே.சி. கருணாகரன்]

ஆகவே இவையெல்லாம் எங்களைப் போன்றவர்களைப் புண்படுத்துகிறது, சிரமப்படுத்துகிறது என்பதைச் சொல்கிறேன். இந்தப் பிரச்சினையில் மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாதாரக் கொள்கையும், உலக மயம், தனியார் மயம், தாராளமயம் போன்றிருக்கிற இந்த உலகளாவிய நடவடிக்கைகளும் இந்தியாவையும், தமிழ்நாட்டையும் பாதிக்கின்றபோது இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சியும் சரி, இதர பிரச்சினைகளும் சரி, அவற்றிற்கு சம்பந்தம் இருக்கிறது. ஆகவே அவற்றை எதிர்த்து ஈடுபடும் நடவடிக்கைகளில் நாங்கள் யாரோடும் சமரசம் செய்துகொள்ள ஒருபோதும் விரும்பவில்லை; விரும்பமாட்டோம். எங்கள் போராட்டம். அது நிச்சயமாய், தாட்சண்யமற்ற முறையில் தொடரும். அந்த வகையில்தான் எதுவாக இருந்தாலும் ஒரு கொள்கைபூர்வமான நிலையில் நாங்கள் விஷயங்களைப் பார்க்கின்றோம்.

சாலைப் பணியாளர்கள் விஷயத்திலே அவர்கள் என்ன சம்பள உயர்வு கேட்டார்களா? நாங்கள் ஆதரித்தோம். என்ன தப்பு? அவர்கள் என்ன சம்பள உயர்வு கேட்டார்களா? புதிய சலுகைகள் கேட்டார்களா? புதிய நெருக்கடியை சர்க்காருக்கு உருவாக்கினார்களா? இல்லையே! அவர்கள் நீக்கப்பட்டார்கள். ஒருபுறம் வேலையில் நியமிப்பதற்குத் தடை விதிக்கப்படுகிறது. இன்னொரு பக்கம் வேலையில் இருப்பவர்கள் வெளியிலே அனுப்பப்படுகிறார்கள். இன்னொரு பக்கம் வேலை செய்துகொண்டிருக்கிற மில்கள் பூராவையும் பூட்டி அவர்கள் ஒரு பக்கம் வெளியிலே அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலம் எங்கே நம்பிக்கை உள்ளதாக இருக்கும்? எங்கே இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்பு? தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் தமிழகம் முன்னேறவில்லை என்று சொன்னால் எப்படி இது முதன்மை மாநிலமாக இருக்க முடியும்? இவற்றோடு எல்லாம் இணைந்துதான் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் பார்க்கிறோம் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, போக்குவரத்து சம்பந்தமான பிரச்சினையில்கூட கோர்ட் தலையிட்டு இப்போது தடை விதித்திருக்கிறது. இதைச் சொல்கிறபோது அதிகாரப் பொறுப்பில் இருக்கிற பெருமக்கள், அதிகாரி பெருமக்கள் அல்லது அவர்களுக்குத் தலைமை தாங்குகிறவர்கள் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. சில முடிவுகளை எடுத்து நாம் அறிவிக்கின்றபோது, அது எப்படி தவறு என்று எதிர்க்கட்சி சொன்னால் வேறு மாதிரி. ஆனால், கோர்ட் சொல்லி சிலவற்றை நிறுத்துகிறது என்று சொன்னால் நிர்வாக ரீதியில் நாம் எடுக்கும் முடிவில் ஊனம்

இருக்கிறது என்றுதானே அர்த்தம்? நான்கைந்து விஷயங்களை என்னால் சொல்ல முடியும். அது கட்டட வரன்முறைச் சட்டமாக இருக்கலாம்; போக்குவரத்து ஊழியர்கள் பிரச்சினையாக இருக்கலாம்; ஒரு நபருக்கு ஒரு பதவி சம்பந்தமான பிரச்சினையாக இருக்கலாம்; இதர விஷயங்களாக இருக்கலாம். இது எதைக் காட்டுகிறது? நான்கு விஷயங்களில் கோர்ட் தலையிட்டது. இன்னும் பல விஷயங்கள் கோர்ட்டில் நின்று கொண்டிருக்கின்றன. அவ்வாறு இருக்கக்கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். நிர்வாக ரீதியில் ஒரு சரியான முடிவு எடுத்து செய்யப்பட வேண்டும். அப்படிச் சொல்கிறபோது அதிகாரிகள் சொல்வது அனைத்தும் (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புற மக்களுக்கு கிராமப்புறத்திலேயிருந்து வருகின்ற மாணவர்களுக்காக 25 சதவீத இட ஒதுக்கீட்டை நல்ல நோக்கத்தோடு அறிவித்து அமல்படுத்தி வந்தார்கள். ஆனால் அதை உயர் நீதிமன்றம் தடுத்துவிட்டது. இப்போது நம்முடைய அரசு உச்ச நீதிமன்றத்திலே S.L.P. தாக்கல் செய்து, அதற்காக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். அரசினுடைய நடவடிக்கைகள் சரியில்லை என்பதாலே கோர்ட் நமக்கு உத்தரவிடுகிறது என்று சொல்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த உத்தரவை வரவேற்கிறாரா? இது சரி என்று ஏற்றுக் கொள்கிறாரா? எனவே இந்த நடவடிக்கைகளை நீங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். நீதிமன்ற உத்தரவுகள் அத்தனையுமே அரசின் நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகள் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து.

*பிற்பகல் 1-15*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் கருத்தில் எனக்கு உடன்பாடு உண்டு. எங்கள் கட்சிக்கும் உடன்பாடு உண்டு. நீதித் துறையில் வழங்குகிற எல்லாத் தீர்ப்புகளுமே நியாயமானது, சரியானது என்று நாங்கள் கருதியது கிடையாது. இதே சட்டமன்றத்தில் நீதித் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது, சில நீதிபதிகள் அரசியல் பேசுகிறார்கள் என்று நாம் பேசியிருக்கிறோம். நீதிபதிகள் அரசியல் பேசுகிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, சில கட்சிகளுக்கு அறிவுரைகள் கூறுபவர்களாகவும் மாறுகிறார்கள். மதச்சார்பற்ற, சாதி, சமயமற்றவர்களாக,



அரசியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர்களாகக் கடமையாற்ற வேண்டிய நீதிபதிகள் அவ்வாறு இல்லை என்பதை நாம் அறிவோம். நீங்கள் சொன்னது Correct. ஆனால் சில விஷயங்களில் அவர்களின் தலையீடு என்பது சங்கடங்களை ஏற்படுத்துகின்றன. உங்களுடைய முடிவுகளுக்கு சங்கடங்களை உருவாக்குகின்றன என்பதை நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுக்கின்ற சில முடிவுகளில் நீதித் துறையின் தலையீடுகளால் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நீதித் துறை தலையிடுவதாலேயே அல்லது நீதிமன்றம் தடையாணை பிறப்பிப்பதாலேயே அரசு எடுக்கின்ற முடிவுகள் தவறானவை என்று கூறிவிட முடியாது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இப்போது ஒப்புக்கொண்டார். நீதித் துறை தலையிட்டு தடையாணை வழங்குவதாலோ, இரத்து செய்வதாலோ அரசு எடுக்கின்ற முடிவுகள் ஊனமடைந்துள்ளன அல்லது அரசு எடுத்துள்ள முடிவுகளில் குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்ல முடியாது. இத்தகைய சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னால், அதற்குக் காரணம், நம்முடைய மாநிலத்தில் நிலவுகின்ற ஆரோக்கியமற்ற அரசியல் சூழ்நிலைதான். எதிர்க் கட்சிகள்தான் இதற்குக் காரணம் என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே எத்தகைய முடிவுகளை, கொள்கை முடிவுகளை எடுத்திருக்கிறோமோ, எத்தகைய திட்டங்களை அறிவித்திருக்கிறோமோ, அதேவிதமான கொள்கை முடிவுகளையும் அதேவிதமான திட்டங்களையும் ஏற்கெனவே அண்டை மாநிலங்களும் அறிவித்து செயல்படுத்தி வருகின்றன. Bus route privatisation என்பது ஏற்கெனவே ஆந்திர மாநிலத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கெல்லாம் ஓரளவிற்கு அரசியல் சற்று நாகரிகத்தோடும், நியாய உணர்வோடும் நடைபெறுகிறது. எடுத்ததற்கெல்லாம் அங்கே எதிர்க் கட்சிகள் கோர்ட்டுக்குச் சென்று Public Interest Litigation போடுவதில்லை. ரிட் போடுவதில்லை. அரசாங்கத்தின் நிருவாகத்தையே ஸ்தம்பிக்கச் செய்ய முயற்சிக்கவில்லை. அதனால்தான் இத்தகைய புரட்சிகரமான முடிவுகளை எடுத்து வெற்றிகரமாக ஆந்திர மாநிலத்திலும், கர்நாடக மாநிலத்திலும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நடைமுறையை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஜனவரி 30

இங்கே கொண்டுவரவேண்டுமென்று நாங்கள் முயற்சி செய்கின்றபோது, யாரோ ஒருவர் தூண்டிவிட்டு வேண்டுமென்றே கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். தடையாணை வாங்குகிறார்கள். ஆகவே குறை எதிர்க் கட்சிகளிடம்தான் இருக்கிறதே தவிர, அவர்களுடைய பார்வையில் இருக்கிறதே தவிர, அவர்களுடைய மனப்பான்மையின் கண்ணோட்டத்தில் இருக்கிறதே தவிர, இந்த அரசிடம் எந்தக் குறையும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளெல்லாம் பிரச்சினைகளுக்கு அவ்வாறு கோர்ட்டுக்குப் போகிறார்கள், போவார்கள், அதனால்தான் இந்த நிலைமை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எதிர்க்கட்சிகள் போகத்தான் செய்வார்கள். நான் வைத்த கருத்து, நீதிமன்றம் இதன்மீது நியாயத்தை வழங்குகின்றபோது சரியான முறையில் நம்முடைய தரப்பில், அரசுத் தரப்பில் சரியாக இருக்குமானால், நீதிமன்றம் ஏன் தடையாணை தருகிறது, ஏன் எதிர்க் கட்சிகள் சொல்வதைக் கேட்கிறது?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நீதிமன்றங்களானாலும், நீதிபதிகளாக இருப்பவர்கள் மனிதர்கள்தான். அவர்களும் தவறு செய்யக்கூடியவர்கள்தான். தவறான முடிவுகளை அறிவிக்கக்கூடியவர்கள்தான். இதற்கு மேல் இங்கே சொல்வது பொருத்தமாக இருக்காது என்று கருதுவதால், இதோடு நிறுத்திக்கொள்கிறேன். நீங்களே புரிந்துகொள்ள வேண்டும்.

*பிற்பகல் 1-20*

**திரு. கே.சி. கருணாகரன்:** அடுத்து போக்குவரத்துத் துறையிலே ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகள் சம்பந்தமாக நான் முழுவதுமாக விவாதத்திற்கு வாவில்லை. ஆனால் சென்ற ஆண்டிலே சொல்லப்பட்டது. இப்போது இந்த அறிக்கையிலே ஒன்றும் இல்லை. அவ்வாறு அது ஆக்கப்பட்டால், அதனால் ஏற்படுகிற இடர்ப்பாடுகளும், பிரச்சினைகளும் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஜனங்களைப் பாதிக்கும். நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலையை முழுவதுமாக ஆய்வு செய்யாமல் நாம் பொத்தாம் பொதுவாக சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பதுதான். மூவாயிரம் கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பட்ட அந்தத் துறை இன்று 30 ஆயிரம், 40 ஆயிரம் கோடி ரூபாய் என்ற நிலையிலே பெருமளவு



2003 ஜனவரி 30] [திரு. கே.சி. கருணாகரன்]

வளர்ச்சி பெற்றிருக்கிறது. 34 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன்பெற்றுக் கொண்டிருக்கிற அந்தத் துறையில் முதியவர்களும், ஊனமுற்றவர்களும், வேறுவிதமான தியாகிகளும் பயன்பெற்று வருகிற போக்குவரத்துத் துறையைத் தனியார்மயமாக்குவது என்ற நிலைமை வந்தால் அது கடும் விளைவுகளை தமிழ்நாட்டிலே நிச்சயமாக ஏற்படுத்தும். அவ்வாறான முடிவு, முயற்சி இருந்தாலும்கூட, அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான். அதே மாதிரி ஊட்டச் சத்துப் பணியாளர்கள்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ30 ஆயிரம் கோடிக்கு மேல் சொத்து இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். உண்மை நிலை அது அல்ல. 31-3-2002 அளவிலே இழப்பு மட்டும் 2160 கோடி ரூபாய்க்கு இருக்கிறது. அரசு பங்குத் தொகையாகக் கொடுத்த பணம் 839 கோடி ரூபாய். அதுவும் செலவழிக்கப்பட்டு விட்டது. அதோடு அல்லாமல் 1390 கோடி ரூபாய் வெளியிலே வாங்கிய கடனைக் கட்ட முடியாத நிலையிலே தத்தளித்துக்கொண்டிருக்கிறது. T.D.F.C.-Transport Development Finance Corporation-ல் வாங்கிய கடனையும் திருப்பிக் கட்டமுடியாத காரணத்தால் திரும்பக் கடன் வாங்கி பழைய பழுதடைந்த பேருந்துகளை எல்லாம் மாற்றுவதற்கு முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. எனவே அரசுப் பேருந்துகளில் பயணம் செய்வது என்றாலே மக்களுக்கு அச்சம் என்ற நிலை. அந்த அளவுக்குப் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. இந்த நிலை தொடருமேயானால் எப்படி மக்களுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துக் கழகங்கள் நல்ல பலனை அளிக்கமுடியும்? இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** போக்குவரத்தை இலாபகரமாக இயக்குவதற்கு சில ஆலோசனைகளை அரசுக்குக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், சீரமைப்பு நடவடிக்கைகளை, சிக்கன நடவடிக்கைகளை அரசுத் துறையிலே மேற்கொள்கிறபோது இந்த மாதிரியான பொதுத் துறைகளிலும் அப்படிப்பட்ட சிக்கன சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க அளவிலான பாதிப்பிலிருந்து காப்பாற்றமுடியும். போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் அரசுக்கும் அதனுடைய முழு

[திரு. கே.சி. கருணாகரன்] [2003 ஜனவரி 30

விவரங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். இத்தனை கழகங்கள் என்று தனித்தனியாக பிரிக்கப்பட்டு அதற்கு ஏற்படுகிற கூடுதல் செலவு ஒரே கழகமாக ஆக்கப்படுவதன் மூலமாக பல இலட்சக்கணக்கான ரூபாயை மாதம் ஒன்றுக்கு சேமிக்க முடியும். நஷ்டத்தைக் குறைக்க முடியும் என்ற நிலையெல்லாம் இருக்கிறது. அதற்கு நாம் பின்னால் செல்லலாம். ஆனால் இந்தத் தனியார்மயம் என்ற நடவடிக்கையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அது கூடாது என்று சொல்கிறோம்.

அடுத்து, நேற்றையதினம் நடந்திருக்கக்கூடிய விவாதத்திலேகூட தஞ்சையில் நடந்திருக்கக்கூடிய சாவுகள்பற்றி இங்கே சொல்லி, விவாதங்கள் நடந்திருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னேன். அதை எந்த ரகத்திலே வைத்துக் கொண்டாலும் சரி, பட்டினி என்று வைத்துக் கொண்டாலும் சரி, தற்கொலை என்று வைத்துக் கொண்டாலும் சரி அல்லது தானாகவே செத்துவிட்டார்கள் என்று சொன்னாலும் சரி. சாவுக்கு இப்போது பெரிய ஆராய்ச்சி பண்ணிக்கொண்டு விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத்தான் நாம் பார்க்கிறோம். அந்த மாதிரி பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. உண்மையில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த 13 குடும்பங்களை—நான் ஏற்கெனவே சொன்னமாதிரி சாகிற எல்லோருக்கும் நிவாரணம் கொடுப்பதில்லை. கார் விபத்து நடக்கிறது, பஸ் விபத்து நடக்கிறது; தினசரி சில சாவுகள் நடக்கின்றன. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஐம்பது, ஐம்பது ஆயிரம் வழங்குவதற்காக தினமும் அறிவிப்பு வந்து கொண்டிருக்கிறது. அந்த மாதிரியாவது இந்த 13 பேரைக் கணக்கெடுத்துக்கொள்ளக்கூடாதா? ஏதாவது ஒரு நியாயம் வழங்க வேண்டாமா ? கட்டாயம் அதைச் செய்ய வேண்டுமென்று நான் மீண்டும், மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அதை ஆய்வு செய்ய வேண்டும். எங்கள் கட்சி இதை ஏற்கெனவே வலியுறுத்தியிருக்கிறது. உண்மை நிலையைக் கண்டறிய அனைத்துக் கட்சிகளுடைய குழுவை ஆய்வுக்காக அனுப்புங்கள். என்ன நடக்கிறது என்பதை நாம் கண்டுபிடிக்கலாம். யதார்த்த ரீதியிலான தீர்வை நாம் காணலாம் என்று நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

அதே மாதிரிதான் தரிசு நில மேம்பாடு சம்பந்தமாக, குறிப்பிட்ட 3 முக்கியமான கொள்கை இதிலே சொல்லப்படுகிறது. நாங்கள் என்ன சொன்னபோதிலும், முதல்வர் அவர்கள்—நாங்கள் என்ன சொன்னாலும்- திரும்பத் திரும்ப நீங்கள் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்கள் சொல்வார்கள். நாங்கள் என்ன சொன்னாலும் அதை



2003 ஜனவரி 30] [திரு. கே.சி. கருணாகரன்]

நீங்கள் புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறீர்கள் என்ற கவலை எங்களுக்கு இருக்கிறது. நிலச் சீர்திருத்தக் கோட்பாடு, தரிசு நில மேம்பாடு மூலமாக தகர்க்கப்படும் அபாயம் இருக்கிறது என்பதை இப்போது நாங்கள் சொல்கிறோம். நடைமுறையில் எதிர்காலத்தில் 10 ஆண்டுகளுக்குப் பிறகாவது இந்த உண்மையை தமிழ்நாடு புரிந்து கொள்ளும். மீண்டும் ஒரு பழைய அடிமை ஆதிக்க நடைமுறை தமிழ்நாட்டில் வரக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம். சென்ற முறை சொல்கிறபோது—30 சதவீதம், 70 சதவீதம், 2 ஏக்கர், 5 ஏக்கர் இருக்கிறவர்களிடம் இருக்கிறது—30% மட்டும்தான் நாங்கள் பிரைவேட்-அதாவது தனியாருக்குக் கொடுக்கப் போகிறோம் என்றீர்கள். அம்பானி வகையறா கையிலும், டி.வி.எஸ். வகையறா கையிலும்...

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏறத்தாழ அரைமணி நேரம் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் முடித்து விடுகிறேன். என்னோடு முடியுங்கள் இன்று சபையை, 5 நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையே வழக்கமாக ஆக்கிவிடக்கூடாது.

**திரு. கே.சி. கருணாகரன்:** மீண்டும் அந்த மாதிரியான ஒரு நிலைமை, ஆதிக்க நிலைமை தமிழ்நாட்டில் வந்துவிடக்கூடாது. அதனால் அதை ஆய்வு செய்யவேண்டும். நிலமற்றவர்களுக்குத்தான் அது கொடுக்கப்பட வேண்டும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கைவிடப்பட்டு யூனியனுக்கு ஒரு தொழிற்சாலை தொடங்குவது என்பது அறிவிப்பு ரீதியில்தான் இருக்கிறது. அதேமாதிரி தரிசுநில மேம்பாட்டு நடவடிக்கை என்பதும் இத்தனை வந்திருக்கிறது, இத்தனை கணக்கில் இருக்கிறது, இத்தனை செயற்குறிப்பில் இருக்கிறது என்று தகவலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நடைமுறையில் என்ன கிடைக்கும்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடல் வற்றி கருவாடு தின்னலாம் என்று குடல் வற்றிப் போனதாம் கொக்கு" என்று ஒரு பழமொழி உண்டு. அந்த நிலை வந்துவிடக்கூடாது தமிழ்நாட்டு மக்களுக்கு. ஆகவே அந்த அறிவிப்பில் சொல்லப்பட்டிருப்பதில் பலவற்றை மாற்றி அடுத்து வரும் பட்ஜெட் கூட்டத்திலாவது ஆக்கபூர்வமான சிலவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர அரசு முன்வர வேண்டும்.

தரிசுநில மேம்பாட்டை பொறுத்தவரையில் அந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். நிலமற்றவர்களுக்கு அது வழங்கப்படவேண்டும். ஏழைகளுக்கு, மற்றவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறோம்.

அதேமாதிரி இலவச மின்சாரம் சம்பந்தமாக அனைத்து விவசாயச் சங்கங்களும் முடிவு செய்துவிட்டன. அனைத்துக் கட்சிகளும் பல நடவடிக்கைகள் எடுத்தன. எங்களைப் பொறுத்தவரையில் அது தொடரவேண்டும் என்பதுதான். அதிலே இந்த ஆணையம் சம்பந்தப்பட்டிருக்கிறது, மத்திய ஆணையம், மின்சார ஒருங்கிணைப்பு ஆணையம், ஒரு மசோதாவை மத்திய அரசு கொண்டுவர இருக்கிறது. அந்த மசோதாவைக் கொண்டுவரக் கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக சேர்ந்து நிற்கத் தயார். மற்றவர்களும் அதில் சேர்ந்து நிற்கவேண்டும். அ.இ.அ.தி.மு.க.—வும் உறுதியாக இருக்கவேண்டும். அந்த மசோதா தடுக்கப்படவேண்டும். இலவச மின்சாரம் இரத்து செய்யப்படுவதன் மூலமாக தமிழ்நாட்டு விவசாயிகள் மேலும் பல சுமைகளைக் கூடுதலாகச் சுமப்பதற்குக் காரணமாக அமைந்துவிடக்கூடாது. கடைசியாக இந்த ஆளுநர் அவர்களுடைய அறிக்கையிலே மேம்போக்கான ஜால ரீதியிலான வார்த்தைப் பிரவாகங்கள் அதிகமாக இருக்கிறதே தவிர, நடைமுறையில் தமிழ்நாட்டு மக்களை பாதிக்கிற எந்தப் பிரச்சினை பற்றியும் இதிலே இல்லை. மூடிய ஆலைகளைப்பற்றி, வேலையிழந்த தொழிலாளர்கள் பற்றி, புதிய கொத்தடிமை முறையிலே உருவாகி வருகிற நவீன தொழில் கொள்கைபற்றி, இலவச வேட்டி, சேலை இரத்துபற்றி, இலவச மின்சாரம் இரத்துபற்றி, இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை நான் மிகுந்த கவலையோடும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலையோடும் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்லி, நாங்கள் எதிர்பார்த்த மாற்றத்திற்குப் பதிலாக ஏமாற்றத்தையே தந்திருக்கிறது என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.





**திரு. கே.என். இலட்சுமணன் :** அரசுக்கு ஒரு அவசர வேண்டுகோள் தளி தொகுதியிலே காடுகள் நிறைந்த இடத்திலே குடிநீர்ப் பிரச்சினையினால் அங்கே இருக்கிற வன விலங்குகள் குறிப்பாக, யானைகள் எல்லாம் தளி தொகுதிக்கு, நகரத்திற்கு, கிராமத்திற்கு வந்து தாக்கி இருக்கின்றன. 7 பேர் யானை மிதித்துச் செத்திருக்கிறார்கள். மூன்று பேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். தமிழக அரசுக்குப் பணிவான வேண்டுகோள். அந்த 7 பேர் குடும்பங்களுக்கும் ரூ. 5 இலட்சம் வீதம் நிதி உதவி செய்ய வேண்டும் என்றும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன், உங்கள் அரசு தான் பணக்கார அரசு; நாங்கள் ஏழைகள். இது ஏழை அரசு பாவம்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** இருந்தாலும் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை. ஆவன செய்வார்கள் என நினைக்கிறேன். மீண்டும் ஒரே ஒரு அரை நிமிடம். அமைதியாக இப்போது எவ்வளவு அழகாக நடந்துகொண்டிருக்கிறது சட்டமன்றம். காரணம் உங்களுக்குத் தெரியும். பாராளுமன்றத்திலேகூட இதே மாதிரிதான். காங்கிரஸ்காரர்கள் ஒரு நாளாவது அமைதியாக நடக்க விடமாட்டார்கள். வெளியேறினால் பயப்படாதீர்கள். அமைதியாக நடத்துவதற்கு அது வழி வகுக்கும். டாக்டர் குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள், சாத்தான்குளத்திற்கு வாருங்கள் என்று. அதனால்தான் போய்க்கொண்டே இருக்கிறார்களோ என்று நமக்குத் தெரியவில்லை. குளத்திலே ஒரு வேளை தாமரை மலர்ந்தால் அது இயற்கை. குளத்திலே இலை இருந்தால் அது இயற்கை. ஆனால் குளத்திலே கை தெரிந்தால் (சிரிப்பு) என்ன அர்த்தம்? யாரோ மூழ்கிக்கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். (சிரிப்பு) அதனால் சகக் கட்சிக்காரர்களுக்குக் கை கொடுக்கப் போய்விடாதீர்கள். நீங்களும் மூழ்கிவிடுவீர்கள் (சிரிப்பு). நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-1-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

[2003 ஜனவரி 30

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*23. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் [கும்பகோணம் கோட்டம்-1) முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*24. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-2) பதினேழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).*

*25. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-3) இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*26. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-4) ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*27. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-2) இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது], (தமிழ், ஆங்கிலம்)*

*28. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-3) பத்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*29. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*



2003 ஜனவரி 30]

*30. 2001-2002ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*17. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச்செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடைசெய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கை. (தொகுப்பு-I மற்றும் II).*

*18. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தி ஐந்தாவது அறிக்கை (2001-2003).*

*19. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தி ஆறாவது அறிக்கை (2001-2003).*

*20. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தி ஏழாவது அறிக்கை (2001-2003).*

*21 பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தி எட்டாவது அறிக்கை (2001-2003).*

*22. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தி ஒன்பதாவது அறிக்கை (2001-2003).*

*23. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை (2001-2003).*

*24. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

*25. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

*26. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

225509